விலை: ரூபா 20 பக்கங்கள் 32

# உதயன்




சுடர் 31 கதிர் 013 வள்ளுவர் ஆண்டு 2046 கார்த்திகை 23, புதன்கிழமை 09.12.2015



காணாமற்போனோர் தொடர்பில் உள்ளக விசாரணை வேண்டாம் என்றும், சர்வதேச விசாரணையை வலியுறுத்தியும் யாழ்ப்பாணத்தில் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டமொன்று இடம்பெற்றது. யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் கலந்துரையாடலொன்று இடம்பெற்றதையடுத்து. இந்த கவனவீர்ப்புப் போராட்டம் நடைபெற்றது. தமது உறவுகளைக் கண்டுபிடித்துத் தருமாறு காணாமற்போனோரின் உறவினர்கள் கண்ணீர் மல்கக் கோரிக்கை விடுத்தனர். (த-21)

(விரிவு 2 ஆம் பக்கம்)

# பயங்கரவாதிகளாக தமிழரை பார்க்காதீர்

## புதியதொரு ஆரம்பம் அவசியம் என்கிறார் சபை முதல்வர் லக்ஸ்மன் கிரியெல்ல

கொழும்பு, டிசெம்பர் 9

சர்வதேச பொலிஸார் (இன்ரபோல்) மற்றும் புலனாய்வுப் பிரிவிடம் இருந்து அறிக்கை பெறப்பட்ட பின்னரே புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மீதான தடை நீக்கம் மேற்கொள்ளப்பட்டது. எனவே, இந்த விடயத்தை இனவாதக் கோணத்தில் பார்க்கக்கூடாது. அத்துடன் எல்லாத் தமிழர்களும் பயங்கரவாதிகள் அல்லர் என்று இடித்துரைத்தார், சபை முதல்வரும்

பக். 30

"வெளிநாட்டிலிருந்து வரும் தமிழர்கள் வடக்குக்குச் செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டது. பெற்றோரைப் பார்க்க வந்தவர்கள் கூட, திரும்பிச் செல்லும் நிலை ஏற்பட்டது. ஆட்சி மாற்றத்தின் பின்னர் இந்த நிலைமையை நாம் மாற்றியுள்ளோம்."



## எமக்கெனச் சொந்தமாக உள்ளது ஓர் இராசதானி

### சர்வதேச நகரத் திட்டமிடல் தின நிகழ்வில் யாழ். உதவி அரச அதிபர் சுதர்சன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.9

போரால் பாதிக்கப்பட்டோம் என்று சொல்லிக் கொண்டிருப்பதை விடுத்து, நாங்கள் ஓர் இராசதானியைச் சொந்தமாக வைத்திருந்தவர்கள் என்பதை நினைவில் கொண்டு மீண்டெழ வேண்டும் என்று தெரிவித்தார் யாழ்.மாவட்ட உதவி அரச அதிபர் சாம்பசிவம் சுதர்சன்.

யாழ்.நகர்திட்டமிடப்படாத

பக். 30

முச்சந்தி முரளி



காலம் கடந்த ஞானம் பாருங்கோ...

## அரசியல் கைதி யாழ்.சிறையில் உணவு தவிர்ப்பு

யாழ்ப்பாணம், டிசெ.9

யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதி ஒருவர் நேற்றுமுன்தினம் தொடக்கம் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனக்கு எதிரான வழக்கின் விசாரணைக்கு குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரி நீதிமன்றில் சமுகமளிக்கவில்லை. அதனால் தனது வழக்கு ஒத்தி

பக். 30

## காணி, பொலிஸ் அதிகாரம் மாகாணங்களுக்கு அவசியம்

### சபையில் வலியுறுத்தியது கூட்டமைப்பு

கொழும்பு டிசெ.9

மாகாண சபைகளுக்குக் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டுமெனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றில் வலியுறுத்தியுள்ளது.

13ஆவது திருத்தச் சட்டத்தை அரசு முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டுமெனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

பக். 30

# கிளிநொச்சியில் கொட்டும் மழை

## 8000 பேர் வெள்ளத்தால் பாதிப்பு



கிளிநொச்சி, டிசெ.9

நேற்றுக் காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணிநேரத்தில், இலங்கையிலேயே அதிக மழைவீழ்ச்சி கிளிநொச்சியில் பதிவாகியுள்ளதாக, வளிமண்டலவியல் திணைக்களம் சுட்டிக் காட்டியுள்ளது.

இந்த நிலையில் கிளிநொச்சியில் இந்த வருடம் மூன்றாவது தடவையாக நேற்றும்

பக். 30

## பொலிஸ் அதிகாரி உள்ளிட்ட மூவரை பரு. நீதிமன்றில் முற்படுத்த உத்தரவு

### மணற்காட்டுப் பகுதியில் புதையல் தோண்டிய குற்றச்சாட்டில்

கரணவாய்,டிசெ.9

மணற்காட்டுப் பகுதியில் புதையல் தோண்டிய குற்றச்சாட்டில் தேடப்பட்டு வரும் சந்தேக நபர்களை உடனடியாகக் கைதுசெய்து நீதிமன்றில் முற்படுத்துமாறு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய பொலிஸ் அதிகாரி, பெரும்

பக். 30

## கொழும்பிலும் மழை இயல்பு நிலை பாதிப்பு

கொழும்பு, டிசெ.9

நாட்டில் நீடிக்கும் சீரற்ற கால நிலையால் தலைநகர் கொழும்பிலும் அதன் பலபாகங்களிலும் கடும் மழை பொழிகிறது.

இதனால் அங்கு வாழும் பொது மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக தலைநகரில் பெய்துவரும் மழையால் போக்குவரத்துப் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் வளிமண்டலத் திணைக்களத்தினர் காலநிலை தொடர்பிலான அறிக்கையை விடுத்துள்ளனர். அடுத்து வரும் 36 மணித்தியாலத்திற்குள் இடியுடன் கூடிய மழை பெய்யுமென வளி

பக். 30

## விடுவிக்கப்பட்ட இருவர் மீண்டும் விசாரணைக்கு

### அழைத்துள்ளனர் பொலிஸார்

கொழும்பு, டிசெ. 9

புனர்வாழ்வு பெற்று சமூகத்துடன் இணைந்த ஒருவரையும், நீதிமன்றினால் விடுவிக்கப்பட்ட மற்றொருவரையும் மீளவும் விசாரணைக்கு வருமாறு பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் அழைத்துள்ளனர்.

இதனால் அவர்கள் மீண்டும் அச்சமான நிலையை எதிர்கொண்டுள்ளதாகத்

பக். 30




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா. பரிந்துரையை உதாசீனப்படுத்தாதே

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் நேற்று ஆர்ப்பாட்டம்
## பரணகம ஆணைக்குழு அமர்வைப் புறக்கணிக்கவும் தீர்மானம்

யாழ்ப்பாணம், டிசெ. 9
காணாமற் போனோர் குறித்து விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று யாழ்.நகரில் ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஐ.நாவின் பரிந்துரைகளை உதாசீனம் செய்து, இலங்கை ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணைகளைத் தொடர்ந்தும் முன்னெடுக்கின்றது என்று குற்றஞ்சாட்டினர்.

சர்வதேச மனித உரிமைகள் தினம் நாளை வியாழக்கிழமை கடைப்பிடிக்கப்படுகின்றது. அதை முன்னிட்டு வடக்கு, கிழக்கு மாகாணங்களின் 8 மாவட்டங்களைச் சேர்ந்த காணாமற் போனோரின் உறவினர்களால் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் கலந்துரையாடல் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதன் முடிவில் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

பரணகம ஆணைக்குழுவை நாம் நம்பவில்லை. எமக்கு நிரந்தர தீர்வு தரக்கூடிய பொறிமுறை தேவை. இந்த ஆணைக்குழுவின் அறிக்கையை மூலையில் போட்டுவிட்டு எமக்கு ஐம்பதாயிரமோ அல்லது ஒரு லட்சம் ரூபா பணமோ கொடுக்கப் போகிறார்கள் எமக்கு அது தேவையில்லை. எமது உறவுகளைத் திருப்பித் தர வேண்டும் என்று கலந்துரையாடலில் கலந்து கொண்டவர்கள் தெரிவித்தனர்.

பரணகம ஆணைக்குழுவைக் கலைத்து புதிய நம்பகமான பொறிமுறை ஒன்றை உருவாக்குமாறு ஐ.நா. பரிந்துரைத்திருந்தது. இந்த ஆணைக்குழு மீது எவருக்கும் நம்பிக்கை இல்லை என்பதையும் குறிப்பிட்டுக் காட்டியிருந்தது. ஆனால் அரசு தொடர்ந்தும் பரணகம ஆணைக்குழுவின் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது என்றும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

எமக்கு காணாமற்போனோர் குறித்து விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழு மீது

> பரணகம ஆணைக்குழுவைக் கலைத்து புதிய நம்பகமான பொறிமுறை ஒன்றை உருவாக்குமாறு ஐ.நா. பரிந்துரைத்திருந்தது. ஆனால் அரசு தொடர்ந்தும் பரணகம ஆணைக் குழுவின் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது

நம்பிக்கை இல்லை. எதிர்வரும் 11ஆம் திகதி யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ள விசாரணை அமர்வுகளை ஒட்டுமொத்தமாகப் புறக்கணிக்கத் தீர்மானித்துள்ளோம் என்றும் அவர்கள் குறிப்பிட்டனர்.

பரணகம குழுவின் முன்னிலையில் இதுவரை 2 ஆயிரம் பேர் வரையில் சாட்சியம் பதிவு செய்துள்ளோம். எனினும் காணாமற் போனோர்களில் ஒருவர் பற்றிக் கூட இதுவரை முன்னேற்றம் இல்லை என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

எதிர்வரும் 11ஆம் திகதி அமர்வு நடைபெறும் சமயம் யாழ்.மாவட்ட செயலகத்துக்கு வெளியே ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தத் தீர்மானித்துள்ளோம் என்றும், இறக்கும் வரையான உணவு தவிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பிக்க உள்ளோம் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களான நாங்கள் குரல் கொடுத்து இதுவரையில் பதில் காண முடியாத நிலையில் அனைத்துத் தமிழ் மக்களும் குரல் கொடுக்க முன்வர வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர். தமது உறவுகளைத் தேடுவதற்கு அனைவருக்கும் உரிமை இருக்கின்றது என்றும் குறிப்பிட்டனர்.

கலந்துரையாடலின் முடிவில் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தின் முன்பாக கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. காணாமல் ஆக்கப்பட்டோரைக் கண்டறிந்து தருமாறும், அரசியல் கைதிகளை நிபந்தனை இன்றி விடுவிக்க வேண்டும் என்றும் ஆர்ப்பாட்டத்தின்போது வலியுறுத்தப்பட்டது. ஆர்ப்பாட்டத்தில் சுமார் 100க்கும் அதிகமானவர்கள் இணைந்திருந்தனர்.

(ற-106)

## துவிச்சக்கர வண்டி திருடியவருக்கு ஒத்திவைத்த கடூழியச் சிறை

கரணவாய், டிசெ. 9
துவிச்சக்கரவண்டியைத் திருடிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட நபருக்கு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றம் 5 வருடங்களுக்கு ஒத்திவைத்த ஒருவருட கடூழியச்சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

குடத்தனை மேற்குப் பகுதியைச் சேர்ந்த தம்பையா -நாகேந்திரன் என்பவருக்குச் சொந்தமான துவிச்சக்கர வண்டியைத் திருடினார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட நபருக்கு எதிரான வழக்கு விசாரணைகள் நேற்று பருத்தித்துறை நீதிவான் மா.கணேசராசா முன்னிலையில் விளக்கத்துக்கு எடுக்கப்பட்டது.

இதன்போது, சந்தேகநபர் குற்றத்தை ஒப்புக்கொண்டதனை அடுத்து, அவருக்கு ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைத்த ஒரு வருட கடூழியச் சிறைத் தண்டனை விதித்த நீதிவான், துவிச்சக்கர வண்டியை உரிமையாளரிடம் ஒப்படைக்குமாறும் தீர்ப்பு வழங்கினார்.

இதேவேளை, பருத்தித்துறைப் பகுதியைச் சேர்ந்த பு.சிவராஜ் என்பவருக்கு படுகாயம் ஏற்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட நபருக்கு ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைத்த 6 மாதகடூழியச்சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்த பருத்தித்துறை நீதிவான், பாதிக்கப்பட்ட நபருக்கு 60 ஆயிரம் ரூபாவை இழப்பீடாக வழங்குமாறும் நேற்று உத்தரவிட்டார். (வ-108)

## கிளிநொச்சியில் பெய்த பெருமழையால் திண்டாடிய சாதாரண தர மாணவர்கள்



கிளிநொச்சி, டிசெ.9
கிளிநொச்சி மாவட்டத்தில் பெய்து வரும் கனமழை காரணமாக நேற்று கல்வி பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்குச் சென்ற மாணவர்கள் பலர் பெரும் அசௌகரியங்களை எதிர் நோக்கியுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்கு 3 ஆயிரத்து 261 பாடசாலை பரீட்சார்த்திகளும், 2 ஆயிரத்து 286 தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் தோற்றுகின்றனர். அத்துடன் 10 பரீட்சை இணைப்பு அலுவலகங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

குறித்த பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் நேற்றுத் தொடர்ச்சியாக பெய்த கடும் மழையில் நனைந்தபடியும், ஈர உடைகளுடனும் பரீட்சை நிலையங்களுக்கு சென்று பரீட்சைக்கு தோற்றியுள்ளனர்.

பரீட்சை நிலையங்களுக்கு நேற்றுக் காலை முதல் நேரடியாகச் சென்ற கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் பரீட்சை நிலையங்களின் நிலைமைகளை பார்வையிட்டுள்ளார். இருளான பரீட்சை நிலையங்களின் நிலைமைகளைத் தவிர்க்கும் வகையில் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளார். மின்சார வசதி இல்லாத கிளிநொச்சி வன்னேரிக்குளம் மகா வித்தியாலயத்துக்கு மின் பிறப்பாக்கி மூலம் மின்சார வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருந்தது.



இதேவேளை கடும் மழை காரணமாக பூநகரி கல்விக்கோட்டத்தின் முழங்காவில் மற்றும் ஜெயபுரம் பிரதேசங்களுக்கான பரீட்சை வினாத்தாள்கள் மாங்குளம், மல்லாவி, வெள்ளாங்குளம் ஊடாக பல கிலோ மீற்றர் சுற்றியே எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. பூநகரி மன்னார் ஏ-35 வீதியில் மண்டக்கல்லாறு பெருக்கெடுத்துப் பாய்வதாலும், முறிகண்டி முழங்காவில் வீதியில் அக்கராயன் பகுதியில் வீதியைக் குறுக்கறுத்து வெள்ளம் பாய்வதாலும் குறித்த மாற்று வழி பயன்படுத்தப்படுகின்றது.

(ற-21)

## காணிப்பதிவு உத்தியோகத்தர் இடமாற்றத்துக்கு ஆட்சேபனை

கல்முனை காணிப்பதிவு அலுவலகத்தில் கடமையாற்றும் முகாமைத்துவ அனுபவமுள்ள பல உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ள இடமாற்ற உத்தரவு குறித்து, கிழக்கு மாகாண பிரசித்த நொத்தாரிஸ்மார் சங்கம் அதிருப்தியையும், ஆட்சேபனையையும் தெரிவித்துள்ளது.

குறிப்பாக இந்த அலுவலகத்தில் கடமையாற்றும் முகாமைத்துவ அனுபவமிக்க ஆறு உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ள (ஜனவரி முதல்) இடமாற்ற உத்தரவை மீள் பரிசீலனை செய்யுமாறு சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

கிழக்கில் அம்பாறை, கல்முனை, மட்டக்களப்பு, திருகோணமலை என நான்கு காணிப்பதிவு அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. இதில் கல்முனை காணிப்பதிவு அலுவலகம் 90க்கும் மேற்பட்ட பிரசித்த நொத்தாரிசுகளையும், 10க்கும் மேற்பட்ட பிரதேச செயலாளர் காரியாலயங்களையும், நான்கு நீதிமன்றப் பிரிவுகளையும் உள்ளடக்கியுள்ளது.

இந்த நிலையில், இந்தக் கடமைகளைச் சிறப்பாகவும், நேர்மையாகவும் செய்துவரும் அனுபவமுள்ள ஆறு முகாமைத்துவ உத்தியோகத்தர்கள் ஜனவரி முதல் இடமாற்றம் செய்யப்படவுள்ளனர்.

எனவே, சம்பந்தப்பட்டோர் இந்த விடயங்களைக் கவனத்தில் கொண்டு மீள் பரிசீலனை செய்வதுடன் இடமாற்றம் கோரியோரை மட்டும் இடம்மாற்றி, ஏனையோரின் இடமாற்றங்களை இரத்துச் செய்யுமாறும் அந்தச் சங்கம் கோரியுள்ளது. (ற-ஜ-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாகாண சபைகளுக்கான அதிகாரங்கள் கடந்த கால அரசுகளால் பறித்தெடுப்பு

### சபையில் ஐ.தே.க எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 9



1988 ஆம் ஆண்டு முதல் ஆட்சியிலிருந்து வரும் அரசுகள் 13 ஆவது திருத்தச் சட்டத்தினூடாக மாகாண சபைகளுக்கு வலது கையால் வழங்கிய அதிகாரங்களை இடது கையால் பறித்தெடுத்துள்ளது எனக் குற்றஞ்சாட்டிய ஜனாதிபதி சட்டத்தரணியும், ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜயம்பதி விக்கிரமரட்ன, அதிகாரப் பகிர்வே இனப் பிரச்சினைக்குத் தீர்வு. எனவே, கொழும்பில் தீர்மானம் எடுப்பதை நிறுத்தி மாகாண சபைகளுக்கு அந்த அதிகாரத்தை வழங்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

நாடாளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றியபோதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

இனப் பிரச்சினைக்கு மாகாண சபைகள் தீர்வாகாது என்று இங்கு முன்னர் பேசியவர்கள் குறிப்பிட்டனர். அப்படியானால் தீர்வு எது ? முதலில் மாகாண சபைகளுக்கு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். இதனூடாக அரசியல் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும்.

மாகாண சபை என்பது வடக்கு - கிழக்குக்கு மட்டும் தேவையானதல்ல. மாகாண சபையும் அதிகாரங்களும் ஏனைய மாகாணங்களுக்கும் தேவை. கொழும்பில் தீர்வு எடுப்பது நிறுத்தப்பட்டு அந்த அதிகாரம் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட வேண்டும்.

1988 ஆம் ஆண்டுமுதல் ஆட்சியிலிருந்த அரசுகள் 13 ஆவது திருத்தச்சட்டத்திலுள்ள காற்புள்ளி, முற்றுப்புள்ளி என்பவற்றைப் பயன்படுத்திவலதுகையினூடாக மாகாண சபைகளுக்கு அதிகாரத்தை வழங்கி, இடது கையால் பறித்தெடுத்துள்ளன.

வடக்கு மாகாண சபை கடந்த மார்ச் மாதம் சுகாதாரத்துக்கான நியதிச் சட்டத்தையும், ஏப்ரலில் கல்விக்கான நியதிச் சட்டத்தையும் உருவாக்கி ஆலோசனைக்காக அதை ஆளுநரிடம் அனுப்பியுள்ளது. ஆளுநர் இதை சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பியுள்ளார். ஆனால், இன்னும் நியதிச் சட்டம் வட மாகாண சபைக்கு திரும்பக் கிடைக்கவில்லை - என்றார். (த-5-சி)

## காணாமற்போனோர் விசாரணை வெள்ளி முதல் யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம், டிசெ. 9

யாழ்.மாவட்டத்தில் நாளை மறுதினம்வெள்ளிக்கிழமை தொடக்கம் காணாமற் போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் அமர்வு நடைபெறவுள்ளது. ஆரம்பத்தில் அமர்வு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்ட இடங்களில் சில இடங்களில் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்.மாவட்டச் செயலகத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நல்லூர் பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கும், அதற்கு அடுத்த நாள் சனிக்கிழமை யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்குமான அமர்வு இடம்பெறவுள்ளது.

பருத்தித்துறைப்பிரதேசசெயலகத்தில் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கரவெட்டி மற்றும் மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கும், 14 ஆம் திகதி திங்கட்கிழமை பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கும் அமர்வு இடம்பெறவுள்ளது.

> ஆரம்பத்தில் அமர்வு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்ட இடங்களில் சில இடங்களில் மாற்றங்கள் மேற் கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சங்கானை பிரதேச செயலகத்தில் 15 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை சண்டிலிப்பாய் மற்றும் சங்கானை பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கும், 16 ஆம் திகதி புதன் கிழமை உடுவில் மற்றும் தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு தெல்லிப்பழை பிரதேச செயலகத்திலும் விசாரணைகள் இடம்பெறவுள்ளது.

அமர்வுகள் 11 ஆம் திகதி தொடக்கம் 16 ஆம் திகதி வரை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணிவரையும் 16 ஆம் திகதி காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை விசாரணைகள் நடைபெறவுள்ளது. (த-5)

## 68 வீதமான சிங்களவர்கள் அதிகாரப்பகிர்வுக்கு விருப்பம்

***சந்திரிகா தெரிவிப்பு***

கொழும்பு, டிசெ.9

அதிகாரத்தைப் பகிர வேண்டுமென 68 வீதமான சிங்கள மக்கள் விரும்புகின்றார்கள் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

பிரான்ஸ் நிறுவனமொன்றின் ஊடாக நடத்தப்பட்ட ஆய்வின் மூலம் இந்த தகவல்கள் கிடைக்கப் பெற்றன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் சந்திரிகா குமாரதுங்க கூறியுள்ளதாவது:-

தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வுத் திட்டமொன்று முன்வைக்கப்பட வேண்டுமென விரும்புகின்றது. ஆரம்பத்தில் 23 வீதமான சிங்களவர்களே அரசியல் தீர்வுத் திட்டத்திற்கு ஆதரவாக இருந்தனர். தற்போது அந்த எண்ணிக்கை 68 வீதமாக உயர்வடைந்துள்ளது.

வெண்தாமரை அமைப்பு பின்தங்கிய கிராமங்களுக்குச் சென்று அதிகாரப் பகிர்வின் அவசியத்தை வலியுறுத்தியது. இதனால்சிங்களமக்கள் அதனைப் புரிந்து கொண்டுள்ளனர். - என் றார். (வ)

## தேவையற்ற தடயப் பொருள்களை விடுவிக்குமாறு நீதிமன்று உத்தரவு

### ஜெயக்குமாரி உள்ளிட்ட 11பேர் வழக்கில்

கொழும்பு, டிசெ. 9

ஜெயக்குமாரி உள்ளிட்ட 11 பேரிடமிருந்தும் பயங்கரவாதப் பிரிவுத் தடுப்புப் பொலிஸாரால் கைப்பற்றப்பட்ட தடயப் பொருள்களில் விசாரணைக்கு தேவைப்படாதவற்றை மீளக் கையளிக்குமாறு நீதிமன்றம் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளது.

பயங்கரவாதச் தடைச் சட்டத்தின் கீழ் 2014 ஆம் ஆண்டு மார்ச் 11 ஆம் திகதி ஜெயக்குமாரி கைது செய்யப்பட்டார். அதனைத் தொடர்ந்து வெவ்வேறு நாள்களில் குறித்த வழக்கில் சந்தேகத்தின் பேரில் மேலும் 10 பேர் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

குறித்த 11 சந்தேக நபர்களும் கடந்த மார்ச் 9ஆம் திகதி கடுமையான நிபந்தனைகளுடன் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர். ஆனால் அவர்கள் கைது செய்யப்படும்போது பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்ட பொருள்கள் பல இன்னும் பொலிஸாரிடமே உள்ளன.

குறித்த பொருள்களை தடய விசாரணைக்கு என்று கூறியே அவற்றைப் பொலிஸார் கைப்பற்றியிருந்தனர். ஆனால் அவை எவற்றையும் திருப்பிக் கொடுக்கவில்லை.

இந்த நிலையில் ஜெயக்குமாரி, பத்மாவதி உள்ளிட்ட 11 சந்தேக நபர்களும் கொழும்பு புதுக்கடை நீதிவான் அருனி ஆட்டிகல முன்னிலையில் நேற்று முன்னிலையாகினர்.

இதன்போது வழக்கு விசாரணைக்குத் தேவைப்படாத பொருள்கள் ஆவணங்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சந்தேக நபர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் நேற்று நீதிமன்றிடம் கோரியிருந்தனர்.

சந்தேக நபர்களின் கைத்தொலைபேசிகள், மோட்டார் சைக்கிள்கள், ஓட்டோக்கள், வங்கிப் புத்தகம், ஐபாட்கள் உள்ளிட்ட பொருள்கள் மற்றும் ஆவணங்களை அவர்கள் மீட்டிருந்தனர்.

சட்டத்தரணிகளின் கோரிக்கையைப் பரிசீலித்த நீதிமன்று வழக்குக்குத் தேவைப்படாதவற்றை விடுவிக்குமாறு உத்தரவிட்டுள்ளது. அத்துடன் குறித்த வழக்கு விசாரணைகளை எதிர்வரும் ஜனவரி 27 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (வ-4)

## சிறுவனை துன்புறுத்திய நபருக்கு ஒத்திவைத்த 6 மாத கடூழியச் சிறை

கரணவாய், டிசம் 9

சிறுவன் ஒருவனை அடித்துத் துன்புறுத்திய இளைஞர் ஒருவருக்கு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றம் ஐந்து வருடங்கள் ஒத்திவைத்த 6 மாத கடூழியச் சிறைத்தண்டனை விதித்துள்ளது.

கடந்த ஓகஸ்ட் மாதம் அல்வாய் பகுதியிலுள்ள விளையாட்டு மைதானத்தில் வைத்து பா.சிவகரன் என்பவரை அதேயிடத்தைச் சேர்ந்த சி.சிவபாலன் அடித்து துன்புறுத்திய குற்றச்சாட்டில் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்தச் சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணைகள் நேற்று பருத்தித்துறை நீதிவான் மா. கணேசராசா முன்னிலையில் விளக்கத்துக்கு எடுக்கப்பட்டது.

குறித்த சந்தேகநபர் குற்றத்தை ஒப்புக்கொண்டதனை அடுத்து, அவருக்கு 5 வருடங்களுக்கு ஒத்திவைத்த 6 மாத சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்த நீதிவான், சிறுவர்களை உடலியல் ரீதியாவோஉளரீதியாகவோ துன்புறுத்தினால் கடுமையான தண்டனை வழங்கப்படும் என்றும் எச்சரிக்கை செய்தார். (வ-108)

## 50,000 வீடுகள் அமைக்கும் பணி அர்ப்பணிப்புடன் முன்னெடுப்பு

### இந்திய அரசு அறிவிப்பு

புதுடில்லி, டிசெ.9

இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்டுஉள்நாட்டில்இடம்பெயர்ந்த மக்களுக்கு 50,000 வீடுகள் திட்டத்தை செயற்படுத்துவதில் இந்தியா அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக உறுதியளித்துள்ளது.

இதனை நேற்று இந்திய நாடாளுமன்றில் உள்நாட்டு அமைச்சர் கிரன் ரியியூ அறிவித்துள்ளார். எழுத்து மூலமாக எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையிலேயே மேற்படி அறிவிப்பை வெளியிட்டுள்ளார் என இந்திய ஆங்கில ஊடகமான பி.ரி.ஐ செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் அந்த செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

போரினால் இடம்பெயர்ந்த மக்களுக்கு 50 ஆயிரம் வீடுகள் திட்டத்தை மத்திய அரசு முன்னெடுத்து வருகிறது. இந்தத் திட்டத்தில் புதிதாக வீடுகளை அமைத்துக் கொடுத்தல் மற்றும் சேதமடைந்த வீடுகளை மீளமைத்துக் கொடுத்தல் என இரண்டு செயல்முறைகள் முன்னெடுக்கப்படுகின்றது.

அத்துடன், முகவர் நிறுவனங்கள் ஊடாகவும் வீட்டுத் திட்டப் பயனாளிகள் ஊடாக என இரண்டு வழி முறைகளில் இந்தத் திட்டம் செயற்படுத்தப்படுகிறது. வீட்டுத்திட்டப் பயனாளிகள் கலந்துரையாடல்கள் மூலம் தெரிவானார்கள்.

மேலும், இந்தியாவில் தமிழ்நாடு மற்றும் ஒரிரவிலும் ஒரு லட்சத்து ஆயிரத்து 368 இலங்கை அகதிகள் தங்கியுள்ளனர்.1995 ஆம் ஆண்டு முதல் இலங்கைத் தமிழ் அகதிகள் இந்தியாவிற்கு வருகின்றனர்.

இலங்கையில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தெரிவு செய்யப்பட்ட 2000 ஏக்கர் தனியார் காணிகளை அந்த நாட்டு அரசு விடுவித்துள்ளது.

இந்தியாவிலுள்ள இலங்கைத்தமிழ் அகதிகளை நாடு திரும்புவதற்கு ஏற்ற சூழ்நிலையை ஏற்படுத்துமாறு கடந்த ஜனவரி மாதம் இந்தியாவுக்கு வந்த இலங்கை வெளிவிவகார அமைச்சரிடம்நாம்வலியுறுத்தியுள்ளோம்.

இலங்கை அரசு, நாடு திரும்புபவர்களுக்கு கல்வி, சுகாதாரம் மற்றும் சிவில் ஆவணங்களை வழங்கல் உள்ளிட்ட சேவைகளை உடனடியாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கின்றது. இதற்கு இந்தியாவும் ஆதரவு வழங்குகின்றது.- என்றார். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மரண அறிவித்தல்**

**கணபதிப்பிள்ளை விக்கினேஸ்வரி ( சோதி)**

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் உடுவில், கோண்டாவில் ஆகியவற்றை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை விக்கினேஸ்வரி 07.12.2015 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகளும் மகேஸ்வரி, காலஞ்சென்றவர்களான சுந்தரலிங்கம்(லண்டன்), இரத்தினம், பாலசுப்பிரமணியம் (அப்பு) மற்றும் கனகமலர், வடிவேலு, துரைசிங்கம், இராஜேஸ்வரி (லண்டன்), நாகேஸ்வரி, கமலாதேவி, ஜெகதீஸ்வரி(லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற விஜயரத்தினம் மற்றும் சூரியகுமாரி (லண்டன்), காலஞ்சென்ற தங்கராசா மற்றும் நகுலேஸ்வரி (இந்தியா), இராசம்மா, அருந்தவமணி, லக்சுமி காந்தன் (லண்டன்), காலஞ்சென்ற இராசேந்திரம் மற்றும் கெங்காதரன், வைத்திலிங்கம் (தேவன்- லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.12.2015) புதன் கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நீர்வேலியில் உள்ள சகோதரரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் நீர்வேலி வடக்கு சீயாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
க. துரைசிங்கம் J.P(சகோதரர்)
முன்னாள் தவிசாளர்
வலிகிழக்கு பிரதேசசபை
021 321 0047

நீர்வேலி வடக்கு
நீர்வேலி.

# ஜி.எஸ்.பி. பிளஸ் குறித்து இன்னமும் முடிவில்லை

கொழும்பு, டிசெ. 9

இடைநிறுத்தப்பட்ட ஜி.எஸ்.பி. பிளஸ் வர்த்தகச் சலுகையை இலங்கைக்குத் திருப்பிக் கொடுப்பது தொடர்பில் இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை. இந்த நடைமுறை இலகுவானதல்ல - விரைவாக மேற்கொள்ளக் கூடியதுமல்ல. மாறாக, சிக்கல் மிக்க ஒரு நடைமுறையாகும் என்று இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் டேவிட் டேலி தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஐரோப்பிய ஒன்றியத் தூதரகக் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போது ஜி.எஸ்.பி. பிளஸ் தொடர்பாக எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அடுத்த இரண்டு மாதங்களுக்குள்ளாக ஜி.எஸ்.பி. பிளஸ் வர்த்தகச் சலுகை இலங்கைக்கு மீண்டும் கிடைக்கும் என இலங்கையின் அமைச்சரொருவர் தெரிவித்துள்ளதாக ஊடகவியலாள ரொருவர் சுட்டிக்காட்டியதற்குப் பதிலளித்த தூதுவர், அந்த அமைச்சரிடமே இதுபற்றிக் கேட்க வேண்டும் எனப் பதிலளித்தார்.

மனித உரிமைகள், தொழில் உரிமைகள் மற்றும் நல்லாட்சி ஆகிய விடயங்களில் இலங்கை அரசு உரிய இலக்குகளைப் பூர்த்தி செய்யவில்லை. அந்த உடன்படிக்கைகளை அரசு மீறிச் செயற்படுகின்றது என்ற காரணங்களை முன்னிறுத்தி 2010 ஆம் ஆண்டில் இலங்கைக்கான ஜி.எஸ்.பி. பிளஸ் வர்த்தகச் சலுகையை ஐரோப்பிய ஒன்றியம் இடைநிறுத்தியது.

இலங்கை மிகப்பெரிய ஆடை ஏற்றுமதிச் சந்தையாக விளங்கும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கான ஏற்றுமதிகளுக்கு ஜி.எஸ்.பி. பிளஸ் வர்த்தகச் சலுகை மூலமாக வரிகளற்ற சந்தை கிடைக்கப் பெற்றதனால், இலங்கைக்கு வருடாந்தம் 150 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மேலதிக வருமானமாகக் கிடைக்கப்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (த-5-சி)

**Centre for Open and Distance Learning (CODL), University of Jaffna, Sri Lanka**

**(திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை)**

**கலைமாணி பட்டப்படிப்பு 2013/2014 (வெளிவாரி)**
**(புதிய பாடத்திட்டம்)**

Bachelor of Arts Degree Programme – 2013/2014 (External)
(New Syllabus)

(Semester Based Course Unit system and Grade Point Average Evaluation)

**புதிய அனுமதிக்கான தெரிவுப் பரீட்சை – 2013**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தினால் நடத்தப்படும் புதிய பாடத்திட்டத்தின் கீழ் அமைந்த கலைமாணிக் கற்கைநெறிக்கு புதிய மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**அனுமதிக்கான தகைமைகள்:**

❖
- ○ க.பொ.த. (உ/த) பரீட்சை – 2013 அல்லது அதற்கு முன்னர் அங்கீரிக்கப்பட்ட மூன்று பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்து இருப்பதுடன்
- ○ பொது அறிவுப் பரீட்சையில் ஆகக்குறைந்தது 30% மான புள்ளிகளைப் பெற்று பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதியானவர்கள்

**அல்லது**

❖ தேசிய கல்வியல் கல்லூரியில் கற்பித்தலில் டிப்ளோமாச் சான்றிதழ் பெற்றவர்கள்

**அல்லது**

❖ ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளில் பயிற்றப்பட்ட அரசாங்கப் பாடசாலைகளின் ஆசிரியர்கள்

**அல்லது**

❖ பல்கலைக்கழக மூதவையினால் ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய மேற்குறித்த தகமைகளுக்கு தொடர்புடைய அல்லது சமமானது என கருதப்படும் தகமைகளைக் கொண்டவர்கள்.

**மாணவர் தெரிவு:**

விண்ணப்பதாரிகள் பொது உளச்சார்புப்பரீட்சை அல்லது நேர்முகப் பரீட்சை அல்லது இரண்டும் மூலம் தெரிவு செய்யப்படுவர்.

பரீட்சை நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

**விண்ணப்பப் படிவங்களைப் பெறுதல்:**

1. விண்ணப்பப்படிவத்தினை நேரடியாக பெற விரும்புவோர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில். விண்ணப்ப மற்றும் பரீட்சைக் கட்டணமாக ரூபா 500 ஐ செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டை சமர்ப்பித்து யாழ். பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் இருந்து அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். தபால் மூலம் பெற விரும்புவோர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதியாளருக்கு எழுதப்பட்ட. ரூபா 500 இற்கான காசுக்கட்டளை / தபாற்கட்டளையை. சுய முகவரியிடப்பட்ட ரூபா 40.00 பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 25 x 20 செ.மீ அளவுடைய தபால் உறையுடன். உதவிப் பதிவாளர். திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம். யாழ் பல்கலைக்கழகம். திருநெல்வேலி என்ற முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக்கொள்ள முடியும்.
2. விண்ணப்பப்படிவத்தினை www.jfn.ac.lk/codl எனும் இணைய முகவரியிலும் பெற்றுக் கொள்ளலாம்.

**விண்ணப்பப் படிவங்களைச் சமர்ப்பித்தல்:**

விண்ணப்பங்கள் யாவும் உதவிப்பதிவாளர். திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். திருநெல்வேலி என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் "**கலைமாணி பட்டப்படிப்புக்கான விண்ணப்பம்- 2013/2014**" என தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

**விண்ணப்ப முடிவுதிகதி : 01.02.2016 (திங்கட்கிழமை). (விண்ணப்ப முடிவு திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது)**

மேலதிக விவரங்களுக்கு 021 222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.

பதிவாளர்
08.12.2015

# இலங்கைப் பணிப் பெண்ணின் தண்டனை மீள்பரிசீலனைக்கு ?

கொழும்பு, டிசெ. 9

இலங்கைப் பணிப் பெண் ஒருவரைக் கல்லால் அடித்துக் கொலை செய்யுமாறு சவுதி நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட சாவுத் தண்டனை மறு பரிசீலனை செய்யப்படுவ தாகத் தற்போது செய்திகள் வெளியாகி யுள்ளன.

குறித்த தண்டனையை மீள் பரிசீலனை செய்யுமாறு முன்வைக்கப்பட்ட மேன்முறையீட்டுக்கு அமையவே, இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

45 வயதுடைய குறித்த பெண் மூன்று குழந்தைகளின் தாயாவார். இவர் கடந்த 2013ஆம் ஆண்டில் இருந்து சவுதியில் பணிப் பெண்ணாக பணியாற்றி வருகி றார்.

இந்தநிலையில் இவருக்குப் பிறிதொரு ஆணுடன் தகாத உறவு இருந்ததாகக் குற்றம்சாட்டப்பட்டு, அந்தக் குற்றத்தை அவர் ஒப்புக் கொண்ட நிலையில், கல்லால் அடித்துக் கொல்லுமாறு சவுதி நீதிமன்றத்தால் தண்டனை விதிக்கப்பட்டதோடு, இதனுடன் தொடர்புடைய ஆணுக்கு 100 கசையடிகளைவழங்குமாறும் உத்தரவிடப்பட்டது.

இந்தநிலையில் குறித்த பெண்ணின் கணவர் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்துடன் தொடர்பு கொண்டதையடுத்து இலங்கை அரசு குறித்த தண்டனையை மறு பரி சீலனை செய்யுமாறு சவுதி அரசிடம் கோரியுள்ள தாக, வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் பேச்சாளர் உபுல் தேசப்பிரிய குறிப்பிட்டுள்ளார்.

அவர் குற்றத்தை ஒப்புக் கொண்டுள்ளார். இருப்பினும் வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தால் இது குறித்து மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளதாகவும், வெளிவிவகார அமைச்சின் சார்பில் இராஜதந்திர மட்டத்தில் சவுதி அரசுடன் பேச்சு நடைபெற்றுக் கொண்டிருப்ப தாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.(த)

# வலிகாமம், தீவக மாணவருக்கு சீருடைத் துணிகள் விநியோகம்

வலிகாம வலயம் மற்றும் தீவக வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கான சீருடைத் துணிகளை வர்த்தக நிலையங்களில் பெற்றுக்கொள்ளமுடியும் என்று வலயக் கவிப் பணிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதன்படி வலிகாமம் வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கான சீருடைத்துணி வழங்குநர்களாக கீழ்வரும் 17 வர்த்தக நிலையங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

முறையே விநாயகர் பட்டுச்சோலை ஆலடிச்சந்தி மானிப்பாய். றஞ்சனாஸ் ரெக்ஸ், இல.4, மத்திய சந்தை சுன்னாகம். சுமங்கலி சில்க்ஸ், இல.5, நவீன சந்தை, சுன்னாகம். கஜமுகன் பல்பொருள் வாணிபம், பிரதான வீதி, அளவெட்டி. நியூ பன் பார்க், இல.82, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம். நியூ துர்க்கா துணிப் பூங்கா, பிரதான வீதி, சங்கானை. வளர்பிறை பட்டுச் சோலை, பிரதான வீதி, சங்கானை. அருளானந்தம் ரெக்ஸ்ரைல்ஸ், புதிய பஸ் நிலையம், சங்கானை. டல்லா ரெக்ஸ்ரைல்ஸ், நவீன சந்தை, சுன்னாகம். பண்டத்தரிப்பு ப.நோ.கூ.சங்கம், பண்டத்தரிப்பு. பாவனா ரெக்ஸ், பொன்னாலை வீதி, சங்கானை. ஆறுமுகம் ரெக்ஸ்ரைல்ஸ், இல.20, பெரிய கடை, யாழ்ப்பாணம். நியூ அபிராமி ரெக்ஸ், பிரதான வீதி, சங்கானை. குமரன் பட்டுச்சோலை, இல.321, சங்கானை. மகா சில்க்ஸ், இல.32, நவீன சந்தை, யாழ்ப்பாணம். ஆர்த்தி இந்தியன் பன், பிரதான வீதி, சங்கானை. ஆர்த்தி இந்தியன் பன், யாழ் வீதி, மானிப்பாய் ஆகிய வர்த்தக நிலையங்களில் மாணவர்கள் தங்களது சீருடைக் கூப்பன்களை வழங்கிச் சீருடைத்துணிகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் தீவக வலயத்துக்கு உட்பட்ட பாடசாலை மாணவருக்கான சீருடைத் துணிகளை விநியோகிப்பதற்கு 11 வர்த்தக நிலையங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ள தாகத் தீவக வலயக்கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

முறையே கணேசன் ஸ்ரோஸ்-யாழ்ப்பாணம், த.குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ் -யாழ்ப்பாணம். ஆறுமுகம் ரெக்ஸ்ரைல்ஸ்-யாழ்ப்பாணம், ஜி.எஸ்.லிங்கநாதன் ரெக்ஸ்ரைல்ஸ் -யாழ்ப்பாணம், நேசன் புடைவையகம்-புங்குடுதீவு, ஏகாம்பரம் புடைவையகம்-யாழ்ப்பாணம், இராஜராஜேஸ்வரி புடைவையகம் யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம், காரைநகர் ப.நோ.கூ.சங்கம், நெடுந்தீவு ப.நோ. கூ.சங்கம், புங்குடுதீவு ப.நோ. கூ.சங்கம். ஆகியவர்த்தகநிலையங்களில் மாணவர்கள் தங்களது சீருடைக் கூப்பன்களை வழங்கி, சீருடைத்துணிகளைப் பெற்றுக் கொள்ள முடியும். (த-ரி5)

# பட்டாசு வெடியால் அசௌகரியம்

சாவகச்சேரி நகர சபையினால் தடைசெய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த நகரப் பகுதியில் பட்டாசு கொளுத்துதல் மீண்டும் ஆரம்பமாகியுள்ளது. நகரப் பகுதியில் பட்டாசு கொளுத்து போது அதில் இருந்து வெளியேறும் புகையினாலும், மணத்தினாலும் பொது மக்களுக்கு பாதிப்பு ஏற்படுவதோடு அருகில் உள்ள உணவு நிலையங்களில் உணவருந்துவோர் பெரும் சுகாதாரச் சீர்கேடுகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

கடந்த 4 வருடங்களாகப்பட்டாசு கொளுத்துவது தடை செய்யப்பட்டிருந்தது. தற்போது நகரசபை கலைக்கப்பட்ட பின்னர் மீண்டும் பட்டாசு கொளுத்துவது குறித்து வர்த்தகர்களும் , பொதுமக்களும் கவலை தெரிவிக்கின்றனர். (த-9)

**மேல் நீதிமன்றம் யாழ்ப்பாணம்**
**கேள்வி அறிவித்தல்**

மேல் நீதிமன்ற வலயத்துக்குட்பட்ட நீதிமன்ற வளாகங்களில் சுத்திகரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்குரிய (2016) கேள்விப்பத்திரங் கள் தகுதி வாய்ந்த நிறுவனத்திடமிருந்து இத்தால் கோரப்படுகின்றன.

01.யாழ்ப்பாணம் நீதிமன்ற வளாகம்.
02. மல்லாகம் நீதிமன்ற வளாகம்.
03. சாவகச்சேரி நீதிமன்ற வளாகம்.
04. ஊர்காவற்றுறை நீதிமன்ற வளாகம்.
05. பருத்தித்துறை நீதிமன்ற வளாகம்.
06. யாழ்ப்பாணம் சிறுவர் நீதிவான் நீதிமன்றம்.

எனவே சுத்திகரிப்புப் பணிகளை ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ள விரும்புவோர் உரிய விண்ணப்பப் படிவங்களையும், மேலதிக விவரங்களையும் யாழ்ப்பாண மேல்நீதிமன்ற கணக் காளரிடம் மீளளிக்க முடியாத வைப்பாக ரூ.100 ஐயும், மீளளிக்கக் கூடிய வைப்பாக ரூ.25,000 ஐயும் செலுத்தி 11.01.2016 திங்கட்கிழமை நண்பகல் 12 மணிவரை பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பங்களை 11.01.2016 பிற்பகல் 1.30 மணிவரை ஏற்றுக் கொள்வதுடன் பிற்பகல் 2 மணிக்கு விலை மனுக்கள் கேள்விதாரர் முன்னிலையில் திறக்கப்படும்.

ஒவ்வொரு நீதிமன்றங்களுக்கும் சுத்திகரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக தனித்தனியாக விண்ணப்பிக்க வேண்டும்.

மா.இளஞ்செழியன்,
மேல்நீதிமன்ற நீதிபதி / தவிசாளர்.
மேல்நீதிமன்ற பெறுகைக்குழு,
மேல்நீதிமன்றம்,யாழ்ப்பாணம்.

(F/20711)
(11.15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களுக்கு எதிரான வன்முறைகள் வேண்டும் என்றே நிகழ்த்தப்படுகின்றன

## வடமாகாண முதலமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.9
மூன்று தசாப்தங்களுக்கு மேலாக பெண்கள் எந்த வித அச்சமும் இல்லாது பகல் மற்றும் இரவு நேரங்களிலும் தாம் விரும்பிய இடங்களுக்கு விரும்பிய நேரத்தில் சென்றுவரக் கூடிய ஒரு சூழ்நிலை இங்கு காணப்பட்டது. ஆனால் இன்று அந்த நிலை சற்று மாறுபட்டுள்ளது. பெண்களுக்கு எதிரான வன்முறைகள் வேண்டும் என்றே கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன.
– இவ்வாறு தெரிவித்தார் வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன்.

யாழ்.சமூக செயற்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் பெண்களுக்கு எதிரான வன்முறை ஒழிப்பு நிகழ்வு நேற்று நாவலர் மண்டபத்தில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எமது அண்மைய காலசரித்திரம் பெண்களுக்கெதிரானதாகப் பரிணாமம் பெறாதிருந்தாலும் பொதுவாக வன் சிந்தனைகளுக்கு வழி வகுப்பதாகவே அமைந்திருந்தன. எம்மைச் சுற்றி வன்செயல்கள், வன்சிந்தனைகள் பெருக்கெடுத்து ஓடிக் கொண்டிருக்கையில் எமது மனங்கள் அந்த நீர்ச்சுழிக்குள் அகப்பட்டுப் போவது தடுக்க முடியாதது. எனினும் அந்தக் காலகட்டத்தில் பெண்களுக்கெதிரான வன் எண்ணங்கள் எழவிடாமல் வன்தடுப்பே ஆயுதமாகப் பாவிக்கப்பட்டது. 1980களில் பெண்களைப் பழித்தால் தண்டனை கிடைத்தது இளைஞர்களால். ஆகவே அந்தக்கால கட்டத்தில் வன்சொற்களும் வன்முறைகளும் வன்மையாகவே கண்டிக்கப்பட்டன என்றும் அவர் குறிப்பிட்டார்.

இப்பொழுது பெண்களுக்கெதிரான நடவடிக்கைகள் சம்பந்தமான வன்தடுப்புமுறை கடந்து, தேக ரீதியாகவும் மனோ ரீதியாகவும் வன்செயல்களில் ஈடுபடக் கூடிய ஒரு சூழலை யாரோ வேண்டுமென்றே உருவாக்கிக் கொண்டிருக்கின்றார்களோ என்று சிந்திக்க வேண்டியுள்ளது.

நீண்ட காலப் போர் முடிவுக்குக் கொண்டு வந்து ஓரிரு வருடங்களுக்கு உள்ளேயே நிலைமைகள் மிகக் கேவலமாக மாற்றம் பெற்றுவிட்டன. எம்மிடையே பல தீய செயல்கள் நன்கு திட்டமிடப்பட்டு வேண்டுமென்றே எமது இனத்தை அழிப்பதற்காக அரங்கேற்றப்படுகின்றனவோ எனக் கேட்க வேண்டியுள்ளது.

இதனை நாம் விரைந்து முடிவுக்கு கொண்டுவராவிடின் எமது இளைய சமுதாயமும் பெண் வர்க்கத்தினரும் இங்கு பாதுகாப்புடன் வாழ முடியாத ஒரு சூழ்நிலை ஏற்படக் கூடும் என்றும் முதலமைச்சர் தெரிவித்தார்.

(ற-ஐ-10)

# சர்வதேச மனித உரிமை தினத்தை முன்னிட்டு கிளிநொச்சியில் நிகழ்வு

கிளிநொச்சி, டிசெ.9
வடக்கு, கிழக்கு ஜனநாயகத்துக்கும் நீதிக்குமான மக்கள் அமைப்பின் ஏற்பாட்டில "சரி நிகர் சமனாக வாழ்வோம் இந்நாட்டில்" எனும் தொனிப்பொருளில் சர்வதேச மனித உரிமைகள் தின நிகழ்வுகள் கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் நாளை வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளன.

வடக்கு, கிழக்கு ஜனநாயகத்துக்கும் நீதிக்குமான மக்கள் அமைப்பின் தலைவர் அ.சத்தியானந்தம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக கிளிநொச்சி வளாக பொறியியல் பீட குடிசார் எந்திரவியல் துறைத் தலைவர் கலாநிதி எஸ்.எஸ்.சிவகுமார் கலந்து கொண்டு கருத்துரை வழங்கவுள்ளார்.

அதனைத் தொடர்ந்து "மனித உரிமைகளும் வாழ்வியலும்" எனும் தலைப்பில் அருட்தந்தை எஸ்.பி.செல்வனும், "மனித உரிமைகளும் மக்கள் அரசியலும்" எனும் தலைப்பில் தமிழ் சிவில் சமூகத்தின் இணைச்செயலாளர் பி.என்.சிங்கமும் கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்கவுள்ளனர்.

(ற-ஐ-426)

# சகாய நல நிதிய திட்டத்தால் இதுவரை 19 பேர் பயனடைவு

யாழ்ப்பாணம்,டிசெ.9
வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால் இந்த ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட சகாய நல நிதியத் திட்டத்தின் மூலம் இதுவரைக்கும் 19 வரையிலான பணியாளர், அங்கத்தவர்கள் பயன்பெற்றுள்ளனர்.

விபத்துக்களால் பாதிக்கப்பட்ட இவர்களுக்கு சகாய நல நிதியத்தின் ஊடாக உதவித் திட்டம் வழங்கப்பட்டுள்ளது என்று வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் என். கணேசன் தெரிவித்தார்.

பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர், அங்கத்தவர்களின் நலன் கருதி இந்த ஆண்டில் ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்த சகாயநல நிதியத் திட்டத்தில் இணைந்து கொண்டவர்களில் பலர் நன்மை பெற்றுள்ளனர்.

அடுத்த 2016 ஆம் ஆண்டிலும் இந்தத் திட்டத்தில் இணைந்து கொள்ளாதவர்கள் இணைந்து கொள்ள முடியும். இந்த சகாயநல நிதியத்திட்டத்தை 2016 ஆம் ஆண்டில் விரிவு படுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களை விட ஏனைய கூட்டுறவு அமைப்புக்களும் இணைந்து கொள்ள முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-17)

# மின்சாரம் தாக்கி இளைஞன் சாவு

விஸ்வமடு பகுதியில் மின்சாரம் தாக்கி இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

விஸ்வமடு 12ஆம் கட்டை பகுதியில் உள்ள வாகன சுத்திகரிப்பு நிலையம் ஒன்றில் வேலை செய்துகொண்டு இருக்கையிலேயே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் மூங்கிலாறு வடக்கு, உடையார் கட்டை சேர்ந்த தனபால சிங்கம் மகிமராஜா (வயது -21) என்ற இளைஞனே உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர். சாவடைந்தவரின் சடலம், பொலிஸாரால் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் உடற்கூற்றுப்பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணையை விசுவமடுப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (வ-101,ரி3)

# நன்னடத்தை பாடசாலையில் தொழில் பயிற்சிகள் ஆரம்பம்

அச்சுவேலி,டிசெ.9
அச்சுவேலி அரச சான்று பெற்ற நன்னடத்தை பாடசாலையில் தங்க வைக்கப்பட்டுள்ள சிறுவர்களுக்கான தொழில் வழிகாட்டல் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று பாடசாலையின் அதிபர் வல்லிபுரம் விக்னராஜா தெரிவித்துள்ளார்.

நீண்டகால அடிப்படையில் நீதி மன்றால் தண்டணை பெற்று சீர்திருத்தக் கட்டளைக்கு உட்பட்ட சிறுவர்களுக்கு தச்சுவேலைகள், மோட்டார் சைக்கிள் திருத்துதல் போன்ற தொழில் பயிற்சிகள் பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சிறு குற்றங்களில் ஈடுபட்டு நீதி மன்றால் தண்டிக்கப்பட்ட குறிப்பிட்ட சில சிறுவர்கள் 2-3 வருடங்கள் தொடர்ச்சியாக இங்கு தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் திருந்தி நற்பிரஜைகளாக வெளியில் செல்லும் போது இங்கு வழங்கப்படும் தொழிலைக் கற்றுச் கொள்வதால் அவர்கள் சுயமாக எதிர் காலத்தில் இயங்கக் கூடியவர்களாக வாழ முடியும் என்று விக்னராஜா தெரிவித்தார்.

வாரத்தில் இரண்டு நாள்கள் மோட்டார் சைக்கிள் திருத்தும் பயிற்சியும், மூன்று நாள்கள் தச்சு வேலைப் பயிற்சியும் வழங்கப்படுகின்றன. 13 வயதுக்குக் குறைந்த சிறுவர்களுக்கு கோழி வளர்ப்பு, கால்நடைகள் பராமரித்தல், சிறுதோட்டம் செய்தல் போன்ற செயற்பாடுகள் வழங்கப்படுகின்றன. எதிர்காலத்தில் குற்றச் செயல்களில் இருந்து விடுபடுதல் தொடர்பிலான கருத்துரைகள், ஆன்மிக வழிகாட்டல், தியானம் போன்ற செயற்பாடுகள் இந்தப் பாடசாலை நிர்வாகத்தால் வழங்கப்படுகின்றது.

(ற-ஐ-107)

# விண்ணப்பம் கோரல்

இலங்கைத் தொழில் பயிற்சி அதிகாரசபையால் யாழ்.மாவட்டத்துக்கான முழுநேர மற்றும் பகுதிநேர கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கைதடி, காரைநகர், பண்டத்தரிப்பு, வடமராட்சி, தீவகம் ஆகிய கல்வி நிலையங்களில் இந்தக் கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

காய்ச்சி இணைப்பாளர், இருசக்கர மற்றும் ஓட்டோ திருத்துனர், டீசல் வாகன இயந்திரத் திருத்துனர், தொழிற்சாலை மின்னிணைப்பாளர், குளிர்சாதன உபகரண திருத்துனர், வீட்டு மின்னிணைப்பாளர், மரவேலைதொழில் நுட்பவியலாளர், விவசாய உபகரண திருத்துனர், அழகுக்கலை வல்லுனர், பெண்கள் சிறுவர்களுக்கான ஆடை வடி வமைப்பாளர்கள், முன் பள்ளி ஆசிரியர், நீர்குழாய் பொருத்துனர், மின் மோட்டார் மீள்முறுக்குனர், உதவிகணிய அளவையியலாளர், படவரை கலைஞர் ஆகிய கற்கை நெறிக்கான விண்ணப்பங்களே கோரப் பட்டுள்ளன.

இந்த கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க விரும்புபவர்கள், இந்த மாதம் 16 ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை வீரசிங்கம் மண்டபத்தில் அமைந்துள்ள மாவட்ட அலுவலகத்தில் மேற்கொள்ள முடியும். (ற-ஐ-ரி5)

# கனகாம்பிகைக் குளம் உடைப்பெடுக்காது

## வெளியான தகவல் வதந்தி என்கிறார் நீர்ப்பாசனப் பொறியியலாளர்

கிளிநொச்சி,டிசெ.9
கிளிநொச்சி கனகாம்பிகைக் குளம் உடைப்பெடுக்கும் அபாயம் உள்ளதால் திருவையாறு மற்றும் கனகாம்பிகைக்குள மக்களை இடம்பெயர்ந்து பாதுகாப்பான இடங்களில் தஞ்சம் புகுமாறு நீர்ப்பாசன அதிகாரிகள் அறிவித்துள்ளனர் என இணைய ஊடகங்களில் வெளிவந்த செய்திகள் பொய்யானவை. அது குறித்து மக்கள் பயப்படத் தேவை இல்லை. - இவ்வாறு கனகாம்பிகை குள நீர்ப்பாசனப் பொறியியலாளர் தெரிவித்தார்.

இணையத்தளங்களில் வெளியான செய்தியின் உண்மைத் தன்மை தொடர்பாக இரணைமடு கனகாம்பிகைக் குளத்தின் பொறியியலாளரைத் தொடர்பு கொண்டு கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -
கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள எந்த ஒரு குளங்களும் உடைப்பெடுப்பதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை. எமது திணைக்கள அதிகாரிகளோ நானோ இவ்வாறான ஒரு தகவலை வெளியிடவில்லை.

இன்று (நேற்று) கனகாம்பிகை குளத்தை நேரில் சென்று பார்வையிட்டுள்ளோம். குறித்த குளம் தற்போது நல்ல நிலமையில் உள்ளது. மக்களைக் குழப்பி கலக்கமடையச் செய்யும் இவ்வாறான செய்திகள் மன வருத்தத்தை ஏற்படுத்துகின்றன. மக்கள் எந்தவித [illegible] தேவையில்லை என்றார்.

(ற-ஐ-21)

# வவுனியா வைத்தியசாலையில் விபத்துப் பிரிவு திறந்து வைப்பு

வவுனியா, டிசெ.9
வவுனியா பொது வைத்தியசாலையின் விபத்துப் பிரிவு புனரமைப்பு செய்யப்பட்டு நேற்று வடமாகாண சுகாதார அமைச்சர் மருத்துவர் ப. சத்தியலிங்கத்தால் உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.


இந்த நிகழ்வில் வவுனியா பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் மருத்துவர் க. அகிலேந்திரன், மலேரியா தடுப்பு இயக்கப் பணிப்பாளர் எம். மகேந்திரன், வவுனியா பிரதி பொலிஸ் உதவி அத்தியட்சகர் வசந்த விக்கிரமசிங்கா ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் வைத்தியசாலையின் வைத்தியர்கள், தாதிய உத்தியோகத்தர்கள், விடுதிச் சகோதரிகள், தாதிய பரிபாலகர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(ற-ஐ)

தேவை
O/L வகுப்பு கணிதம், விஞ்ஞானம் ஆங்கிலமொழி மூல ஆசிரியர் தனிப்பட்ட மாணவனுக்கு கற்பிக்கத் தேவை.
தொடர்பு: 077 295 6497

வேலையாள்கள் தேவை
எமது ஸ்தாபனத்துக்கு நீர்கொழும்பில் தங்கியிருந்து வேலை செய்வதற்கு வேலையாள்கள் தேவை. மாத வேதனமாக ரூபா 27,000/= வழங்கப்படும். இலவச தங்குமிட வசதி உண்டு. ஆண்கள் மட்டும்.
வயது 18 - 25 வரை.
தொடர்பு:-
Kings Electronics
No. 11 - A, Stanley Road,
Jaffna.
021 222 3857
(66795)
(11,15,18)



★ பல் முக சீராக்கல்
(Consultant orthodontist)
★ முக சத்திர சிகிச்சை
(Consultant Facio Maxillary Surgeon)
மேற்கொள்ளுவதற்கு விசேட
வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்
★ மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
★ ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
★ நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல்
(Crown & Bridges,Implants)
★ வேர்முறை சிகிச்சை(Root canal Filling)
★ நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
★ பற்களை வெண்மையாக்குதல்
(Vital Bleeching)
(C/17660)(5,6,3)
சன்றைஸ் மெடி கிளினிக்
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 559 8006 (லதா)
றோயல் மெடிக்கல் சென்ரர்
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்ஷினி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கண்ணீர் அஞ்சலி**

தென்மராட்சிப் பிரதேச
செயலகத்தின் சாவகச்சேரி பிரதேச
வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை
வங்கியில் கடமையாற்றும்
திருமதி இராஜினி கெங்கேஸ்வரன்
அவர்களின் அன்புத் தந்தையார்
**செல்லர் இராசமணி**
அவர்களின் மறைவால் துயருறும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்
அன்னாரது ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
பிரதேச செயலக உத்தியோகத்தர்,
நலன்புரிசங்கம்.
பிரதேச செயலகம், தென்மராட்சி. (F/20719) (11,15,18)

**கண்ணீர் அஞ்சலி**

தென்மராட்சி பிரதேச செயலகத்தின்
கொடிகாமம் பிரதேச வாழ்வின்
எழுச்சி சமுதாய அடிப்படை
வங்கியில் கடமையாற்றும்
திருமதி. தயாளினி சிவரஞ்சன்
அவர்களின் அன்புத் தாயார்
திருமதி **தெய்வநாயகி தம்பு**
அவர்களின் மறைவால் துயருறும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்
அன்னாரது ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிராத்திக்கின்றோம்.
பிரதேச செயலக உத்தியோகத்தர்
நலன்புரிசங்கம்
பிரதேச செயலகம் தென்மராட்சி


## முன்னாள் புலிகளுக்கு பிணைகள் நிராகரிப்பு

கொழும்பு, டிசெ, 09

அநுராதபுரம் விமானப்படை முகாம் மீது தாக்குதல் நடத்திய சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் விடுதலைப் புலிச் சந்தேக நபர்களுக்கான பிணை வழங்கும் கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

அநுராதபுரம் விசேட உயர் நீதமன்றத்தின் நீதிபதி கேமா சுவர்ணாதிபதியினாலேயே குறித்த பிணைக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது.

பிரதிவாதிகளுக்காக முன்னிலையான சட்டதரணி, முன்னாள் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் பலர் நீதிமன்றத்தினால் பிணை மூலம் விடுதலைசெய்யப்பட்டுள்ள தால் இவர்களையும் பிணை மூலம் விடுதலை செய்ய வேண்டும் என்றகோரிக்கையை முன்வைத்திருந்தார். எனினும் அரசு சார்பில்முன்னிலையான சட்டத்தரணி, பிரதிவாதிகளுக்கு பிணை வழங்குவதற்கு விசேட காரணங்கள் எதுவும் இருப்பின் அது தொடர்பில் நீதிபதிக்கு எழுத்து மூலம் அறிவிக்கவேண்டுமெனத் தெரிவித்தார்.

இதனை ஆராய்ந்து பார்த்த நீதிபதி பிணைக் கோரிக்கை ஏற்றுக்கொள்ளக் கூடியபோதிலும் அதற்கு குறித்த நீதிமன்றத்துக்கு அதிகாரம் இல்லை எனத் தெரிவித்து கோரிக்கையை நிராகரித்தார். (த-10)


**அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்**



தோற்றம்
08.11.1994
மறைவு:
26.10.2015

தோற்றம்
11.07.1994
மறைவு:
26.10.2015

அருள்ராஜா ஜோன் அஜித் — தர்மகுலசிங்கம் றனா

நாகர்கோயில் கடலில் உயிர் நீத்த தோழர்கள் அ.ஜோன் அஜித், த.றனா ஆகிய இருவரினதும் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்ட பாடசாலை அதிபர்கள்,மாணவர்கள், நண்பர்கள், உறவினர்கள் அனைவருக்கும் எமது இதய பூர்வ நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும் அன்னார்களது 45ஆம் நாள் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (09.12.2015) புதன்கிழமை எமது இல்லங்களில் நடைபெற உள்ளதால் அத்தருணம் அனைவரும் வருகை தந்து அன்னார்களது ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

திரு திருமதி அருள்ராசா கமலாம்பாள். குடும்பத்தினர்.
படித்த மகளிர் திட்டம் மிருசுவில்.
திரு திருமதி தர்மகுலசிங்கம் விஜயராணி குடும்பத்தினர். (60757)(8,8,17)

**31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்**

மண்ணில் 15.06.1944
விண்ணில் 09.11.2015



அமரர் **சேது கண்ணைய்யா**

கடந்த 09.11.2015 சிவபதமடைந்த எங்கள் குடும்ப விளக்கு அமரர் சேது கண்ணைய்யா அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (09.12.2015) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெற உள்ளது. அத்தருணம் தாங்களும் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்ம சாந்தி பெற பிரார்த்திப்பதோடு அன்று நடைபெற உள்ள மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். அன்னாரின் மரணச் செய்தி அறிந்து நேரில் வந்து இறுதி அஞ்சலி நிகழ்வில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் மற்றும் தொலைத்தொடர்புகள் மூலம் அனுதாபச் செய்திகள் தெரிவித்தோருக்கும் மலர்வளையங்கள் சாத்தி அஞ்சலி செலுத்தியோருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் மனமார்ந்த நன்றிகள்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

துவாரக வீதி,
கோண்டாவில் வடக்கு, கோண்டாவில்.
குடும்பத்தினர்.
077 023 7514, 077 473 6459

**கண்ணீரில் கரைந்த மூன்றாண்டு...**

**திருமதி சிவகற்பிற்கரசி (கற்பு)**
**அரியரட்ணம்**



ஈரவிழிகள் இன்னமும் காயவில்லை
இதயத்தின் வேதனையும் குறையவில்லை
இருந்தும் இவ்வுலகைவிட்டு நீங்கள் அகன்று
இன்றுடன் மூன்றாண்டுகள் ஆகினவோ!
வையகத்தில் நீங்கள் வாழ்ந்தபோது வாழ்வு
எமக்கு வசந்தமாய் ஆனது
வானுறையும் தெய்வத்துள் கலந்தபோது
வாழ்வே எமக்கு இல்லை என்றாகியது
தரணியில் உமக்கு இணையாருமில்லை
தவிக்கின்றாம் உம் வழிகாட்டல் ஏதுமின்றி.

என்றும் நாம் சிறக்கத் தந்தருள்வாய் ஆசீர்வாதம்
தாயே! நின் பாதம் சரண் அடைவோம்!

குடும்பத்தினர்.

A.Veluppillai & Son ஊழியர்கள்.
V.Ariaratham & Co ஊழியர்கள்.
PERA Engineering Construction (pvt)Ltd ஊழியர்கள்.
ASMC (pvt) ஊழியர்கள்.
V.A.Management Associates ஊழியர்கள்.

மலர்வு
10.09.1957

உதிர்வு
11.12.2012


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீள்குடியமர்ந்த பகுதிகளின் அபிவிருத்திக்கு நிதி தேவை

## யாழ்ப்பாண மாவட்டச் செயலகம் மீள்குடியேற்ற அமைச்சிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.9
மக்கள் அண்மையில் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட பிரதேசங்களில் மண் அணை அகற்றல் உள்ளிட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக 28 மில்லியன் ரூபா தேவை என மீள்குடியேற்ற அமைச்சிடம் யாழ்.மாவட்டச் செயலகத்தால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் மீள்குடியமர்வு நடவடிக்கைகள் இந்த ஆண்டின் ஆரம்பத்தில் இடம்பெற்றிருந்தன. மீளக்குடியமர்ந்த மக்களுக்கு உதவிகள் கட்டம் கட்டமாக வழங்கப்பட்டு வருகின்றன. இருப்பினும் இன்னமும் பல்வேறு தேவைகள் பூர்த்தி செய்யப்படாத நிலைமை காணப்படுகின்றது.

அபிவிருத்தி வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதற்காக - மக்களின் தேவைகளைப்பூர்த்திசெய்வதற்காக, பல்வேறு திட்டங்களுக்கு 28 மில்லியன் ரூபா நிதி தேவை என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

வளலாயில் மீளக்குடியமர்ந்துள்ள மக்களுக்கு தொண்டமானாறு குடிதண்ணீர்த் தாங்கியிலிருந்து குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்வதற்கு 12 மில்லியன் ரூபா தேவை எனவும், மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவில், படகு கட்டுமிடம் ஒன்றை உருவாக்க 3.5 மில்லியன் ரூபா தேவை எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

இவற்றைவிட, இளவாலைப்பொலிஸ் நிலையப் பிரதேசத்தில் அமைக்கப்பட்ட மண் அணையை அகற்றதல், காரைநகரில் கடற்படையினரின் கட்டுப்பாட்டிலிருந்து மக்களிடம் மீளக் கையளிக்கப்பட்ட காணியைத் துப்புரவு செய்தல், எழுதுமட்டுவாழ் - வரணி ஆகிய பிரதேசங்களில் மண் அணை அகற்றல், எழுதுமட்டுவாழ் - நாகர்கோவில் பிரதேசத்தில் காணிகளைத் துப்புரவு செய்தல் போன்ற நடவடிக்கைகளுக்கே இந்த நிதி தேவை எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ற-ஐ-5)

# வாக்காளர் பட்டியல் தயாரிப்பு இறுதிக் கட்டத்தை அடைந்தது

## 15ஆம் திகதியளவில் வெளியாகும்

யாழ்ப்பாணம்,டிசெ.9
இந்த ஆண்டுக்கான வாக்காளர் பெயர்ப் பட்டியல் தயாரிக்கும் நடவடிக்கைகள் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளன. இரட்டைப்பதிவுகள்தொடர்பான ஆய்வுகளே தற்போது மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. எதிர்வரும் 15 ஆம் திகதி வாக்காளர் பெயர்ப் பட்டியல் வெளியிடப்படும். - இவ்வாறு தேர்தல்கள் திணைக்கள வட்டாரங்கள்தெரிவித்துள்ளன.

வாக்காளர் பெயர்ப் பட்டியல் ஒவ்வொரு ஆண்டும் மீளாய்வு செய்யப்பட்டு வருகின்றன. அதனடிப்படையில் இந்த ஆண்டுக்குரிய வாக்காளர் பெயர்ப் பட்டியல் தயாரிக்கும் நடவடிக்கைகள் கடந்த மே மாதம் 15 ஆம் திகதி ஆரம்பமானது. வீடுவீடாக "பிசி" படிவங்கள் விநியோகிக்கப்பட்டு பின்னர் அவை மீளப்பெறப்பட்டன. அதனடிப்படையில் தயாரிக்கப்பட்ட வாக்காளர் பெயர்ப் பட்டியல் காட்சிக்கு வைக்கப்பட்டன.

குறித்த பெயர்ப் பட்டியல் தொடர்பில் ஆட்சேபனைகள் தெரிவிப்பதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. அதன்பின்னர்கோரிக்கைப் படிவத்தினூடாக விண்ணப்பித்தவர்களுக்கு விசாரணை நடத்தப்பட்டது. இந்த நடவடிக்கைகள் முடிவடைந்த நிலையில், இரட்டைப் பதிவுகள் மேற்கொண்டவர்களுக்கு, கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டு ஏதாவது ஒரு பதிவு நீக்கப்பட்டது.

இதனடிப்படையில் வாக்காளர் பெயர்ப் பட்டியல் இறுதிசெய்யப்பட்டுள்ளது. தற்போது, இரட்டைப் பதிவு தொடர்பான மீளாய்வு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. விரைவில் அதுவும் முடிவடையும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 15 ஆம் திகதி இறுதி செய்யப்பட்ட வாக்காளர் பெயர்ப் பட்டியலை வெளியிடுவதற்கு தேர்தல்கள் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இருப்பினும் சில வேளைகளில் இது ஒரு வார காலத்துக்கு ஒத்திவைக்கப்படலாம் என்றும் தேர்தல்கள் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ற-ஐ-5)

# தொடர்ச்சியான மழையால் வெள்ள அச்சத்தில் மக்கள்

யாழ்ப்பாணம், டிசெ.9
தொடர்ச்சியாகப் பெய்து வரும் பலத்த மழை காரணமாக வெள்ளப்பெருக்கு ஏற்படக் கூடும் என்று பொதுமக்கள் அச்சமடைந்துள்ளனர்.

நாட்டின் பல பாகங் களிலும் தொடர்ச்சியாக மழை பெய்து வருவதால் அதிகளவான தாழ்வான பிரதேசங்கள் வெள் ளத்தில் மூழ்கியுள்ளன. சிலகிராமங்களில் இருந்து மக்கள் இடப்பெயர்வையும் சந்தித்துள்ளனர்.



இந்த நிலையில் தற்போதும் கன மழை பெய்து வருவதால் பெரும் வெள்ளப்பெருக்கு ஏற்படும் எனும் அச்சத்தில் மக்கள் உள்ளனர்.

அதேவேளை யாழ்.நகரில் வெள்ள அபாயம் ஏற்படுவதைத்தடுக்கும்பொருட்டு கால்வாய்களைத்துப்புரவுசெய்யும்பணிகளை யாழ். மாநகரசபை ஆரம்பித்துள்ளது.

கனரக வாகனங்கள் உதவியுடன் சிவன் புது வீதியில்உள்ளகால்வாயில் சேறு அள்ளும் வேலைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன. அத்துடன்நகரின் முக்கிய கால்வாய்கள் அனைத்தும் சீர்செய்யப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஐ-7)



சிமெந்து ஏற்றி வந்த பாரவூர்தி வீதியை விட்டு விலகி வீதியோரத்தில் புதைந்தது. இந்தச் சம்பவம் நேற்று சாவகச்சேரி கனகன்புளியடி வீதியில் கெருடாவில் பகுதியில் நடந்துள்ளது. சாவகச்சேரிநகர்ப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையத்துக்கு வழங்குவதற் காகக் கொண்டு வரப்பட்ட சிமெந்தை ஏற்றி வந்த பாரவூர்தி, வீதியில் வந்த இ.போ.ச. பஸ்ஸக்கு வழி விடு வதற்காக வீதியோரம் செலுத்தப்பட்டபோது மழை வெள்ளம் தேங்கி நின்ற இடத்தில் புதைந்தது. பின்னர் கனரக வாகனத்தின் உதவியுடன் வாகனம் மீட்கப்பட்டது. (ற-ஐ-9)

# பெண்களுக்கு எதிரான வன்முறை வாரத்தை முன்னிட்டு நடைபவனி

யாழ்ப்பாணம்,டிசெ.9
பெண்கள் வன்முறைக்கு எதிரான வாரத்தை முன்னிட்டு சி.சி.எச். (சிறுவர் மகிழ்வுக்கான மையம்) நிறுவனத்தின் ஏற்பாட்டில் நடைபவனி நிகழ்வு இன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

குறித்த நடைபவனி யாழ்.வீரசிங்கம் மண்டபம் முன்பாக ஆரம்பித்து வைத்தியசாலை வீதி வழியாக, வேம்படிச் சந்தி ஊடாக கச்சேரி வளாகத்தை அடையவுள்ளது. அதில் செம்மஞ்சள் வர்ணத்திலான பாதாகைகளுடன் மக்களுக்கான துண்டுப் பிரசுரங்களும் வழங்கப்பட வுள்ளன. (ற-ஐ-ரி5)

## குருதிக் கொடை

யாழ்ப்பாணம், டிசெ.9
யாழ்ப்பாணம்வை.எம்.சி.எயின்125ஆண்டுநிறைவை முன்னிட்டு இன்று காலை 9 மணி முதல் ந.ப. 12 மணிவரை யாழ்.வை. எம்.சி.எ மண்டபத்தில் குருதித்தான நிகழ்வு இடம்பெறவுள்ளது. (ஐ-23)

## மானிய அடிப்படையில் தென்னங்கன்றுகள்

தென்னை அபிவிருத்தி அதிகார சபையால் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் தென்னங் கன்றுகள் மானிய அடிப் படையில் வழங்கப்படவுள்ளன.

காணி அனுமதிப் பத்திரம் இல்லாதோர் கிராம அலுவலரின் பரிந்துரையுடன் பிரதேச செயலரின் ஒப்பத்துடனான கடிதம் ஒன்றை ஒப்படைக்க வேண்டும். குறித்தவிண்ணப்பங்களை ஒவ்வொரு புதன்கிழமையும் ஒட்டுசுட்டான் கமநல சேவைகள் நிலையத்தில் ஒப்படைக்க முடியும். (ஐ-500)

# கடல் கடந்து பரீட்சை எழுதும் எழுவைதீவு மாணவர்கள்

யாழ்ப்பாணம்,டிசெ.9
எழுவைதீவில் பரீட்சை நிலையம் ஒன்றை அமைக்குமாறு பிரதேச மக்களால் வட மாகாண கல்வி அமைச்சிடம் விடப்பட்ட கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளதால் தினமும் கடல் மூலம் பயணம் செய்தே மாணவர்கள் பரீட்சை எழுதும் அவலம் தொடர்கின்றது.

யாழ்ப்பாண மாவட்டத்தின் தீவகம் கல்வி வலயத்தின் கீழ் தனித்தீவுகளாக 4 தீவுகள் உள்ளன. அவற்றில் 3 தீவுகளில் பரீட்சை நிலையங்கள் உள்ள போதிலும் மற்றுமோர் தீவான எழுவைதீவில்பரீட்சை மண்டபம் அமைக்கப்படுவது இல்லை. அதனால் வருடாந்தம் இடம் பெறும் பரீட்சைகளுக்கு இந்தத் தீவில் கல்வி பயிலும் மாணவர்கள் தினமும் 5 கடல் மைல் தூரம் கடல் பயணம் செய்தே பரீட்சைக்குத் தோற்றும் நிலைமை தொடர்கிறது.

2015 ஆம் ஆண்டு பரீட்சைக்கு குறித்த தீவில் ஒரு பரீட்சை மண்டபம் அமைக்குமாறு பிரதேசத்தின் சார்பில் கடந்தஏப்ரல்மாதம்வட மாகாண கல்வி அமைச்சு, மற்றும் வட மாகாண முதலமைச்சர் ஆகியோரிடம் கோரிக்கை விடப்பட்டது. அதை அமைப்பதற்கு மாகாணசபை உறுப்பினர் ஒருவர் கடும் முயற்சியும் மேற்கொண்டிருந்தார்.

எனினும் இந்த முயற்சியானது இந்த ஆண்டும் கைகூடாவில்லை. அதனால் எழுவைதீவின் மாணவர்கள் சீரற்ற கால நிலையிலும் தினமும் 5 கடல் மைல் தூரம் படகுப் பயணம் செய்து ஊர்காவற்றுறைப் பகுதியில் உள்ள பரீட்சை மண்டபத்தில் பரீட்சை எழுதும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பில் வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இரவீந்திரனுடன்தொடர்பு கொண்டு கேட்டபோது:

இந்த அமைச்சின் செயலாளராக கடந்த ஏப்ரல் மாத இறுதியில் கடமையேற்றேன். எனது காலத்தில் இந்தக் கோரிக்கை முன் வைக்கப்படவில்லை. இருப்பினும் தற்போது பரீட்சை ஆரம்பமாகிவிட்டதால் எதிர்வரும் காலத்தில் இது தொடர்பில் பரிசீலிக்கப்படும். - என்றார்.

இது தொடர்பில் கல்வி அமைச்சரிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது அவ்வாறான எந்தக் கோரிக்கையும் தனக்கு கிடைக்கப் பெறவில்லை எனத் தெரிவித்தார்.

எழுவைதீவில் ஜே- 39 கிராம சேவகர் பிரிவில் 162 குடும்பங்களைச் சேர்ந்த 700 இற்கும் மேற்பட்டோர் வசிக்கின்றனர். (ற-ஐ-101)

## சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை திறப்பு

வலி.தென்மேற்கு,டிசெ.9
சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்துக்கு அருகில் 2 கோடி 40 லட்சம் ரூபா செலவில் கட்டப்பட்டுள்ள சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரிபணிமனை இன்று புதன் கிழமை காலை 9.30 மணிக்குத் திறந்து வைக்கப்படவுள்ளது.

2 கோடி 40 லட்சம் ரூபா செலவில் சகல வசதிகளுடன் பணிமனை அமைக்கப் பட்டுள்ளது. இந்தக் கட்டடத்தை பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும் மாகாண சுகாதார அமைச்சர் ப. சத்தியலிங்கம் திறந்து வைப்பார். இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக பிரதி மாகாண சுகாதாரப் பணிப்பாளர் ஏ.கேதீஸ்வரன், யாழ். பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் நந்தகுமார் ஆகியோர் கலந்து கொள்வர். (ற-ஐ-ரி5,115)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருத்தப்படாத வீதிகளால் இத்தாவில் மக்கள் சிரமம்

கிளிநொச்சி, டிசெ.9

பச்சிலைப்பள்ளி பிரதேசத்திலுள்ள இத்தாவில், சதாபுரம் ஆகிய இரு வீதிகளும் நீண்ட காலமாகப் புனரமைக்கப்படாதுள்ளன.

அதனால் தாம் பெரும் சிரமங்களைஎதிர்கொண்டு வருகின்றோம் என்றும், இது குறித்துக் கடந்த காலங்களில் பல தடவைகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தியிருந்தபோதும், இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் அப்பகுதி பொதுமக்கள் தெரிவித்தனர்.

இத்தாவிலில் பிரதேச சபையால் நடத்தப்படும் ஆயுள்வேத வைத்தியசாலையும், சி.சி.த. பாடசாலையும் இயங்கி வருகின்றன. இத்தாவில் வீதி புனரமைக்கப்படாமல் இருப்பதால் இந்த வீதியைப் பயன்படுத்தும் மக்கள், குறிப்பாக நோயாளர்களும் மாணவர்களும் பெரும் சிரமங்களுக்குள்ளாகிறார்கள்.

ஏ-9 வீதியிலிருந்து குடியிருப்புக்குச் செல்லும் சதாபுரம் வீதியும் பலத்த சேதத்துக்குள்ளாகி இருப்பதால் அந்தப் பகுதியிலுள்ள மக்கள் போக்குவரத்துச் செய்வதில் பெரும் சிரமங்களுக்குள்ளாகிறார்கள். மீள்குடியேற்றப்பட்ட மக்களினதும் மாணவர்களினதும் நலனைக் கருத்தில் கொண்டு மேற்படி இரு வீதிகளையும் விரைவாகப் புனரமைத்துத் தரவேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக குறித்த பிரதேச சபைச் செயலாளரைத்தொடர்புகொண்டு கேட்ட போது இவ் வீதிகள் திருத்தம் தொடர்பாக உயரதிகாரிகளுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. அடுத்த வருடம் நிதி ஒதுக்கப்பட்டால் வீதி திருத்தம் செய்யப்படும் என அவர் தெரிவித்தார். (ற-21)



இராணுவ நோயாளர்களை ஏற்றிச் சென்ற இராணுவ அம்புலன்ஸ் கிளிநொச்சி இரணைமடுப் பகுதியில் நேற்றுமுன்தினம் தடம் புரண்டது. அதில் 4 இராணுவத்தினர் காயம் அடைந்தனர். காயமடைந்தவர்களில் இருவர் கிளிநொச்சி பாரதிபுரம் இராணுவ வைத்தியசாலையிலும், மற்றைய இருவரும் கிளிநொச்சி வைத்தியசாலையிலும் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஐ-101,ரி3)

# கிளி. வெள்ளப் பாதிப்பு நிவாரண இறுதிக் கட்ட நிதிக்கும் அனுமதி

### அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தகவல்

கிளிநொச்சி,டிசெ.9

கிளிநொச்சி மாவட்டத்தில் இடப்பெயர்வு மற்றும் வெள்ளப் பாதிப்புக்கான நிவாரண விநியோகத்தின் இறுதிக்கட்ட நிதியாக 5 மில்லியனுக்கான அனுமதி தற்போது கிடைத்துள்ளது. 2.5 மில்லியன் ரூபா முதல்கட்ட நிதியாக ஏற்கனவே கிடைத்துள்ளது என்று கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம்தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்தில் கடந்த நவம்பர் மாதம் இடம்பெற்ற கடும் மழையுடன் கூடிய கால நிலையால் மாவட்டத்தில் ஏற்பட்ட இடப்பெயர்வு மற்றும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான உடனடி நிவாரணப் பெறுமதியாக 7.5 மில்லியன் ரூபா தேவை என மதிப்படப்பட்டிருந்தது. எனினும் முதல் கட்டமாக 2.5 மில்லியன் ரூபா நிதி வழங்கப்பட்டது என்றும் அவர் தெரிவித்தார்.

> பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான உடனடி நிவாரணப் பெறுமதியாக 7.5 மில்லியன் ரூபா தேவை என மதிப்படப்பட்டி ருந்தது.

இந்த நிலையில் மிகுதித் தொகையான 5 மில்லியன் ரூபாவையும் வழங்குமாறு சம்பந்தப்பட்ட அமைச்சுக்குக் கடிதம் அனுப்பப்பட்டிருந்தது. அதற்கான அனுமதியும் தற்போது கிடைத்துள்ளது. இதனால் இதற்கான பணம் விரைவில் பெறப்பட்டு அதற்கான பணிகள் பூர்த்தி செய்யப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ற-ஐ-101)

# மண்டக்கல்லாறுப் பாலத்தை புனரமைக்க ரூ.450 மில். நிதி

### ஜெய்க்கா நிறுவனம் வழங்கவுள்ளது

கிளிநொச்சி,டிசெ.9

யாழ்ப்பாணம் - மன்னார் ஏ-32 வீதியில் உள்ள மண்டக்கல்லாறுப் பாலத்தை 450 மில்லியன் ரூபா நிதியில் புனரமைப்பதற்கு ஜெய்க்கா நிறுவனம் இணக்கம் தெரிவித்துள்ளது என கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

யாழ் - மன்னார் வீதியான ஏ-32 வீதியில் கிளிநொச்சி மாவட்ட எல்லைப்பரப்புக்குள், பூநகரிப் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள மண்டக்கல்லாறுப் பாலமானது குறித்த வீதிப் புனரமைப்பின் போது திருத்தப்படவில்லை.

இந்தப் பிரதேசமானது சுமார் 300 மீற்றர் நீளமானது. இந்தப் பிரதேசத்தில் அமைக்கப்பட வேண்டிய பாலமானது சாதாரண பாலம் போல் அமைக்க முடியாதது. குறிப்பிட்ட அளவு உயரம் கொண்ட மேம்பாலமாகவே அமைக்கப்பட வேண்டும் என இனம் காணப்பட்டிருந்தது.

ஏனெனில் மழைகாலத்தில் சில சந்தர்ப்பங்களில் இந்தப் பிரதேசத்தில் சுமார் 7 அடி உயரத்துக்கு நீர் பாயும் என கணிக்கப்பட்டமையால் ஓர் மேம் பாலமே கட்டப்பட வேண்டும் என வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் திட்டமிட்டனர்.

இவ்வாறு அமைக்கப்படும் மேம் பாலத்துக்கு பெரும் தொகைப் பணம் செலவாகும் எனக் கணிக்கப்பட்டு அதற்காக வீதி அபிவிருத்தி அதிகார சபையினரால் தனியான திட்டம் தயாரிக்கப்பட்டது.

அந்தத் திட்டத்துக்கான நிதியைப் பெறுவது சிரமமானதாக இருந்ததால் பாலம் அமைப்பதில் இது வரை காலமும் தாமதம் ஏற்பட்டது. இதனால் வருடாவருடம் ஏற்படும் மழைக் காலங்களில் பாலத்தின் ஊடான போக்குவரத்து நாள்கணக்கில் தடைப்படும் சூழல் ஏற்படுவதோடு பல நெருக்கடி நிலமைகளும் ஏற்படுகின்றன.

இதனால் கிளிநொச்சி மாவட்ட மக்கள் மட்டுமன்றி யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் மாவட்டத்தின் பயணிகளும் பெரும் நெருக்கடியை எதிர்கொள்வதாக சுட்டிக்காட்டப்பட்டதை அடுத்து, இந்த மேம்பாலத்தை அமைத்துத் தருமாறு வீதி அபிவிருத்தி அதிகார சபை உரிய முறைப்படி ஜெய்க்கா நிறுவனத்திடம் கோரிக்கை விடுத்திருந்தது. தற்போது ஜெய்க்கா நிறுவனம் பாலத்தை அமைக்க இணக்கம் தெரிவித்துள்ளது.

பாலம் அமைக்கும் பணியை அடுத்த வருடம் ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன.

இதேவேளை அண்மையில் பெய்த கடும் மழை காரணமாக அந்தப் பகுதியில் பெரும் வெள்ளம் பாய்வதனால் பாலம் ஊடான போக்குவரத்துப்பாதிக்கப்பட்டுபடகுமூலமேபோக்குவரத்து நடைபெறுகின்றது. (ஐ-101)

## விண்ணப்பம் கோரல்


முல்லைத்தீவு, டிசெ.9

இலங்கைத் தொழில் பயிற்சி அதிகார சபையால் முல்லைத்தீவு மாவட்டத்துக்கான முழுநேர மற்றும் பகுதிநேர கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான், பாலிநகர், ஆகிய தொழிற்பயிற்சி நிலையங்களில் இந்தக் கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியலாளர், இருசக்கர மற்றும் ஓட்டோ திருத்துநர், வீட்டு மின்னிணைப்பாளர், தையல், வெதுப்புநர், அழகுக் கலையும் சிகை அலங்காரமும், அலுமினியம் பொருத்துநர், கணினி வன்பொருள் திருத்துநர், நீர்க்குழாய் பொருத்துநர். ஆகிய கற்கை நெறிக்கான விண்ணப்பங்களே கோரப்பட்டுள்ளன.

இந்தக்கற்கைநெறிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புபவர்கள், இந்த மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை நீதிமன்ற வீதி, மாங்குளம் பிரதான வீதி, முல்லைத்தீவில் அமைந்துள்ளமாவட்டஅலுவலகத்தில் மேற்கொள்ள முடியும் என முல்லைத்தீவு தொழிற் பயிற்சி அதிகாரசபையினர் தெரிவித்துள்ளனர். (ற-ஐ-ரி5)



நெடுங்கேணி ஒலுமடு வேலடிக் கிராமத்தில் அண்மையில் மக்கள் குடியிருப்புக்குள் புகுந்த இரண்டு யானைக் குட்டிகள் காட்டுப் பகுதியை நோக்கிச் சென்ற போது கைவிடப்பட்ட மண் கிணற்றில் தவறி விழுந்தன. பின்னர் அவை வவுனியா மாவட்ட வனஜீவராசிகள் திணைக்களத்தினரால் மீட்கப்பட்டன. (ஐ-21.101)

# கமத்தொழில் திணைக்களத்துக்கு பெரும்பான்மையின சிற்றூழியர்

### முல்லைத்தீவு மாவட்ட வேலையற்ற இளைஞர், யுவதிகள் அதிருப்தி

முல்லைத்தீவு,டிசெ.9

முல்லைத்தீவு நகரில் இயங்கும் கமத்தொழில் அபிவிருத்தித் திணைக்களத்துக்கு கடந்த வாரம் அனுராதபுர மாவட்டத்தைச் சேர்ந்த இரண்டு பெண்கள் சிற்றூழியர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர். முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆயிரக் கணக்கான இளைஞர், யுவதிகள் வேலை வாய்ப்பின்றி உள்ள நிலையில் வெளி மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளமை குறித்து பல தரப்பினரும் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவிஆணையாளர் ஆர்விஜயகுமாரிடம் கேட்டபோது நீண்ட [illegible] சேர்ந்த பெண் சிற்றூழியர்கள் இருவர் நியமனக் கடிதங்களுடன் கடமையில் இணைந்து கொண்டனர் என்று தெரிவித்தார்.

> இந்த வெற்றிடத்துக்கு முல்லை மாவட்டத்தைச் சேர்ந்த இளைஞர், யுவதிகளில் தகுதியுடையவர்கள் நியமிக்கப்பட வேண்டும்

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த முல்லைத் தீவுமாவட்ட வேலையற்ற இளைஞர், யுவதிகள் இந்தப் பதவி வெற்றிடத்துக்கு முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த இளைஞர், யுவதிகளில் தகுதியுடையவர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்றனர். அவ்வாறு நியமனங்கள் வழங்கப்படாவிடில் வேலை யற்ற இளைஞர், யுவதிகள் ஒன்றிணைந்து போராட்டங்களை நடத்த வேண்டிய நிலைமை ஏற்படும் என்றும் சுட்டிக்காட்டினர். (ற-ஐ-102)

## அபினுடன் இருவர் வவுனியாவில் கைது

வவுனியா, டிசெ.9

2 கிலோ கிராம் அபின் போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் வவுனியாவில் இருவர் கைது செய்யப் பட்டுள்ளனர்.

இந்தப் போதைப் பொருள்களை இந்தியாவில் இருந்து கொண்டு வந்துள்ளனர் என்று கூறப்படுகின்றது. அத்துடன் இந்த வியாபாரத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் சாவகச்சேரி பிரதேசத்தில் வைத்து கைது செய்யப் பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏற்றுமதிப் பயிர்ச் செய்கை தொழில் வலயம் யாழில்

## யாழ். அரச அதிபர் வேதநாயகன் தகவல்

யாழ்ப்பாணம், டிசெ.9
யாழ்ப்பாணத்தில் ஏற்றுமதிப் பயிர்ச் செய்கைக்குரிய தொழில் வலயம் ஒன்றை உருவாக்குவது தொடர்பில் ஆரம்பக் கைத்தொழில் அமைச்சர் தயாக மகே தலைமையில் ஆராயப்பட்டுள்ளது என்று அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

அமைச்சர் தயாக மகே மற்றும் உலக வங்கிப்பிரதிநிதிகள் நேற்றுமுன்தினம் யாழ்.மாவட்டத்துக்கு வந்திருந்தனர். அவர்கள் யாழ்.மாவட்ட அரச அதிபர் மற்றும் பிரதேச செயலாளர்கள் உள்ளிட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடினர். அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அரச அதிபர் இவ்வாறு தெரிவித்தார்.

எமது விவசாயிகள் உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்ய முடியாமல் சில வேளைகளில் திணறுகின்றனர். அவர்களுக்கு சந்தை

> யாழ். விவசாயிகள் தமது உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்ய முடியாமல் சில வேளைகளில் திணறுகின்றனர். அவர்களுக்கு சந்தை வாய்ப்பை உறுதியாக ஏற்படுத்திக் கொடுப்பது குறித்தும் ஆராயப்பட்டுள்ளது.

வாய்ப்பை உறுதியாக ஏற்படுத்திக் கொடுப்பதற்கும், வருவாயை ஈட்டக் கூடிய வகையில், ஏற்றுமதிப் பயிர்ச் செய்கை உற்பத்தியை அதிகரிப்பது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது என்று அரச அதிபர் குறிப்பிட்டார்.

முந்திரிகை, இஞ்சி, பப் பாசி, வாழை போன்ற ஏற்றுமதிப் பயிர்ச் செய்கையை ஊக்குவிப்பதற்கும் அவற்றினூடாகப் பெறப்படும் விளை பொருள்களை விற்பனை செய்வதற்கு நிலையான சந்தை வாய்ப்பை உருவாக்கு வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கான தொழில் வலயம் ஒன்று உருவாக்கப்படவுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ற-ஜ-5)



## ஆலய சிலைகளுடன் 4 பேரை பிடித்தது சுன்னாகம் பொலிஸ்

### ஓட்டோவில் கடத்திச் சென்றபோது

யாழ்ப்பாணம்,டிசெ.9
ஆலயங்களில் சிலைகளைத் திருடினர் என்று சந்தேகிக்கப்படும் 4 பேர் கொண்ட குழு ஒன்று நேற்று முன்தினம் இரவு ஏழாலைப் பகுதியில் வைத்து சுன்னாகம் பொலிஸாரால் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளது.

யாழ்.குடா நாட்டில் உள்ள ஆலயம் ஒன்றில் தேருக்குப் பயன்படுத்தப்படும் சிலைகள் பலவற்றைத் திருடி ஓட்டோவில் கடத்திச் சென்றபோதே குறித்த கும்பல் சிக்கியுள்ளது.

குறித்த 4 பேரும் மல்லாகத்தைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது. அவர்களிடம் இருந்து ஒரு யாழி, 16 பாவைகள், 4 நந்திகள் என்பன மீட்கப்பட்டுள்ளன என்று சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி துஸ்மந்த தெரிவித்தார். சிலைகளைக் கடத்துவதற்குப் பயன்படுத்திய ஓட்டோவும் கைப்பற்றப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

அதேவேளை, குறித்த பொருள்கள் எந்த ஆலயத்தில் இருந்து திருடப்பட்டுள்ளன என்ற முழுமையான விவரங்கள் கிடைக்கவில்லை. அதனால் இவ்வாறான பொருள்கள் ஆலயங்களில் திருட்டுப் போயிருந்தால் ஆலய நிர்வாகத்தினரை உடனடியாக சுன்னாகம் பொலிஸாருடன் தொடர்பு கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஜ-101)

## யாழில் தொடரும் மழையால் விவசாயச் செய்கை பாதிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.9
யாழ். குடாநாட்டில் தற்போது பெய்து வரும் மழையால் இந்த வருடத்துக்கான புகையிலைச் செய்கை மற்றும் உருளைக்கிழங்குச் செய்கை என்பன பாதிக்கப்பட்டுள்ளன என்று விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

அத்துடன் பயிரிடும் நடவடிக்கைகளும் தாமதம் அடைந்துள்ளன என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

விவசாயிகளால் ஏற்கனவே நடுகை செய்யப்பட்ட புகையிலைக் கன்றுகள் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டன. இதைவிடசில இடங்களில்புகையிலைப் பயிர்கள் மழையால் நோய்த் தாக்கத்துக்கும் இலக்காகியுள்ளன.

தீவுப்பகுதியில் அனேகமான விவசாயிகள் புகையிலைச் செய்கையில் ஈடுபட்டுவருகின்றனர். அதேசமயம் இணுவில் பகுதியில் அண்மையில் பெய்த கடும்மழையால்புகையிலை நாற்றுகள் அழிந்துள்ளன. இதனால் இந்தவருடம் புகையிலைச் செய்கையில் பெரும் பாதிப்பு ஏற்படும் என விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இதேவேளை – தற்போது விதை உருளைக் கிழங்கு நடுகைக் காலமாகும். எனினும் மழை தொடர்ந்த வண்ணம் உள்ளதால் நடுகை செய்யும் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன என்று யாழ். மாவட்ட உருளைக்கிழங்கு உற்பத்தியாளர் விற்பனை கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் எஸ். தெய்வேந்திரம் தெரிவித்தார்.

இதுவரைக்கும் எழுநூறு அந்தர் வரையிலான விதை கிழங்கை விவசாயிகள் பெற்றுள்ளனர். மீதியாகவுள்ள விதை கிழங்குகள் சமாச களஞ்சியத்தில் வைக்கப்பட்டுள்ளன. மேட்டுநிலவிவசாயிகள் சிலரே விதை உருளைக்கிழங்கை நடுகைசெய்துள்ளனர். மழைதொடர்ந்த வண்ணம் உள்ளதால் தாழ்நில விவசாய நிலங்களில் நடுகை செய்வோர் நடுகையை மேற்கொள்ளமுடியாத நிலையில் உள்ளனர். இந்த மழையின் தாக்கம் குறைவடைந்த பின்னரே நடுகையை ஆரம்பிக்க முடியும் என்றும் அவர் தெரிவித்தார். (ற-ஜ-17)

## டெங்கு விழிப்புணர்வு செயற்பாடு

சாவகச்சேரி, டிசெ.9
சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயத்தில் மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்களுக்கு டெங்கு தொடர்பான விழிப்புணர்வுச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கொடிகாமம்பிரிவுபொதுச் சுகாதாரப் பரிசோதகர் றென்சன் றொனால்ட் டெங்கு தொடர்பான கருத்துரைகளை வழங்கினார். அத்துடன் டெங்கு விழிப்புணர்வு தொடர்பான துண்டுப் பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன என்று கழகத் தலைவர் லயன் பு.தினேஸ்குமார் தெரிவித்தார். (ஜ-9)

## யாழில் மீண்டும் பொலிஸ் காவலரண்

யாழ்ப்பாணம்,டிசெ.9
யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தால் யாழ். நகரில் விசேட பொலிஸ் காவலரண் ஒன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்கப்பட்டது. நகரில் இடம்பெறும்குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்தும் முகமாக இந்தக் காவலரண் அமைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பகுதியில் முன்னர் இருந்த பொலிஸ் காவலரண் புங்குடுதீவுப் பாடசாலை மாணவியின் படுகொலையைக் கண்டித்து நகரில் இடம்பெற்ற முழு அடைப்பின் போது இனந்தெரியாதவர்களால் அடித்து நொறுக்கப்பட்டிருந்தது.

இந்தநிலையில் தற்போது மீண்டும் பொலிஸ் காவலரண் அமைக்கப்பட்டுள்ளது. (ற-ஜ-17)

## பரிசில் வழங்கல் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,டிசெ.9
குருநகர் சமூக அபிவிருத்திக்கான இணையத்தின் 2015 ஆம் ஆண்டுக்கான பரிசில் வழங்கல் நிகழ்வுகள் நாளை வியாழக்கிழமை மாலை 4.30 மணிக்கு சென்.ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலையின் றோமன் அரங்கில் நடை பெறவுள்ளன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக புனித யாகப்பர் ஆலயத்தின் பங்குத் தந்தை ஆர்.சீ.எக்ஸ். நேசராஜாவும், சிறப்பு விருந்தினர்களாக சென்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலையின் அதிபர் ஏ.மரியதாசன், சென்.ஜேம்ஸ் மகாவித்தியாலய ஆண்கள் பாடசாலை அதிபர் ஏ.எம்.சீ. மகேந்திரன் ஆகியோரும் கலந்துகொள்வர். (ற-ஜ-ரி5)

## கண்டாமை வீதியில் கற்கள்: பொதுமக்கள் பெரும் சிரமம்

### சீர்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.9
சுழிபுரம், கண்டாமை வீதியில்போடப்பட்டுள்ளபெரும் கற்களால் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்ளுகின்றனர். இதனால் விபத்துக்களும் அதிகரித்துள்ளன. சம்பந்தப்பட்டவர்கள் இதுகுறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வலிகாமம் மேற்குப் பிரதேச சபையின் நிர்வாகத்துக்கு உட்பட்ட சுழிபுரம் கண்டாமை வீதியின் திருத்தப் பணிகள் முழுமையாக மேற்கொள்ளப்படாதிருந்தது. அதனால் கடந்த மழையின் போது குறித்த வீதியில் வெள்ளம் தேங்கி நின்றுள்ளது. அதை யடுத்து குறித்த வீதிக்கு பிரதேச சபையால் பெரும் கருங்கற்கள் கொட்டப்பட்டன. கற்கள் கொட்டப்பட்டு பல நாள்கள் கடந்துள்ள போதும், அவை வீதியில் பரவப்படவில்லை என்று பொதுமக்கள் சுட்டிக்காட்டுகின்றனர். இது தொடர்பாக வலிகாமம் மேற்கு பிரதேச சபை செயலாளரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது;

வீதியில் கற்கள் போடப்பட்டுள்ளன. வீதி திருத்துவதற் [illegible] அந்த வீதியில் கற்கள் பரவப்படும் என்று பதிலளித்தார். (ஜ-21)



கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்பப் பாடசாலையில் கடந்த தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. 9 மாணவர்களுக்கு லண்டனில் வதியும் சு.சபேசன் அனுசரணையுடன் சைக்கிள்கள் வழங்கப்பட்டன. பாடசாலை அதிபர் திருமதி பு.மங்களேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக திருமதி சிவயோகமணி சுப்பிரமணியமும், சிறப்பு விருந்தினர்களாக கொடிகாமம் [illegible]த்திய கல்லூரி அதிபர் க.இரவீந்திரா, [illegible]ச்சி கல்வி வலய ஆரம்பப் பிரிவு ஆசிரிய ஆலோசகர் ந.திருவாசகன் ஆகியோரும் கலந்து கொ ண்டனர். (ற-ஜ-9)

## விவசாய உபகரணம் கையளிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.9
கோப்பாய் பிரதேச செயலகத்தால் வளலாய் பகுதியில் தெரிவு செய்யப்பட்ட 108 குடும்பங்களுக்கு விவசாய உபகரணங்கள் மற்றும் வீட்டுத் தோட்டம் மேற்கொள்வதற்குரிய விதைகள் வழங்கப்பட்டுள்ளன.

வளலாய் மேற்கில் 50 பயனாளிகளுக்கும், வளலாய் வடக்கில் 58 பயனாளிகளுக்குமே வெங்காயம், உருளைக்கிழங்கு, மண்வெட்டி, மருந்து தெளிப்பான் போன்றவை வழங்கப்பட்டுள்ளன.

'யு.எஸ்.எய்ட்டின்' உதவியுடன், சேவாலங்கா தன்னார்வத் தொண்டு நிறுவனம் ஊடாக இவை தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன என்று பிரதேச செயலகத்தகவல்கள் தெரிவித்தன. (ற-ஜ-107)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



## அனுத்தமா ஜெய்ராம்

உளந் தேற மொழியு முண்டோ!
உன் நினைவழிய வழியுமுண்டோ
ஒன்றாக நாமிணைந்து வகுப்பறையில்
ஒன்றித்த நட்புணர்வை மறப்போமா
களந்தேடி நாம்பிரிந்து வாழ்ந்தாலும்
பாசத்தின் பரிமாணம் பாவையே அறியாயோ
நேசத்தின் ஒளிவிளக்காய் நெஞ்சமெலாம்
நிறைந்தவளே,அனுத்தமா எம்மவளே!
உன் துயரில் உறைந்திருக்கும் கணவர்
உற்றார், உறவோடு நாமும் இணைகின்றோம்.
நின் ஆன்மாவின் சாந்திக்காய்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



(66789) (13.15)

A/L, 99 BATCH

உன் அருமைத் தோழிகள்
சுண்டுக்குளி
மகளிர் கல்லூரி.


# மகேஸ்வரனின் கொலைபற்றி சகோதரர்களிடம் கேளுங்கள்

## நாடாளுமன்றத்தில் கூறினார் டக்ளஸ்

கொழும்பு, டிசெ 9

முன்னாள் அமைச்சர் மகேஸ்வரனைக் கொலை செய்த கொலையாளி யார் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டுமாயின், அவரது சகோதரர்கள் ஐவரையும் அழைத்துக் கேட்கவேண்டும் என்று ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா நேற்று முன்தினம் சபையில் தெரிவித்தார்.

அத்துடன், இந்த விடயம் தொடர்பாக விசாரணைகளை முன்னெடுக்க வேண்டுமாயின்,விசாரணை ஆணைக்குழுவொன்றை நிறுவ வேண்டும் என்றும் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன் தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றியபோதே மேற்கண்டவாறு குறிப்பிட்ட அவர் மேலும் குறிப்பிடுகையில்,

முன்னாள் அமைச்சர் மகேஸ்வரன் படுகொலை தொடர்பாக ஒருசிலர் ஊளையிடுகின்றனர். அவர் எவ்வாறு கொலை செய்யப்பட்டார். யார் கொலை செய்தார் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டுமாயின், அவரது சகோதரர்கள் ஐந்து பேரையும் அழைத்துக் கேட்டால் தெரியும். யார் கொலையாளி என்பது தெரிய வரும்.

இந்த விடயம் தொடர்பாக நீதிமன்றத் தீர்ப்பொன்றுள்ளது. எமது தேசியத் தலைவர் அமிர்தலிங்கத்தைக் கொலை செய்த கொலையாளி கையும் மெய்யுமாகப் பிடிபட்டார். அதேபோல மகேஸ்வரனைக் கொலைசெய்த கொலையாளியும் கையும் மெய்யுமாகப் பிடிபட்டார். இதில் சந்தேகங்கள் இருப்பின், மேல் நீதிமன்றத்தை நாடலாம். புதிய அரசின் 100 நாள் வேலைத் திட்டத்தில் இதற்கு நடவடிக்கை எடுத்திருக்கலாம். ஆனால், அவ்வாறு செய்யாமல், தமது அரசியல் வியாபாரத்துக்காகப் பேசிக்கொண்டிருக்கின்றனர். இவ்வாறு பேசி இந்தச் சபையையும், மக்களையும் திசை திருப்பக் கூடாது.

எம்மீது சில குற்றச்சாட்டுகள் முன்வைக் கப்படுகின்றன. ஆனால், அதை யார் செய்தார் என்பது இப்போது வெளியாகி வருகின்றது.

மகேஸ்வரன் கொலை தொடர்பாகச் சந்தேகம் இருப்பின், மேல் நீதி மன்றத்தை நாடலாம்.மேலும் விசாரணைக் குழுவொன்றையும் அமைக்கலாம்.

இந்தக் கொலையாளிக்கு இந்தச் சபையிலுள்ள உறுப்பினர் ஒருவர்தான் இறுதியாகத் தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தியுள்ளார் என அரசல் புரசலாகக் கதை உள்ளது. எனவே, இந்த விடயம் தொடர்பாக விசாரணை முன்னெடுக்கப்பட்டு உண்மை வெளிக்கொண்டு வரப்பட வேண்டும் - என்றார். (த-சி)

# உன்னிச்சை நீர்வழங்கல் திட்டம் மூலம் தமிழ்க் கிராமங்களுக்கும் குடிதண்ணீர்

## அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ 9

உன்னிச்சை நீர்வழங்கல் திட்டத்தினூடாக அருகிலுள்ள தமிழ்க் கிராமங்களுக்கு குடிதண்ணீர் வழங்கப்படமாட்டாது என எவரும் அச்சமடையத் தேவையில்லை என்றுநீர்வழங்கல் வடிகாலமைப்புத்துறை அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

உன்னிச்சைக் குளத்தின் அணைக் கட்டு நீர்மட்டத்தை மேலும் 2 அடிகள் உயர்த்தினால் அனைத்துக் கிராமங்களுக்கும் குடிதண்ணீர் வழங்கலாம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாடாளுமன்றத் தில் நேற்று முன் தினம் திங்கட்கிழமை இடம் பெற்ற நீர் வழங்கல் வடிகாலமைப்புத்துறை அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே மேற்கண்டவாறு குறிப்பிட்ட அவர் மேலும் குறிப்பிடுகையில்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் உன்னிச்சை நீர்வழங்கல் திட்டம் தொடர்பாக சில சந்தேகங்களை வெளியிட்டிருந்தனர். இந்தத் திட்டத்தை முன்னெடுக்கும் போது குளத்தை அண்டியுள்ள தமிழ்க் கிராமங்களுக்கு முன்னிலை வழங்கிய பின்னரேஏனைய பகுதிகளுக்குக் குடி தண்ணீர் எடுத்துச் செல்லப்படும்.

அதேபோன்று யான்ஓயா நீர் வழங்கல் திட்டமும் முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது - என்றார். (த-சி)





இலங்கையில் இறக்குமதி செய்து விநியோகிப்போர்,
வரை. ஸ்டபர்ட் மோட்டார் (தனியார்) நிறுவனம்
பிரதான காரியாலயம் : 718/7, மருதானை வீதி, கொழும்பு 10, தொ: 011-7607200 மோட்டார் சைக்கிள் காட்சியறை : 561, கொழும்பு வீதி, ரத்தனபிட்டிய, தொ: 011-7607450
மட்டக்களப்பு கிளை : இல 426, திருகோணமலை வீதி, மட்டக்களப்பு தொ.பே: 065-7607200 மற்றும் நாடளாவிய ஹொண்டா விற்பனையாளர் வலையமைப்புகளூடாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்சியின் தலைமையை விக்னேஸ்வரன் ஏற்கலாம்

## அதனைத் தீர்மானிப்பது மக்களும் கட்சியுமே என்கிறார் சம்பந்தன்

மட்டக்களப்பு, டிசெ. 9

வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன்கட்சித்தலைமைப்பொறுப்பை ஏற்கலாம். அது அவரது உரிமை. இதனைத் தீர்மானிப்பது கட்சியும் மக்களுமே. ஐயா நீங்கள் போக வேண்டும். விக்னேஸ்வரனை நியமிக்கப் போகின்றோம் என்றால் உடனடியாக அதனை நான் ஏற்றுக் கொள்வேன் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமாகிய இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில்கடந்தஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற கட்சி ஆதரவாளர்களுக்கிடையிலான கலந்துரையாடல் இலங்கை தமிழரசுக் கட்சியின் மாவட்டக் காரியாலயத்தில் இடம்பெற்றது.

இதன்போது தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் மற்றும் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி விக்னேஸ்வரன் ஆகியோருக்கு இடையிலான முரண்பாடு தொடர்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உபதலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான பொன்.செல்வராசா எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து சம்பந்தன் மேலும் தெரிவிக்கையில்,

கட்சிக்குள் முரண்பாடு உள்ளது, அதனை மறுப்பதற்கு இல்லை. ஆனால் முரண்பாடுகள் அனைத்தும் கட்சிக்கு வெளியில் செல்லக் கூடாது. அனைத்து விடயங்களும் பேச்சுக்களின் மூலம் தீர்க்கப்பட வேண்டும்.

ஜனநாயகக் கட்சி என்ற ரீதியில் முரண்பாடுகள் காணப்படும், அது ஒருபெரிய விடயமல்ல. ஆனால் அவை ஊடகங்களுக்குச் செல்ல வேண்டிய அவசியம் இல்லை.

மேலும் சுமந்திரனுக்கும் வடமாகாண முதலமைச்சருக்குமிடையில் முரண்பாடுகள் காணப்படுகின்றன. அவை நாடாளுமன்றத் தேர்தலின்போது வடமாகாண முதலமைச்சர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை முழுமையாக ஆதரிக்கவில்லை. அவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடாக இலங்கைத் தமிழரசுக் கட்சி சின்னத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர். எனவே அந்தக் கட்சியை ஆதரிப்ப தற்கு அவருக்கு ஒரு கடமை இருக்கின்றது. ஆனால் அவர் ஆதரிக்கவில்லை, ஆதரிக்காமல் விட்டது மாத்திரமல்ல நான் மௌனியாகப் போகின்றேன், ஊமையாகப் போகின்றேன் எனத்தெரிவித்து அறிக்கைகள் வெளியிட்டமை வேறொரு கட்சிக்கு ஆதரவளிப்பதாக அமைந்தமையினாலேயே இருவருக்குமிடையில் முரண்பாடுகள் ஏற்பட்டன.

இதனால் தமிழரசுக் கட்சியின் கூட்டத்தில் எம்.ஏ.சுமந்திரன், வடமாகாண முதலமைச்சரை கட்சியில் இருந்து நீக்க வேண்டும் என கோரிக்கை விடுத்தார். அதனை நான் பேசித்தீர்த்துக் கொள்வோம் என கூறியிருந்தேன்.

எனினும் சுமந்திரன் ஆஸ்திரேலியாவுக்குச் சென்றபோது ஊடகம் ஒன்றுக்கு அவ்வாறு பதிலளித்திருக்கக் கூடாது, கட்சி நடவடிக்கை எடுக்கும் என்று கூறிய பின்னர் அவர் அதனை ஊடகத்திடம் தெரிவித்திருக்க வேண்டிய அவசியம் இல்லை.

சில சமயங்களில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவோ, அல்லது ஆட்சியில் உள்ள வேறு நபர்களோ எங்கள் மத்தியில் சிறு சிறு விடயங்கள் தொடர்பாக வேற்றுமையை ஏற்படுத்துவதன் மூலம் அரசியல் தீர்வைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

இதற்கு நாங்கள் பலியாகக் கூடாது. வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் கட்சித்தலைமைப் பொறுப்பினை ஏற்கலாம். அது அவரது உரிமை அதனைத் தீர்மானிப்பது கட்சியும் மக்களுமே. நாங்கள் ஆத்திரப்பட வேண்டிய அவசியம் இல்லை.

அத்துடன் முதலமைச்சருக்கு ஆதரவாகக் குப்பைத் தொட்டியில் போடப்பட்ட ஆனந்தசங்கரியும், கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் இருக்கின்றனர். இதற்கும் எங்களுக்கு ஆட்சேபனை இல்லை.

அவரை முதலமைச்சராக்கியது நான். அவரை முதலில் போய்க் கேட்டது நான். எமது கட்சி கூடி இது தொடர்பில் முதன் முதலாக பேசியபோது அவருக்கு கட்சிக்குள் எவரும் ஆதரவாக இருக்கவில்லை. சேனாதிராசா மௌனம் சாதித்தார்.

அவரின் பெருந்தன்மையின் வெளிப்பாடாக இறுதி நேரத்தில், அண்ணனின் கருத்தோடு நீங்கள் அனைவரும் ஏற்று வந்தால் அவரைத் தான் நியமிக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

இதன் பின்னர் அனைவரும் கூடி எடுத்த முடிவின் பிரகாரமே நாங்கள் நியமித்தோம். ஆனால் அவர் தற்போது தனி வழியில் போய்க் கொண்டு இருக்கின்றார்.

நான் அவரை நிறுத்தமாட்டேன். இது மக்களின் முடிவு. நான் இந்தப் பதவியில் இருப்பது மக்களின் முடிவு. ஐயா நீங்கள் போகவேண்டும், விக்னேஸ்வரனை நியமிக்கப் போகின்றோம் என்றால் உடனடியாக அதனை நான் ஏற்றுக் கொள்வேன் –என்றார். (இ)

# வவுச்சர் திட்டத்தில் இணையமாட்டோம்

## இலங்கை ஆசிரியர்கள், அதிபர்கள் தொழிற்சங்க ஒன்றியம் அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 9

அடுத்த வருடம் மாணவர்களுக்கான சீருடைகளைப் பெற்றுக் கொள்ள வவுச்சர் வழங்கும் திட்டத்தில் தாம் ஈடுபடப் போவதில்லை என, ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் தொழிற்சங்க ஒன்றியம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று முன் தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் உடனான சந்திப்பின்போதே ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் தொழிற்சங்க ஒன்றியம் இவ்வாறு தெரிவித்துள்ளது.

வவுச்சர் முறைமை அறிமுகப்படுத்தப்பட்டமையினால் மாணவர்கள் மாத்திரமன்றி பெற்றோர்களும் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகவும் அந்தச் சங்கம் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளது. இதன் காரணமாக எதிர்வரும் ஆண்டிலிருந்து இந்த நடைமுறையைப் பின்பற்றத் தாம் இடமளிக்கப் போவதில்லை என ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது. (த–சி)

ஒளிப் படச் செய்தி

# எயிட்ஸை ஒழிப்போம்



உலக எயிட்ஸ் தினமாக டிசம்பர் முதலாம் திகதி கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. அதை முன்னிட்டு வவுனியா பொது வைத்தியசாலையில் ஏற்பாடு செய்யப்பட்ட எயிட்ஸ் தின விழிப்புணர்வு நிகழ்வு நேற்றுக் காலை 9 மணியளவில் வைத்தியசாலையின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சுகாதார அமைச்சர் மருத்துவர் ப. சத்தியலிங்கம் கலந்து கொண்டார். மற்றும், சிறப்பு விருந்தினராக சுகாதார வைத்திய பணிப்பாளர் திருமதி. வி. பசுபதிராஜா, மலேரியா தடுப்பு இயக்கத்தின் பணிப்பாளர் மருத்துவர். எம். மகேந்திரன், வவுனியா உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் வசந்த விக்கிரமசிங்க, தாதிய பயிற்சிக் கல்லூரி பதில் பணிப்பாளர் ஜி.ஆர், பண்டாரவைத்தியசாலையின் பணிப்பாளர் மருத்துவர் கு. அகிலேந்திரன், பதில் பணிப்பாளர் இளைஞர் சேவைகள் சபை எஸ்.பி. ஜெயமகா ஆகியோர் கலந்து கொண்டனர்.

எயிட்ஸ் தொடர்பான விழிப்புணர்வு உரையை வடமாகாண சுகாதார அமைச்சர் வழங்கினார். பொது மக்களை விழிப்புணர்வு அடையச் செய்யும் செயற்திட்டத்தின் ஓர் அங்கமாக கொட்டும் மழையில் விழிப்புணர்வுப் பேரணி வைத்தியசாலையிலிருந்து ஆரம்பமாகி கண்டி வீதி வழியாக சென்று மணிக்கூட்டு பஜார் வீதி வழியாக இலுப்பையடிச் சந்தி சென்று மறுபடியும் வைத்தியசாலையைச் சென்றடைந்தது.










உழைப்பின் உயர்வினை
அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்





(04.12.2015) Green Grass Hotel இல் நடைபெற்ற விருது வழங்கல் நிகழ்வில் தேசிய தொழில் முயற்சி அதிகார சபையினால் வழங்கப்பட்ட Northern Entrepreneurs Awards - 2014 இல் Best Innovative Award எனும் விருதினைப் பெற்றுக்கொண்ட

அன்னை கடலுணவு வரையறுக்கப்பட்ட கம்பனி
(Annai Sea Foods (pvt) Ltd)
அமலன், ஜோன்
சகோதரர்களின் கடின உழைப்பிற்கும், நிறுவனத்தின் பணியாளர்களுக்கும்
பிறக்கும் பாலன் யேசு வளமுடன் வாழ்வளிக்க வாழ்த்துகின்றோம்.
குருநகர் பேர்கன் ஒஸ்லோ (நோர்வே)
கல்வி இணையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரக்கட்சியினரிடம் ஜனாதிபதி எதிர்பார்த்த ஆதரவு கிடைக்கவில்லை



**சண்டே ரைம்ஸ்
கட்டுரையில் இருந்து ரெங்கன்**

கடந்த புதன்கிழமையன்று மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் வரவு - செலவுத்திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்டமையானது அரசுக்கு ஒரு நல்ல சகுனம் என்று கூறலாம். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை முற்றுமுழுதாக ஒழித்துக்கட்டவும் புதிய அரசமைப்புச் சட்டமொன்றை அறிமுகப்படுத்தவும் இது ஒரு முன்னகர்வாக இருக்கமுடியும். நாடாளுமன்றத்தில் அதனை நிறை வேற்றுவதற்கான உறுப்பினர் எண் ணிக்கை இப்போது ஒரு பிரச்சினையாகத் தென்படவில்லை. அதன் நிமித்தம் அரசமைப்பொன்றை உருவாக்கிக் கொள்ளும் விதத்தில் நாடாளுமன்றம் அரசமைப்பு சபையாக அமர்வதற்கான தீர்மான வரைவொன்றை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அடுத்த மாதம் சபையில் தாக்கல் செய்யவிருக்கிறார்.

இவை எல்லாம் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் நல்ல சமிக்ஞைகளாகக் காணப்பட்டாலும் இருவருக்குமே சங்கடம் ஏற்படுத்தக்கூடிய அம்சங்களும் இருக்கவே செய்கின்றன.

ஜனவரி 8 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றதில் இருந்தே சிறிசேன சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவியை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான நடவடிக்கைகளில் தொடர்ந்து கவனம் செலுத்தி வந்துள்ளார். என்றாலும் வாக்களிப்பானது சுதந்திரக்கட்சி இரண்டாக உடைந்திருப்பதை வெளிக்காட்டுவதாகவே காணப்படுகின்றது.

அவரது முயற்சிகளில் எவ்வளவுதான் சலுகை மற்றும் ஊக்கமளிப்புக்கள் வழங்கப்பட்டிருந்தாலும் அது பயனளித்திருப்பதாகத் தெரியவில்லை. ஒரு குறிப்பிட்ட முக்கியஸ்தர்களான அமைச்சர்களும் பிரதி அமைச்சர்கள் மற்றும் பலர், முன்னாள் ஜனாதிபதிக்கு விசுவாசமாக இருந்தவர்கள் இப்போது சிறிசேனவை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்தான். வாக்களிப்பை அவதானிக்கையில் ஏனையவர்கள் இப்போதும் முன்னாள் ஜனாதிபதியின் ஆதரவாளர்களாகவே காணப்படுவது தெளிவாகியுள்ளது. அவர்கள் வெளிப்படையாகவே சிறிசேனவைப் புறக்கணித்து வரவு - செலவுத் திட்டத்தை எதிர்த்து வாக்களித்துள்ளார்கள். முன்பு அவர் எச்சரித்தது போன்று எதிர்ப்பாளர்கள் மீது நடவடிக்கை எடுப்பாரா? என்பது கேள்விக்குறியாகவே இருக்கின்றது. ஆனால், அவ்வாறு அவர் செய்யும் நிலைப்பாட்டில் இப்போது இல்லை என்பதாகவே கட்சி முக்கியஸ்தர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். இது ராஜபக்ச மற்றும் அவரது குடும்பத்தினர் மீது அதிக அழுத்தங்களை ஏற்படுத்துவதாய் இருக்கும். குற்றச்செயல்கள், ஊழல்கள் மற்றும் நிர்வாகச் சீர்கேடுகள் இதில் உள்ளடங்குவதாய் இருக்கும்.

### ராஜபக்ச நிகழ்த்திய உரை

வரவு - செலவுத் திட்ட குழுநிலை விவாதங்களின்போது பாதுகாப்பு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீது முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச நிகழ்த்திய உரையை பலர் கண்டு கொள்ளாமல் இருந்துவிட்டார்கள். மோசமான பயங்கரவாதிகளை அரசு அவசரப்பட்டு விடுதலை செய்து வருகின்றது. சில அக்கறையுள்ள வட்டாரங்களில் இருந்து வரும் நெருக்குதல்கள் காரணமாக நாட்டின் பாதுகாப்பை கவனத்தில் கொள்ளாமல் அரசு செயற்படுகின்றது என்று அவர் குற்றஞ்சாட்டினார். இராணுவத்தினரை சிறையில் அடைப்பதற்குப் பயங்கரவாதத் தடைச்சட்டம் பயன்படுத்தப்படுகின்றது. இராணுவத்தினர் மீது அவர்களின் நடத்தைகள் தொடர்பாக விசாரணைகள் எதுவும் நடத்தப்பட வேண்டுமானால் இராணுவத்துக்குரிய சட்டங்களின் கீழ்அல்லது சாதாரண பொதுச் சட்டங்களின் கீழ் அவர்கள் விசாரிக்கப்பட வேண்டும். நாட்டுக்காகதியாகங்களைச் செய்தவர்களான இராணுவத்தினருக்கு வழங்கவேண்டிய அடிப்படைக் கௌரவமாகும் அது -என்று கூறினார் ராஜபக்ச.

வெளிநாட்டு அதிகாரிகள் எமது நாட்டுக்கு வருகை தந்திருந்தார்கள். வடக்கு மாகாணத்திலிருந்து இராணுவத்தை வெளியேற்றுவது குறித்து இலங்கைத் தலைவர்களுக்கு நெருக்குதல் கொடுத்துள்ளார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

முன்னாள் ஜனாதிபதிக்கும் இன்றைய ஜனாதிபதிக்கும் இடையில் காணப்படும் முரண்பாடுகள் வெளிப்படையாகத் தெரிகின்றன. தனது பிள்ளைகள் தமது பயணங்களுக்கு ஹெலிகொப்டர்களைப் பாவிப்பதில்லை. தாம் வெளிநாடுகளுக்கு அதிகாரபூர்வமான பயணங்கள் மேற்கொள்ளும் போது அளவுக்கு அதிகமான அதிகாரிகளை அழைத்துச் செல்வதில்லைஎன்று சிறிசேன தெரிவித்திருந்தமை ராஜபக்ச மீதான நேரடித் தாக்குதலாகும். அதே நேரம் ராஜபக்ச அதற்குப் பதிலளிப் பது போல், எனது நிர்வாகத்தை இன்று குறை கூறுகிறவர்கள்- எனது அமைச் சரவையில் இருந்த வர்களும் கூட அந்தக் காலத்தில் வாய்திறந்ததில்லை என்று கூறியமை தமது முன்னாள் சுகாதார அமைச்சரான சிறிசேன மீதான நேரடித் தாக்குதலாகும்.

எது எவ்வாறாயினும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என்ற குடையின் கீழேயே வருகிறார்கள். அந்தக் கொடியின் கீழ்தான் ஓகஸ்ட் 17 ஆம் திகதிய நாடாளுமன்றத் தேர்தலில் அவர்கள் போட்டியிட்டார்கள். மொத்தம் 95 ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உறுப்பினர்கள் ஓகஸ்ட் தேர்தலில் வெற்றிபெற்றார்கள். அதில் அரைவாசிப்பேர் அல்லது 46 பேர் சிறிசேனவின் ஒருங்கிணைப்புக்குள் வரவில்லை. அவர்களில் பதினொருபேர் பங்காளிக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள். இதற்கு மேலதிகமாக மகிந்த ராஜபக்ச, மனூ நாணயக்கார, ஜனக்க பண்டாரதென்னக் கோன், லோகான் ரத்வத்த, பிரேம்லால் ஜயசேகர சிறிபால கம்லத் மற்றும் கீத்தா குமாரசிங்க ஆகியவர்கள் வாக்கெடுப்பின் போது சபைக்கு வந்திருக்கவில்லை.

### சிறிசேனவின் முன்னுள்ள சவால்கள்

சிறிசேன சிறிலங்கா சுதந்திரக் கட்சியினரை மகிழ்விக்கவும் அவர்களின் மனங்களை வென்றெடுக்கவும் பல சலுகைகளையும் வசதிகளையும் செய்து கொடுத்துள்ளபோதிலும், ராஜபக்ச விசுவாசிகளின் ஆதரவைப் பெற்றுக்கொள்வது தோல்வியிலேயே முடிந்திருப்பதாகத் தெரிகின்றது. இதற்கு நியாயமான காரணம் என்னவெனில் ராஜபக்ச வீழ்ச்சி கண்டுள்ளார் என்றாலும் வெளியேறிவிடவில்லை என்பதே. நாடாளு மன்றத்திலுள்ள அவருடைய நண்பர்கள் அவரை அரசியல் மட்டத்தில் துடிப்புடன் வைத்திருக்கிறார்கள் என்பது மட்டுமல்ல, சிறிசேனவுக்கு பலமான செய்தியொன்றையும் வழங்கியிருக்கிறார்கள். இப்போது சிறிசேனவின் முன்னுள்ள சவால் என்னவென்றால் சலுகை, உதவிகள் என்ற தமது அணுகுமுறையைத் தொடர்ந்து மேற்கொண்டு எதிர் நடவடிக்கைகளைத் தவிர்த்துக்கொள்வதா? அல்லது இரண்டையுமே செயற்படுத்துவதா? என்ற நிலையாகும். அரசு என்ற அடிப்படையில் மேற்கொள்ளவென்று சிறிசேன ஏற்றுக்கொண்டுள்ள சில நிலைப்பாடுகளுக்கு சாதகமான வழிமுறைகள் இல்லாதிருப்பதே இதற்குக் காரணம். அதில் ஒன்றுதான் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கையின் அனுசரணையுடன் அமெரிக்க முன்மொழிவில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம்.

இனிவரப்போகின்ற நெருக்கடிகளின் எதிர்வு கூறலாகவே ராஜபக்சவின் நாடாளுமன்ற உரை அமைந்திருந்தது. அதேசமயம் உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களும் நெருங்கிவந்து கொண்டிருக்கின்றன. அது ராஜபக்சவுக்குப் போலவே சிறிசேனவுக்கும் முக்கியமான விடயம். சிறிசேனவுக்கு தொடர்ந்தும் கட்சியின் தலைமைப் பொறுப்பின் உச்சத்தில் இருக்கவேண்டிய கட்டாயம் உள்ள அதேவேளை ராஜபக்சவை பொறுத்தவரை இப்போது உருவாக்கிக் கொண்டிருக்கும் புதிய எதிர்த்தரப்பு முன்னணியுடன் இணைந்து கொள்வதா? இல்லையா? என்பதாகும்.

அதேசமயம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலான நல்லாட்சிக்கு எதிரான எச்சரிக்கை மணியும் அடித்துக் கொண்டுதான் இருக்கின்றது. முக்கியமான பிரச்சினைகளில் - நடவடிக்கைகளில் இறங்குமுன் மக்களுடன் கலந்தாலோசிக்கப்படும் என்று தமது நல்லாட்சி (யஹபாலண) அரசு சார்பில் அவர்கள் வாக்குறுதி அளித்திருந்தார்கள். வரவு - செலவுத் திட்ட யோசனைகள் பகிரங்கப்படுத்தப்படுவதற்கு முன்னர் பொது விவாதங்களுக்கு விடப்பட முடியாதென்பது விளங்கிக் கொள்ளப்பட வேண்டிய விடயம் தான். இருந்தாலும் சில யோசனைகளுக்கு அரசுத்துறையில் பலத்த எதிர் பிரதிபலிப்புக்களைத் தூண்டிவிட்டிருக்கின்றன.




**பிரிட்டிஷ் கவுன்சிலில் ஏன் ஆங்கிலம் கற்க வேண்டும்?**

நாம் பின்வருவனவற்றை வழங்குகின்றோம்
- வயதுவந்தவர்களுக்கும் சிறுவர்களுக்கும் பலதரப்பட்ட பயிற்சிநெறிகள் (வார, வார இறுதி நாட்கள்)
- பயிற்சிநெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்ததும் பிரிட்டிஷ் கவுன்சில் சான்றிதழ் வழங்கப்படும்.
- ஐக்கிய இராச்சிய தராதரமுடைய தொழில்சார் மற்றும் அனுபவமுடைய ஆங்கில ஆசிரியர்கள்
- இரண்டு தவணைக் கட்டண முறைகள் எங்கள் யாழ்ப்பாணக் கிளையில்

ஜனவரி மாதம் ஆரம்பிக்கும் பயிற்சிநெறிக்கு தற்போது பதிவு செய்யவும்

நான் எவ்வாறு பதிவுகளை மேற்கொள்ள முடியும்?
- தரப்படுத்தல் பரீட்சைக்கான நேரத்தை ஒதுக்கிக்கொள்வதற்கு
  வயதுவந்தவர்களுக்கு (16 வயதிற்கு மேற்பட்டோர்களுக்கு) அடையாள அட்டை/கடவுச்சீட்டுடன் வரவும்
  பிள்ளைகளுக்கு(6-15 வயதிற்கு உட்பட்டோர்களுக்கு) உங்கள் பிள்ளையின் பிறப்புச்சான்றிதழ்
- தரப்படுத்தல் பரீட்சைக்கான கட்டணம் ரூபா. 1000

70 ரக்கா வீதி, சுண்டிக்குளி யாழ்ப்பாணம்
தொ.பே (021) 7521521
அலுவலக நேரங்கள்:
புதன் முதல் ஞாயிறு வரை: 0830-1800

49 அல்பிரட் ஹவுஸ் கார்ட்ன்ஸ், கொழும்பு 3
தொ.பே (011) 4521521, (011) 7521521
அலுவலக நேரங்கள்:
திங்கள் முதல் ஞாயிறு வரை: 0830-1800

88/3 கொட்டுகொடல்ல வீதி, கண்டி
தொ.பே (081) 7222410
அலுவலக நேரங்கள்:
செவ்வாய் முதல் சனி வரை: 0900-1730

நாங்கள் Apex Business Academy உடன் இணைந்து எங்கள் பாடநெறிகளை

www.britishcouncil.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட மாகாணத்தின் வளர்ச்சியில் சிறிய நிறுவனங்கள் முக்கிய பங்களிப்பை வகிக்க முடியும்

## வரவு-செலவுத் திட்ட உரையில் சரவணபவன் எம்.பி. தெரிவிப்பு

2016 ஆம் ஆண்டு வரவு – செலவுத் திட்ட விவாதத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் ஆற்றிய உரையின் முழுவடிவம் இங்கு தொடர்ந்து பிரசுரமாகிறது.

(நேற்றைய தொடர்ச்சி)
உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள் மத்தியில் அதிகரித்த வாழ்க்கைச் செலவினங்கள், குறைந்த உற்பத்திகள், வறுமை, நிலையற்ற வாழ்வாதார நிலைமைகள் போன்றவை தொடர்ந்து கொண்டிருக்கின்றன. துர்திஷ்டவசமாக இந்த இருவகைப் பாதைகளில் 80 சதவீதமானவை இன்னமும் நேரசீர் பார்க்கப்படாமலே உள்ளன. கிட்டத்தட்ட எல்லா கிராமியப் பாதைகளும் 60 வருடங்கள் பழைமையான வடிவமைப்பைக் கொண்டுள்ளன. சில இடங்களில் பாதைகள் இருந்த அடையாளங்களே மறைந்து போயுள்ளன. மக்களின் நாளாந்த வாழ்வில் பாதைகளின் நிலவரம் பெரும் பங்கை வகிக்கின்றன. இந்தப் பாதைகள் புறக்கணிக்கப்பட்டு ஏனைய பாதைகளில் ஏற்கனவே அபிவிருத்திகள் செய்யப்பட்டதால் மக்கள் அவற்றின் உரிய பயன்களை அனுபவிக்க முடியாத நிலை தோன்றியுள்ளது. எனவே, நல்லிணக்கத்தின் அடிப்படையிலும் நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் விதத்திலும் பாதை அபிவிருத்திகளுக்கு முன்னுரிமை கொடுக்கவேண்டியது அவசியமாகின்றது.

**சிறு நிறுவனங்களின் அபிவிருத்தி**
எதிர்காலத்தில் வடமாகாணத்தின் வளர்ச்சியில் சிறு நிறுவனங்களின் பங்களிப்பு பிரதான இடத்தை வகிக்கவுள்ளன.
கடந்த 35 வருடங்களாக நிலவிவந்த கட்டமைப்பின் பின்னடைவுகளால் இந்தத் துறை விருத்தியாகாமல் தேங்கிய நிலையில் இருந்து வந்துள்ளது. சிறு நிறுவனங்களில் அபிவிருத்திக்கான தேசியக் கொள்கை இந்த மாகாணத்தில் கிட்டத்தட்ட நிறைவேற முடியாத நிலையில் இருப்ப துடன் தேசிய சேவைப் பொறிமுறைகள் இருப்பதுடன், தேசிய சேவைப் பொறி முறைகள் வடமாகாணத்தில் போதுமான அளவு உந்துதலை வழங்க முடியாத நிலையில் உள்ளன.
போரின் வடுக்களில் இருந்து மீண்டுவரும் சமூகத்தினருக்கு சிறு நிறுவனங்களின் அபிவிருத்தி மிகவும் முக்கியமானது.

**யாழ். குடாநாட்டின் நிலத்தடி நீர் முகாமைக்கான பொறிமுறை அமைத்தல்**
நிலத்தடி நீர்வளம் தொடர்பாக நாம் பேசும்போது-யாழ். குடாநாடு அந்த அம்சத்தில் இணையற்றதோர் இடத்தை வகிப்பதை உணர்ந்துகொள்ள வேண்டும். இந்த நீர்வளம் இயற்கை தந்த ஒரு பரிசு மட்டுமன்றி, அது லட்சக்கணக்கான வருடங்களாக நிலைத்து நிற்கும் கொடையாகும். தென்மாகாணம் நிலமேல் நீரில் தங்கியிருக்கும்போது, யாழ். குடாநாடு நிலத்தடி நீரையே தனது வாழ்வாதாரமாக நம்பியிருக்கின்றது.
தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் சிரேஷ்ட அதிகாரிகள் இலங்கையிலுள்ள சர்வதேச நீர்முகாமைத்துவ நிறுவனத்தின் ஏற்பாட்டில் 2013 ஓகஸ்ட் 15ஆம் திகதி நடந்த சர்வதேச நீர் முகாமைத்துவம் தொடர்பான மாநாட்டில் யாழ்ப்பாணத்தின் நிலத்தடி நீர் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது. இந்த மாநாட்டின் முடிவில் யாழ். குடாநாட்டின் நீர்வளம் எதிர்நோக்கும் பிரதான பிரச்சினைகள் பின்வருமாறு இனம்காணப்பட்டன.
யாழ். குடாநாட்டிலுள்ளவர்களுக்குப் போதுமான அளவு தூய, சுத்தமான குடிதண்ணீரைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகள் குறைவாகவே உள்ளன. சரியான வடிகாலமைப்பு வசதிகள் இல்லாதபடியால் நிலத்தடி நீர் அசுத்தமாகியுள்ளது. அதில் பக்ரீரியாக்களினதும் இரசாயனங்களினதும் தொற்றுகள் ஏற்பட்டுள்ளதுடன் கடல்நீரின் ஊடுருவலும் ஏற்பட்டுள்ளது.
இலங்கையில் ஏற்படும் ரைபோயிட் காய்ச்சலில் 30 சதவீகிதமானவை யாழ். குடாநாட்டில் ஏற்படுவதுடன், புற்றுநோயும் அதிகரித்து வருகிறது. மிதமிஞ்சிய உரப்பாவனையும், நைதரேற் அடங்கலும் வயல்களை உப்புத் தன்மையாக்கியுள்ளதால் விவசாயிகள் தங்கள் வருமானத்தை இழந்துள்ளார்கள். நீர்வளம் குறைந்திருப்பதால் பொதுமக்கள் மணிக்கணக்கில் குழாயடிகளில் காத்துக் கிடக்கிறார்கள். நிலத்தடி நீர் சம்பந்தமான கண்காணிப்புகள் 'பம்' கிணறுகள் போன்றவற்றின் மீதான முகாமைத்துவம் ஆகியவற்றில் போதிய கவனம் செலுத்தப்படுவதில்லை. அவற்றைத் திருத்துவதற்கும், பாதுகாப்பதற்குமான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதில்லை. தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை, யாழ். கிளிநொச்சி நீர்வழங்கல் வடிகாலமைப்புத் திட்டத்தின் கீழ் யாழ். நீர்வள முகாமைத்துவத்துக்கான குழுவொன்றை நியமித்தது. எனினும், அந்தக் குழுவுக்கு சட்டரீதியான அதிகாரங்கள் கொடுக்கப்படவில்லை. அத்திட்டம் முடிவுக்கு வந்துள்ளதால் அந்தக் குழு இப்போது செயலிழந்துள்ளது.

> “சுன்னாகம் திட்டத்தின் பின் பல்வேறு முறைப்பாடுகள் வந்துகொண்டிருக்கின்றன. நீர்வள முகாமைத்துவம் பற்றிய கட்டுப்பாடு எந்த முகவரத்துக்கும் கொடுக்கப் படவில்லை.”

நீர் முகாமைத்துவத்துக்கான பல பரிந்துரைகள் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையிடம் உள்ளன. துரிதமாக சிதைவடைந்துபோகும் நீர்வளம் பற்றி குறிப்பாக, சுன்னாகம் திட்டத்தின் பின் பல்வேறு முறைப்பாடுகள் வந்துகொண்டிருக்கின்றன. நீர்வள முகாமைத்துவம் பற்றிய கட்டுப்பாடு எந்த முகவரத்துக்கும் கொடுக்கப்படவில்லை. பொருத்தமான வடிகாலமைப்பு முறையும் பின்பற்றப்படவில்லை.

**முத்திரை வரி வருமானத்தில் நிலுவைகளை மீளளித்தல்**
2014க்கு முன்பு வடமாகாண சபையால் முத்திரை வரிகளை அறவிட முடியாமல் இருந்தது. அந்தக் காலகட்டத்தில் முத்திரை வரிகள் மத்திய அரசாலேயே சேகரிக்கப்பட்டன. எனினும், அந்தப் பணம் வடமாகாண சபைக்கு சரியாக மீளளிக்கப்படவில்லை. போர்க் காலத்தில் இருந்த உள்ளூர் அதிகாரிகள் [illegible] கொள்ள முடியாமல் [illegible] நீங்கள் அறிவீர்கள். 2011 தொடக்கம் 2014 வரை மத்திய அரசால் சேகரிக்கப்பட்டுள்ள 1,202.3 மில்லியன் ரூபா வடமாகாண சபைக்கு செலுத்தப்படவேண்டும். உள்ளூர் அதிகாரிகள் பற்றிய விவரங்களும், செலுத்த வேண்டிய பணத் தொகை பற் றிய விவரங்களும் ஏற்கனவே திறைசேரிக்கு அனுப்பப்பட்டு விட்டன. இந்தப் பணம் மீளளிக்கப்பட்டால் உள்ளூர் அதிகாரிகள் எதிர்நோக்கும் சுமைகளில் பெருமளவு குறைக்கப்பட்டுவிடும். எனவே, இந்தத் தொகையை உடனடியாக மீளளிக்குமாறு நான் கௌரவ நிதியமைச்சர் அவர்களிடம் வேண்டுகோள் விடுக்கின்றேன்.



**நல்லிணக்கத்துக்கான கட்டாயத் தேவை**
தங்களுக்கு வழங்கியுள்ள வாக்குறுதிகளின் கீழ் செயற்படும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஏற்படக்கூடிய பின் விளைவுகளைப் பற்றி அரசு உதாசீனமாக இருக்கக்கூடாது.
தொடர்ந்து வந்த அரசுகள் தந்த போலி வாக்குறுதிகளை நம்பி ஏமாந்து போயுள்ள வரலாறு எங்களிடம் உள்ளது. எனினும், இந்தமுறை நல்லாட்சி அரசு தந்த உறுதிமொழிகளை நம்பும் அனுகூலத்தைத் தந்திருக்கிறோம். அத்துடன், அண்மையில் நடந்த ஐ.நா. தீர்மானத்தின்போது இலங்கை அரசு தெரிவித்துள்ள சாதகமான கருத்துகளையும் நாங்கள் நம்புகிறோம். சகல அரசியல்கைதிகளும் நவம்பர் 7ஆம் திகதிக்கு முன்பு விடுவிக்கப்படுவார்கள் என ஜனாதிபதி எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தனிடம் தந்த வாக்குறுதியைக் குறிப்பிட விரும்புகிறேன். எனினும், இந்த வாக்குறுதி தவறியுள்ளதால் அவரது நிலைப்பாட்டுக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் தீவிரமான பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அத்துடன் மக்கள் மத்தியில் தேவையில்லாத துயரங்கள் தோன்றியுள்ளன.
இத்தகைய நிறைவேற்றப்படாத வாக்குறுதிகளால் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் இடம்மாறினாலும்கூட அவை மக்கள் மத்தியில் கடுமையான விரக்தியையும் ஏமாற்றத்தையும் நிச்சயமாகத் தோற்றுவிக்கும்.

**எங்களது வெற்றி கட்சிக்கான கடப்பாடுகள்**
வடக்கு-கிழக்கில் நிலைத்து நிற்கக்கூடிய பொருளாதார அபிவிருத்திக்கும் நல்லிணக்கத்துக்கும் நிரந்தர அரசியல் தீர்வே அடிப்படையாகும். அத்துடன், பல தசாப்தகாலமாக இன்னல்களுக்கு முகம் கொடுத்து வரும் எமது மக்களின் அவல நிலையைப் போக்கி, அவர்களை இருண்ட யுகத்திலிருந்து மீட்க உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். அத்துடன் கௌரவ பிரதமரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பொருளாதார நோக்கு தொடர்பான அறிக்கையையும், உபாய மார்க்கங்களையும், டோக்கியோ நிதியுதவி மாநாடு சம்பந்தமான அவரது உறுதிமொழியையும், நாங்கள் வரவேற்பதுடன் அவரது முயற்சிகளுக்கு நாங்கள் நல்லெண்ணத்துடனும், சாதகமாகவும், ஆக்கபூர்வமாகவும் செயற்படுவோம் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் வலியுறுத்த விரும்புகின்றேன்.

**எமது தற்போதைய நிலையிலிருந்து விடுவித்தல்**
எங்களது இன்னல்களை இங்கு நான் தெளிவாக விளக்கியுள்ளேன். அதேசமயம் எமது தேசம் எதிர்நோக்கும் சிக்கலான நிலையிலிருந்து அதை விடுவிக்க எம்மாலான சகல பங்களிப்புக்களையும் வழங்குவோம் என உறுதி கூறுகின்றேன்.
எங்களுக்கு வழங்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்துக்கு நாங்கள் அங்கீகாரம் வழங்கியுள்ளோம் என்பதை இன்று இந்தச் சபைக்கு நான் தெரிவிக்க விரும்புகிறேன்.
இந்த நாடு பின்வரும் அம்சங்களில் காத்திரமான அறிவுசார் வளங்களைக் கொண்டுள்ளது.
ஒதுக்கப்பட்டுள்ளவர்களை பிரதான பொருளாதார நீரோட்டத்துக்குள் கொண்டுவருதல்.
வரலாற்று ரீதியிலான எல்லைப்படுத்தலையும் பூகோள பாரபட்சமில்லாமல் ஆராய்தல்.
உடனடியாக எதிர்கொள்ளவேண்டிய பொருளாதார சவால்களுக்கு முகம் கொடுக்க இலங்கையின் வடக்கு-கிழக்கு மக்களின் சமமான பங்களிப்பை வழங்குதல்.
அரசியல் தீர்வொன்றுக்கு சரியான பாதையொன்றை அமைப்பதற்கும் எதிர்கொள்ளக்கூடிய பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்கவும் சாதகமான சூழலை உருவாக்கிக்கொள்ளல்.

**எங்களுக்கும் சவால்கள்**
பொதுத்துறையிலும், தனியார்துறையிலும் எல்லா மட்டங்களிலும் காணப்படும் மனிதவளம் மற்றும் நிறுவன ஆயத்தநிலைக் குறைபாடுகள்.
தொழில்நுட்பத்தளம் மற்றும் உட்கட்டமைப்பில் காணப்படும் குறைபாடுகள்.
எமது நாட்டில் நாங்கள் எதிர்கொண்ட எதிர்மறையான விளைவுகள், ஏமாற்றங்கள், போலியான ஆரம்பங்கள் மற்றும் ஆழமான நிலைத்து நிற்கும் துயரங்கள் மற்றும் சேதங்கள் அபிவிருத்தியில் மக்களின் நேரடிப் பங்களிப்பைத் தடை செய்யும் பாதுகாப்புப் படையினரின் அச்சமூட்டும் நடைமுறைகள்.
மேலும் பிரதமரால் பிரேரிக்கப்பட்ட டோக்கியோ நிதியுதவி மாநாடு பற்றிய மேலதிக தகவல்களை அறிந்துகொள்ளவும், அதுதொடர்பான நடவடிக்கைகளில் எமது உச்ச ஆதரவை வழங்கவும் அதன்மூலம் வடக்கு-கிழக்கு மட்டுமன்றி முழுநாடும் முன்னேறுவதற்கான திடசங்கற்பத்தைக் கொண்டுள்ளோம்.
எனது உரையில் நான் தெரிவித்த சாதகமான மற்றும் ஈடுபாடான நோக்கங்கள் உதாசீனம் செய்யப்படமாட்டாது என நம்புகின்றேன்.
அத்துடன், மேலும் வரும் ஏமாற்றங்கள், நாங்கள் பல வருடங்களாக அனுபவித்து வரும் துன்ப துயரங்கள் எனக்கு வெற்றி உனக்குத் தோல்வி என்ற அவல நிலைக்கு இட்டுச்செல்லும்-என்றார். (ஞ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## காலநிலை மாற்றங்களுக்கு ஈடுகொடுக்க வகை வேண்டும்

கடந்த ஒரு வாரத்துக்கும் மேலாக, தமிழகத்தில், குறிப்பாக தலைநகர் சென்னையில், கொட்டிய கடும் மழையினால் மக்கள் பாதிப்புற்றுள்ள நிலைமையை, இந்தப் பத்தியில் நேற்றுத் தொட்டுக் காட்டியிருந்தோம்.

அத்தகைய காலநிலை மாற்றங்களுக்கு, பென்னம் பெரிய, வளர்ச்சி அடைந்த, நாடுகளின் ஒவ்வாத பங்களிப்புக்கள் அனேகம்.

பிரான்சின் தலைநகர் பாரிஸில் நடைபெறும் உலக காலநிலை மாநாட்டில், பூமியின் வெப்பநிலை உயர்வைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வேண்டும் என்ற கருத்தியல் முன்வைக்கப்பட்டுள்ளது.

நான்கு வருடங்களாக உருவாக்கப்பட்ட அந்தத் தொகுப்பில், பூமி மாசடைவதைக் குறைப்பதன் மூலமே காலநிலை மாற்றங்களை கட்டுக்குள் கொண்டுவர வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

கடல் மட்டம் உயர்வது, காலநிலை மாற்றங்கள், வெப்பநிலை உயர்வு, நிலக்கரிப் பாவனையைக் குறைத்தல் பற்றியும் நாற்பத்தெட்டுப் பக்க ஆவணத்தில் விரித்து உரைக்கப்பட்டுள்ளதாக அறியமுடிகிறது.

கடந்த, இரண்டு மூன்று நாள்களாக சீனாவில் புகைமூட்டம் 'சிவப்பு எச்சரிக்கை' (Red alert) நிலையை அடைந்துள்ளதாக செய்திகள் வெளிவந்துள்ளன. ஆகப்பிந்தி, பிரிட்டினிலும் பெருவெள்ளத்தினால் பெரும் பாதிப்புக்கள் உண்டாகியிருப்பது குறித்த தகவல்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. சூறாவளியுடன் கூடிய கனமழை காரணமாக பெரும் பாதிப்புக்களால், அங்கு ஆயிரக்கணக்கான மக்கள் வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்டுள்ளனர். வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது. அங்கு அவசரகால நிலை பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை --

பிரான்சின் தலைநகர் பாரிஸில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் காலநிலை மாற்றங்கள் தொடர்பான மாநாட்டில், எமது நாட்டின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பச்சைவீட்டு (Green House) வாயுவைக் குறைக்க வேண்டும் -- என்று வலியுறுத்தியுள்ளார்.

வெப்பத்தை இரண்டு பாகை செல்சியஸ்ஸுக்கும் குறைந்த மட்டத்தில் பேணுவதற்கு வகைசெய்ய வேண்டும் என்றும் தொட்டுக்காட்டினார்.

வரலாற்று ரீதியாக எம் மீது சுமத்தப்பட்டுள்ள பொறுப்பை மனதில் கொண்டு, அபிவிருத்தி அடைந்த நாடுகளினால் மேற்கொள்ளப்படும், பூகோள மட்டத்திலான பச்சைவாயு வெளியீட்டை மிகப்பெரிய அளவில் குறைக்க வேண்டும் என்பது பிரதான தொனிப்பொருளாக அமைந்தது.

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் ஒன்றாகவும், அயன மண்டல நாடாகவும் விளங்கும் எமது நாடு, மிகப்பெரிய அளவில் காலநிலை மாற்றங்களுக்கு ஈடு கொடுக்கவேண்டிய நிலையையும், அவர் அங்கு விரித்து உரைத்திருந்தார்; இடித்துரைத்தார்.

வெப்பநிலை மாற்றம், மழைவீழ்ச்சியில் மாற்றம், கடல் மட்டம் உயர்வது ஆகிய இயற்கைக் காரணிகள், எமது நாட்டின் விவசாயம், கடற்றொழில், கால்நடை வளங்கள், தண்ணீர், சுகாதாரம் மற்றும் பொருளாதாரத்தின் அனைத்துத் துறைகளையும் நேரடியாகவும், மிகப்பெரிய அளவிலும் பாதிப்பதாகச் சுட்டிக்காட்டினார் ஜனாதிபதி.

மொத்தத்தில், பாரிஸ் காலநிலை மாநாட்டின் தீர்மானங்கள், உடனடியாக நடைமுறைக்கு வருமா, பாதிப்புறும் நாடுகளுக்கு பயன்படுமா என்பவற்றுக்கான விடைகள் ஆக்கபூர்வமானவையாக அமையுமா? எதிர்பார்க்கலாமா? என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.



# சகல குற்றச் செயல்களுக்கும் தண்டனை வேண்டும்

சேரலாதன்

தென் பகுதியில் இருந்து அண்மைக் காலமாகக் கிடைக்கின்ற தகவல்கள் அதிர்ச்சிக்குமேல் அதிர்ச்சி அளிப்பனவாகக் காணப்படுகின்றன. அவன்கார்ட் நிறுவனத்தின் நிதிமோசடிகள், பிரபல ரக்பி வீரர் தாஜுதீனின் படுகொலை, மகிந்த தரப்பினர் எதிர்க்கட்சித் தலைவர் பொறுப்பை ஏற்பதில் காட்டுகின்ற அதீத அக்கறை, நாடாளுமன்ற உறுப்பினர் நாமலுடன் தொடர்புடைய நிதி மோசடிக் குற்றச்சாட்டு, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அனுபவிக்கின்ற ஓய்வூதிய அனுகூலங்கள், மகிந்தவின் பாதுகாப்பில் ஈடுபட்டுள்ள இராணுவத்தினரை உடனடியாக அகற்றி விடுவதற்கான ஜனாதிபதியின் உத்தரவு என அவை நீண்டு கொண்டே செல்கின்றன.

> இலங்கை நாட்டின் தலைமைப் பொறுப்பை ஏற்றவுடன் விழுந்தடித்துக் கொண்டு இங்கு வந்தவர், அண்ணனின் தயவால் முப்படைகளையும் கட்டுப்படுத்துகின்ற உயர் பதவியிலும் அமர்ந்து கொண்டார்.

நல்லாட்சி அரசின் வரவு - செலவுத்திட்டத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றவிடாது தடுக்க வேண்டுமென்பதே மகிந்த தரப்பினரின் பிரதானமான குறிக்கோளாக இருந்தது. ஆனால் மிகப் பெரும்பான்மைப் பலத்துடன் அது நிறைவேற்றி வைக்கப்பட்டுள்ளது. இது மகிந்த தரப்பினருக்குள் கிடைத்த மிகப்பெரிய தோல்வியாகும்.

**நலத்திட்டங்களுக்கும் எதிர்ப்பு**

மைத்திரி - ரணில் அரசு மேற்கொண்டு வரும் நலத்திட்டங்களைக் கூட செயலற்றதாக்கிவிட வேண்டும் என்பதே மகிந்த தரப்பினரின் திட்டமாகும். நாட்டின் அபிவிருத்தியைப் பற்றியோ அல்லது மக்களின் எதிர்காலம் பற்றியோ அவர்கள் சிறிதுகூட சிந்திப்பதாகத் தெரியவில்லை. மேலும், தற்போதைய ஆட்சியைத் தோற்கடித்துவிட்டு மகிந்த ஆட்சியை மீண்டும் ஏற்படுத்துவதே இந்தக் குழுவினரின் பிரதான குறிக்கோளாகக் காணப்படுகின்றது. ஆனால் அரசின் நடவடிக்கைகளைப் பொறுத்தே இது சாத்தியப்படுமா என்பது தெரியவரும்.

குறிப்பாக முன்னைய ஆட்சியில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஊழல், மோசடி தொடர்பான விசாரணைகளைத் துரிதப்படுத்தி குற்றவாளிகளாக இனம் காணப் படுபவர்களுக்குத் தண்டனை வழங்கினாலே மகிந்த தரப்பினரின் கொட்டம் அடங்கிவிடும். கோத்தபாய ராஜபக்சவின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் இருந்த அவன்கார்ட் நிறுவனத்தில் நிகழ்ந்த மோசடிகள் தொடர்பாக ஏற்கனவே செய்திகள் வெளிவந்துள்ளன. இந்த நிலையில் அந்த நிறுவனம் பல்வேறு தரப்பினருக்கும் இலஞ்சம் கொடுத்ததும், இலஞ்சம் கொடுக்க முயற்சிசெய்ததும் தற்போது தெரியவந்துள்ளது. ஆகக் கடைசியாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு அந்தநிறுவனம்பெருந்தொகைப் பணத்தை இலஞ்சமாக வழங்க முன்வந்ததை அவரே பகிரங்கமாகத் தெரிவித்துள்ளார்.

**பாரதூரமான சம்பவங்கள்**

கோத்தபாய முன்னாள் ஜனாதிபதியின் உடன்பிறந்த தம்பியாக இருந்தாலும், தற்போது அவரொரு சாதாரண மனிதர்தான். அமெரிக்கக் குடியுரிமை பெற்று அங்கு சாதாரண பணியாளராகப் பணியாற்றிய அவர், அண்ணன் இலங்கை நாட்டின் தலைமைப் பொறுப்பை ஏற்றவுடன் விழுந்தடித்துக் கொண்டு இங்கு வந்தவர். அண்ணனின் தயவால் முப்படைகளையும் கட்டுப்படுத்துகின்ற உயர் பதவியிலும் அமர்ந்து கொண்டார். இவர் பதவியில் இருந்த காலத்தில் இந்த நாட்டில் இடம்பெற்ற சம்பவங்கள் மிகவும் பாரதூரமானவையாக இருந்தன. ஆனால் இவருக்கு எதிராகச் சுட்டு விரலைத்தானும் நீட்டுவதற்கு எவருக்குமே துணிவு இருந்ததில்லை.

**அரசின் மெத்தனப் போக்கு**

கோத்தபாய விடயத்தில் மட்டுமல்லாது, ஏனைய குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலும் நடவடிக்கை மேற்கொள்வதில் தற்போதைய அரசு மெத்தனப் போக்கையே கடைப்பிடித்து வருகின்றது. இது அரசுக்கு உள்ளூர இருக்கும் பயத்தையே வெளிக்காட்டுகின்றது. இந்தப் பயம்தான் எதிரணியினருக்கு வாய்ப்பாகவும் அமைந்துவிட்டது. ஆனால் அரசு இத்தகையதொரு நிலையிலிருந்து தன்னை மெல்ல மெல்ல மாற்றி வருவதை அவதானிக்கும்போது எதிர்காலத்தில் குற்றவாளிகள் தண்டனைக்கு உட்படுத்தப்படுவார்கள் என்பது ஓரளவு தெளிவாகத் தெரிகின்றது.

ஆகவே, இந்த நாட்டைக் காப்பாற்ற வேண்டுமானால், மோசடியான முறையில் அபகரிக்கப்பட்ட நிதி அனைத்தும் மீளப்பெறப்படவேண்டும். இதில் ஈடுபட்ட குற்றவாளிகளுக்குத் தராதரம் பார்க்காது தண்டனை வழங்கப்பட வேண்டும். மேலும், படுகொலைகள், ஆள்கடத்தல், காணாமற் போகச் செய்தல் ஆகியவை தொடர்பாகவும் பக்கச் சார்பற்ற விசாரணைகள் இடம்பெற்று குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும். இதுவே நல்லாட்சிக்கு மெருகூட்டும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்ரன்

# வடமாகாண சபைக்கு ஏன் இந்த வேலை?

பத்திரிகையை வாங்கிப் படித்ததும் அதிர்ச்சியாக இருந்தது. தமிழகத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ வடக்கு மாகாண சபை நிதியம் ஒன்றை ஆரம்பித்துள்ளது என்றது அந்தச் செய்தி. இதன் பொருள் என்ன? எனக்குத் தலைகால் புரியவில்லை.

போரினால் பாதிக்கப்பட்ட மக்களிடம் பணத்தைப் பிடுங்கி வெள்ள இடரினால் பாதிக்கப்பட்ட மக்களிடம் கொடுக்க முண்டியடிக்கிறது வடக்கு மாகாண அரசு. இந்தச் செய்தியை என்னால் இப்படித்தான் புரிந்துகொள்ள முடிகிறது.

30 வருடங்களாகப் போரால் நலிந்த, பின்னர் மீள எழும்பிவிடத் துடிக்கும் மக்களிடமிருந்து நிதியைப் பிடுங்கிக் கொடுக்கும் இந்த யோசனையை மாகாண சபையில் முன்வைத்தவர் யார் என்று தெரியவில்லை. ஆனால், அது தொடர்பில் நடத்தப்பட்ட கூட்டத்தில் கலந்துகொள்ளாத உறுப்பினர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள். குறைந்தபட்சம் அவர்களுக்குத் தங்கள் மக்கள் பற்றிய அக்கறையாவது இருந்தது எனக் கொள்ள முடிகிறது. (இதுதான் காரணமா என்பதை அறுதியிட்டுச் சொல்லமுடியாது என்பதையும் கவனத்தில் கொள்க)

**மாகாணசபை நிதியிலிருந்து உதவி**

பாதிக்கப்பட்ட தமிழக மக்களுக்கு உதவ வேண்டும் என்று வடக்கு மாகாண சபை உண்மையிலேயே விரும்பினால், அது தனது நிதியில் இருந்து அந்த மக்களுக்கு உதவியிருக்கவேண்டும். மக்களிடம் நிதி பிடுங்க ஏன் முயற்சிக்கிறார்கள் என்பது புரியவில்லை.

கொமர்ஷல் வங்கியில் தாம் ஆரம்பித்திருக்கும் கணக்குக்கு நிதியை வைப்பிலிடுமாறு மாகாண சபை அறிவித்திருக்கிறது. எதிர்வரும் 20ஆம் திகதி வரை இந்தக் கணக்குக்கு பணத்தை வரவு வைக்கலாமாம். இப்படி இவர்களால் ஆகக் கூடுதலாக எவ்வளவு பணத்தைத் திரட்டிவிட முடியும்?

அதுவும் போரால் பாதிக்கப்பட்டு மீள எழும்புவதற்குப் பாடுபட்டுவரும் அப்பாவி மக்களிடம் இருந்து அப்படி என்ன பெரிய தொகையைப் புரட்டிவிட முடியும் இவர்களால்? ஒரு பத்து லட்சம் ரூபாய் திரட்டிவிடுவார்களா?

**திரட்டப்படும் நிதி போதாது**

அப்படியே அவர்கள் 10 லட்சம் ரூபாயைத் திரட்டினால்கூட (அதுகூட முடியுமா என்பது தெரியவில்லை) அதன் இந்தியப் பெறுமதி வெறும் 4 லட்சம் ரூபாயாகத்தான் இருக்க முடியும். இந்தப் பணம் பாதிக்கப்பட்ட மக்களின் தேவைக்கு எந்த மூலைக்குப் போதுமானது?

அதிகாரிகளின் பொக்கெட் செலவுக்கேகூட இது போதுமானது அல்ல. அப்படியிருக்க இந்தப் பணத்தை தமிழகத்துக்கு அனுப்பி என்ன செய்யப் போகிறார்கள்?

வெளிப்படையாகச் சொன்னால், இந்திய அரசுக்கு வடக்கு மாகாண சபை நிதி உதவி செய்யப் போகிறது. மேலும் விளக்கிச் சொன்னால், வெள்ளப் பாதிப்புக்காக 1940 கோடி ரூபாய் இந்தியப் பணத்தை இந்திய மத்திய தமிழகத்துக்கு உதவியாக அளிக்க, வடக்கு மாகாண சபை 4 லட்சம் இந்திய ரூபா நிதி உதவி வழங்கப்போகிறது. என்ன கொடுமை ஐயா இது!

இதை இப்படியும் சொல்லலாம், வடக்கு மாகாணத்தில் போரால் பாதிக்கப்பட்ட மக்களின் நலத் திட்டங்களுக்காகவும் வளர்ச்சித் திட்டங்களுக்காகவும் தனது வருடாந்தப் பாதீட்டில் 500 கோடி ரூபாய்களை ஒதுக்கும் இந்திய மத்திய அரசுக்கு, வடக்கு மாகாண சபை அதே மக்களிடமிருந்து வாரிச் சுருட்டி ஒரு 4 லட்சம் ரூபாய் கொடுக்கப்போகிறது. பாதிக்கப்பட்ட தமிழக மக்களுக்கு உதவி செய்ய கர்நாடக மாநில அரசு 5 கோடி ரூபாய் வழங்கியது, பீஹார் மாநில அரசு 5 கோடி ரூபாய் வழங்கியது.

> பாதிக்கப்பட்ட தமிழக மக்களுக்கு உதவ வேண்டும் என்று வடக்கு மாகாண சபை உண்மையிலேயே விரும்பினால், அது தனது நிதியில் இருந்து அந்த மக்களுக்கு உதவியிருக்க வேண்டும்.



ஆனால், இவற்றில் எதுவும், தனது மக்களிடம் வசூலித்து இந்த உதவிகளை வழங்கவில்லை. தனது அதிகாரத்துக்கு உட்பட்ட வைப்பிலிருந்தே வழங்கியுள்ளது.

இந்தியாவில் மாநில அரசுகள் என்பவை இங்கு மாகாண அரசுகளைப் போன்றவையே (அதிகாரங்கள் விடயத்தில் இலங்கை மாகாணங்கள் மிகக் கீழானவை என்பது வேறுவிடயம்). அப் படியிருந்தும் கர்நாடக அல்லது பீஹார் மாநில அரசுகளில் எதுவும் மக்களிடம் இருந்து உதவிக்காகப் பணம் வசூலிக்கவில்லை. அதுபோன்று வடக்கு மாகாண அரசும் தனது நிதியில் இருந்து தமிழக மக்களுக்கு நிதி உதவி வழங்கியிருக்கலாம்.

**மாகாண சபை உறுப்பினர்கள் உதவலாம்**

அப்படி நிதி வளம் இல்லை என்றால் காரியமில்லை, அடையாளமாக மாகாண சபை உறுப்பினர்கள் எல்லோருமே தமது ஒரு மாதச் சம்பளத்தை தமிழக உதவி நிதிக்கு வழங்குவதாக அறிவித்திருக்கலாம். அதுவும் போதாதா, வடக்கு மாகாண சபையில் பணியாற்றும் ஊழியர்களிடமிருந்து ஒரு நாள் சம்பளத்தைக் கேட்டுப் பெற்றிருக்கலாம் (அவர்கள் சம்மதித்தால் மட்டும்). அது பெருமைப்படத்தக்கதாகக் கூட இருந்திருக்கும். ஈழ மக்களின் பிரதிநிதிகளாக தமிழக மக்களின் மீது அன்பு செலுத்தும் அடையாளமாக அது அமைந்திருக்கும்.

அந்த நிதி மட்டும் தமிழக மக்களின் உதவிக்குப் போதுமா என்று கேட்கலாம்? இல்லைத்தான். அது வெறும் கால் தூசிக்குப் பெறுமானமானதுதான். ஆனால், அது அன்பின் அடையாளம். பாதிக்கப்பட்ட இரு பகுதி மக்களினதும் துன்பங்களை உணர்ந்து கொண்ட அரசியல்வாதிகளின் அன்பின் அடையாளம்.

இப்போதுகூட இவர்கள் மக்களிடம் இருந்து திரட்டப்போகும் நிதியும் வெறும் அடையாளம்தான். ஈழத் தமிழ் மக்களின் அன்பின் வெளிப்பாடு மட்டும்தான். அந்த நிதியும் தமிழக உதவி நிதிக்குப் போதுமானது அல்ல. மொத்தமாகத் தனக்கு 5000 கோடி ரூபா வேண்டும் என்று கேட்டிருக்கிறார் முதலமைச்சர் ஜெயலலிதா. ஈழத் தமிழர்களால் அதில் பத்தில் ஒரு பங்கைத் தானும் கொடுக்க முடியாது என்பது வெள்ளிடை மலை. எனவே எல்லாமும் வெறும் அடையாளம்தான். அதை வெளிப்படுத்தத்தான் எல்லோரும் விரும்புகிறோம். மாகாண சபையினர் மட்டும் மக்களின் காசில் அதைச் செய்ய விரும்புகிறார்கள். அதுதான் தவறு–குற்றம்.

மழையும்–வெள்ளமும் சென்னை நகரத்தின் சீத்துவக்கேட்டை மட்டுமல்ல, வடக்கு மாகாண சபையின் நிர்வாகச் சீர்கேட்டையும் கழுவி வெளியே கொண்டு வந்திருக்கின்றன.

## போக்குவரத்துச் சிரமத்தில் தந்தை செல்வா வீதி மக்கள்

போக்குவரத்துச் சேவைகள் இடம் பெறாததால் தெல்லிப்பழை, தந்தை செல்வா வீதியை அண்டியுள்ள பகுதிகளில் வசிக்கின்ற மக்கள் போக்குவரத்து இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

தற்போது காங்கேசன்துறைவரை இடம்பெறும் பஸ் சேவைகள் யாவும் தெல்லிப்பழைச் சந்தி ஊடாகவே இடம் பெற்று வருகின்றன. இதனால் மேற்படி பகுதிகளைச் சேர்ந்த மக்கள் சுமார் ஒரு கிலோ மீற்றருக்கு அதிகமான தூரத்தை நடந்து சென்று பஸ்களில் ஏறவேண்டிய அவலநிலையில் உள்ளனர்.

மேலும், தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் கல்வி கற்கின்ற தூர இடங்களைச் சேர்ந்த மாணவர்களும் போக்குவரத்துச் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

அளவெட்டிக்கான பஸ் சேவைகளை தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி வரை நீடிப்பதன் மூலமாக நூற்றுக்கணக்கான மக்களின் போக்குவரத்துச் சிரமங்களை முடிவுக்குக் கொண்டு வரமுடியும்.

மகாலட்சுமி, தெல்லிப்பழை.

## குடிதண்ணீர் விநியோகம் திடீரென நிறுத்தப்பட்டதால் அவதிப்படும் சுன்னாகம் வடக்குப் பகுதி மக்கள்

கடந்த சில நாள்களாக சுன்னாகம் வடக்குப் பகுதியில் உள்ள இடங்களுக்கு குடிதண்ணீர் விநியோகம் இடம் பெறாத தால் அந்தப் பகுதியைச் சேர்ந்த மக் கள் குடிதண்ணீருக்குப் பெரும் இன் னல் களை எதிர்கொண்டு வருகின்றனர்.

சுன்னாகம் பகுதியிலுள்ள நிலத்தடி நீரில் கழிவு ஓயில் கலந்ததால் அந்தப் பகுதி மக்கள் பெரும் தண்ணீர்த் தட்டுப்பாட்டை எதிர்கொண்டு வந்தனர். இதனைக் கருத்தில் கொண்டு, பிரதேச சபையினர் குடிதண்ணீரை பவுஸர்கள் மூலமாகக் கொண்டுவந்து விநியோகம் செய்து வந்தனர். இதன் காரணமாக மக் கள் தமது குடிதண்ணீர்த் தேவையைக் குறைவின்றி நிறைவு செய்தனர்.

ஆனால், கடந்த சில தினங்களாக குடிதண்ணீர் விநியோகம் இடம் பெறாத தால் மக்கள் அவலங்களுக்கு உள் ளாகி வருகின்றனர். மேலும், தொடர்மழை யும் பெய்து வருவதால் வேறு இடங் களுக்குச் சென்று குடிதண்ணீரைப் பெறுவதிலும் மக்கள் சிரமங்களை எதிர் கொள்கின்றனர்.

எனவே பிரதேச சபையினர் குடிதண் ணீர் விநியோகத்தைத் தொடர்ந்து மேற் கொள்ள வேண்டும் என்பதே பாதிக்கப் பட்ட மக்களின் எதிர்பார்ப்பாக உள் ளது.

ம.ரவீந்திரன், சுன்னாகம்.

## அரசதுறை ஊழியர்களுக்கு வேதன உயர்வு வழங்குவதைப்போன்று தனியார்துறை ஊழியர்களுக்கும் வேதன அதிகரிப்பு கிடைக்குமா?

அரசின் வரவுசெலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்ட 2500 ரூபா சம்பள அதிகரிப்பு இந்தமுறையாவது தனியார் துறை ஊழியர்களுக்கும் கிடைக்குமா என்ற ஏக்கத்தில் அந்த ஊழியர்கள் உள்ளனர்.

கடந்த காலங்களில் தனியார்துறை ஊழியர்களுக்கும் சம்பள உயர்வு என அறிவித்தல் வெளிவரும். ஆனால் அதன் பின்னர் ஒன்றுமே நடக்காது.

இந்த முறை வரவுசெலவுத் திட்டத்தில் அறிவித்த சம்பள உயர்வை தனியார்துறை ஊழியர்களுக்குக் கட்டாயம் வழங்க வேண்டுமென அரசு தெரிவித்துள்ளது. இதனால் தனியார்துறை ஊழியர்கள் மிகுந்த எதிர்பார்ப்புடன் உள்ளனர்.

அரச துறைகளைப் போன்று தனியார் துறைகளில் சீரான சம்பளப் படிமுறைகள் இல்லை. இதனால் ஊழியர்களின் சம்பளக் கொடுப்பனவில் பெரிய வித்தியாசம் காணப்படுகின்றது.

ஆகவே இந்தமுறை வரவுசெலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டதன் பிரகாரம் சம்பள உயர்வை வழங்கினால் தனியார்துறை ஊழியர்கள் நன்மை அடைவார்கள்.

பா.வரதராசன், கோப்பாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிசக்திப் புரட்சி அவசரம் பான் கீ மூன் அழைப்பு

## உலக காலநிலை மாநாட்டில் விடுத்தார்

பருவநிலை மாற்றத்தினால் ஏற்படக் கூடிய மோசமான விளைவுகளைத் தடுக்க உலக நாடுகள் எரிசக்தி புரட்சியை அவசரகதியில் மேற்கொள்ள வேண்டிய கடமை உள்ளது என்று வலியுறுத்தியிருக்கிறார் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பான் கீ மூன்.

பாரிஸில் நடைபெற்றுவரும் காலநிலை மாற்றம் தொடர்பான உலக மாநாட்டில் உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

நாள்கள் பருவநிலைப் பேரழிவை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றன. முற்றிலும் வேறு வகையில் மாற்றத்தைக் கொண்டு வர ஓர் இணக்கப் பாட்டை எட்டுமாறு பருவநிலை மாற்றம் அழைப்பு விடுத்துள்ளது.

நமது வேலைகள் வறுமையை ஒழிக்கப் பயன்படவேண்டும், சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு உகந்த எரிசக்திப் புரட்சி தேவை, வேலைவாய்ப்புகளைப்பெருக்குவதோடு எதிர்காலத்துக்கான நம்பிக்கையையும் எமது செயற்பாடுகள் வளர்க்க வேண்டும்.

வளர்ந்த நாடுகள் இதில் வழிகாட்டியாக செயல்படுவது அவசியம் என்பதோடு, வளரும் நாடுகளும் தங்களது திறன்களுக்கு ஏற்ப இன்னும் கூடுதல் பொறுப் பேற்க வேண்டும் - என்றார் பான் கி மூன்.

பருவநிலை மாற்றம் குறித்து உலக நாடுகள் 21வது முறையாக பாரிஸில் சந்தித்து பேசி வருகின்றன. ஆனால் இதில் முன்னேற்றம் எதுவும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. பருவநிலை மாற்றத்தின் கோரத் தாண்டவங்களை ஏழை நாடுகளே பெரிதும் அனுபவித்து வருகின்றன.

> ❝ வளர்ந்த நாடுகள் இதில் வழிகாட்டியாக செயல்படுவது அவசியம் என்பதோடு, வளரும் நாடுகளும் தங்களது திறன்களுக்கு ஏற்ப இன்னும் கூடுதல் பொறுப் பேற்க வேண்டும். ❞

"நலிவடைந்த நாடுகளை முழு அளவில் பாதுகாக்கும் கடுமையான ஒப்பந்தங்கள் தேவை. எனக்கப்பால் உள்ள 7 தலைமுறையினரின் கண்கள் என்னை நோக்கி என்ன செய்தீர்கள் என்று கேட்கின்றன. உங்கள் ஒவ்வொருவரையும் இதே கேள்விகள் தாக்கும். ஆகவே நாம் அனைவரும் ஒருங்கிணைந்துதேவையான அனைத்தையும் செய்துள்ளோம் என்று பதிலளிக்குமாறு செயல்பட வேண்டும்" என்கிறார் பருவநிலை மாற்றத்துக்கான ஐ.நா. தலைவர் கிறிஸ்டியானா பிகுயெரா.



# தென் நைஜீரியாவில் புதிய மன்னர் தெரிவு



லாகோஸ். டிசெ .9.

தென்-மேற்கு நைஜீரியாவில், இபி நகரின் மன்னராக அடியியி - இனிடன் ஒகுன்வசி முடிசூடப்பட்டுள்ளார். கணக்காளரான இவர், யோருபா மக்கள் மத்தியில் மிகவும் செல்வாக்கு மிக்கவர்.

நைஜீரியாவில் 35 மில்லியன் மக்கள் யோருபா இனத்தைச் சார்ந்தவர்கள். புதிய மன்னரின் முடிசூட்டு நிகழ்வை இபி நகரில் பல்லாயிரக்கணக்கான மக்கள் ஒன்றுதிரண்டு கொண்டாடினர். தற்போது தெரிவு செய்யப்பட்டிருக்கும் மன்னர் ஒகுவாசி அரச குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவர். மன்னர் தேர்வின்போது 21 போட்டியாளர்களிலும், ராஜ சபையினரால் ஒகுவாசி மன்னராகத் தெரிவு செய்யப்பட்டர்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த மன்னர் உமர் ஹேூ, மக்களை நல்லாட்சியின் வழிநடத்துவோம், சரியான விடயங்களை செய்வதன் மூலம் மக்கள் மத்தியில் ஒற்றுமையை வளர்ப்போம் என்றார்.

வெளிப்படையாகவும், நியாயமான முறையிலும் ஆட்சி அமையும் என மேலும் அவர் தெரிவித்தார். முந்தைய மன்னர் ஒபா -சிஜுவடி கடந்த ஜூலை மாதம் தனது 85ஆவது வயதில் காலமானார். அவர் கடந்த 35 வருடங்கள் ஆட்சி செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-ரி4)

# 2 தீவிரவாதத் தலைவர்களை கொன்றதாக அமெ. அறிவிப்பு



வொஷிங்டன், டிசெ. 9

சோமாலியா மற்றும் லிபியாவில் தமது வான் தாக்குதல்களில் தீவிரவாதச் செயல்களில் ஈடுபடும் ஆயுதக் குழுக்களின் தலைவர்கள் இருவர் கொல்லப்பட்டுள்ளனர் என்று அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்டகன் அறிவித்துள்ளது.

சோமாலியாவில் அல் - சபாப் அமைப்பின் முக்கிய தலைவர் ஒருவரும் லிபியாவில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் தலைவர் ஒருவரும் கொல்லப்பட்டனர் என்று அமெரிக்க இராணுவத் தலைமையக ஊடகப் பேச்சாளர் பீட்டர் குக் தெரிவித்தார்.

அல் -குவைதாவினருடன் நெருங்கிய. தொடர்புடைய அமைப்பு அல் - சபாப் ஆகும். மேலும் இந்தத் தாக்குதலில் அல் -சபாப் அமைப்பின் போராளிகளில் இருவர் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்த அமைப்பின் மூத்த தலைவரான உகாஷ் கொல்லப்பட்டமை அந்த அமைப்புக்குப் பெரும் இழப்பு என பீட்டர் தெரிவித்தார். அத்துடன் அமெரிக்க உளவாளிகளின் செயற்றிறனும், நிபுணத்துவமான சட்டத் துறையும் இந்தத் தாக்குதலுக்குப் பங்களித்துள்ளன எனப் பாராட்டினார்.

லிபியாவில் கொல்லப்பட்ட ஐ.எஸ். அமைப்பின் தலைவர்களுள் ஒருவரான நஜீம் சாயித் அல் சுபைதி கடந்த நவம்பர் மாதம் 13 ஆம் திகதி கொல்லப்பட்டார் என்று அமெரிக்கா தெரிவித்தது.

லிபியாவில் ஐ .எஸ்.க்கு எதிராக இடம் பெற்ற முதல் தாக்குதல் இதுவாகும். மேலும் ஐ.எஸ் எங்கிருந்தாலும் அவர்களை பின் தொடர்ந்து [illegible] திட்டம் எனவும் பீட்டர் தெரிவித்தார். (உ-ரி4)

# தஜிகிஸ்தானில் நிலநடுக்கம்; சேதம் இல்லை

தஜிகிஸ்தானில் திங்கட்கிழமை காலை சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

தஜிகிஸ்தான் தலைநகர் துஷான்பேவுக்கு கிழக்கே 345 கி.மீ. தொலைவில் மக்கள் அதிகம் வசிக்காத பகுதியில் இந்த நிலநடுக்கத்தின் மையப்பகுதி இருந்ததாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்தது.

பூமிக்கு 28 கி.மீ. ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம், ரிக்டர் அளவு கோலில் 7.2 அலகுகளாகப் பதிவானது. இந்திய நேரப்படி பிற்பகல் 1.20 மணிக்கு நிகழ்ந்த நிலநடுக்கத்தால் உயிரிழப்பு, பொருளிழப்பு ஏற்பட்டதாகத் தகவல் இல்லை.

22 கி.மீ. ஆழத்தில் நிலநடுக்கம் நிகழ்ந்ததாக, தஜிகிஸ்தான் புவியியல் ஆய்வு மையம் தெரிவித்தது.

அண்டை நாடான கஜகஸ்தான் தலைநகர் கிர்கிஸ்தான், ஆப்கானிஸ்தானின் சில பகுதிகள், பாகிஸ்தான், இந்தியா ஆகிய இடங்களிலும் இந்த நிலநடுக்கம் உணரப்பட்டது.

# ஐ .எஸ்க்கு எதிரா... ஆஸ்திரேலியர் ...

மெல்பேர்ன் , டிசெ.9

ஈராக்கில் ஐ.எஸ்.ஐ.எஸ். படைகளுக்கு எதிராகப் போராடிவிட்டு தாயகம் திரும்பிய ஆஸ்திரேலியர் ஒருவரை விசாரணைகளின் பின்னர் பொலிஸார் விடுவித்திருக்கின்றனர்.

ஆஸ்திரேலியரான ஆஷ்லி டைபல் ஈராக்கில் உள்ள குர்திஷ் படைகளுடன் சேர்ந்து ஐ.எஸ். ஐ.எஸ். படையினருக்கு எதிராகப் போராடினார். அங்கிருந்து ஓய்வுக்காக அவர் ஆஸ்திரேலியா திரும்பும் வழியில் ஜேர்மனியப் படையினரால் கைது செய்யப்பட்டார். நேற்று அவர் நாடு கட்டத்தப்பட்டார். விசாரணைகளின் பின்னர் அவர் விடுவிக்கப்பட்டார்.



மத்திய கிழக்கு நாடுகளின் போராட்டக் குழுக்களுக்கு உதவுவது ஆஸ்திரேலியச் சட்டங்களின் அடிப்படையில் குற்றம். ஆனால் கடவுளுக்கும் சாத்தானுக்கும் இருக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# ...ராகப் போராடிய ...ர் நாடு திரும்பல்

வித்தியாசத்தைப் போன்று ஐ.எஸ். அமைப்புக்கும் அதனை எதிர்த்துப் போராடிய தனது மகனைப் போன்றவர் களுக்கும் வித்தியாசம் இருக்கிறது என்று கூறும் ஆஷ்லியின் தகப்பனார், தனது மகன் மன்னிக்கப்படவேண்டும் என்று எதிர் பார்க்கிறார்.

நேற்றுமுன்தினம் மெல்பேன் விமா னத்தளத்திற்கு வந்திறங்கிய ஆஷ்லியை அவரது குடும்பத்தினர் வரவேற்றனர். ஆனால் அவர் எங்கிருந்து விமானப் பயணத்தை ஆரம்பித்தார் என்பது தொடர்பான தகவல்கள் தெரிவிக்கப்படவில்லை.



எந்தப் பக்கத்தில் இருந்து சண்டை செய்தாலும் அது சட்டப்படி தவறானதே என்று ஆஸ்திரேலிய குடிவரவு அமைச்சர் பீற்றர் டுட்டன் தெரிவித்தார். இந்த விடயத்தில் மன்னிப்புக்கோ போர்ப் பகுதிகளுக்கு மனிதர் கள் சென்று திரும்பி வருவதற்கு ஏற்ற வகையிலோ செயற்படப்போவதில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (உ-ரி4)

# சிறுவனைக் குதறிக் கொன்ற நாய்கள்; உரிமையாளர் சிறையில் அடைப்பு

மிச்சிகன், டிசெ . 9

அமெரிக்காவில் 4 வயதுச் சிறுவனை பிட்புள் இன நாய்கள் நான்கு சேர்ந்து கடித்துக் குதறிக் கொன்றுள்ளன. மிச்சிகன் மாகாணத்தில், டெய்ரோட் பகுதியில் இடம் பெற்ற இந்தக் கொலைக்கு அதன் உரிமையாளர் ஜெனிகே அன்டனியோ பொறுப்பாக்கப்பட்டுள்ளார்.

நாய்களினால் நடத்தப்பட்ட அபாயமான தாக்குதலினால் இடம்பெற்ற சாவின் இரண்டாம் நிலைக் கொலைக் குற்ற வாளியாக நாய் உரிமையாளர் அன்டனியோ இனம் காணப்பட்டுள்ளார் எனச் சட்டத்தரணிகள் தெரிவித்தனர்.

நடந்து சென்று கொண்டிருந்த 4 வயதுச்சிறுவனையும் அவனதுதாயையும் நாய்கள் தாக்கின. சிறுவனை அன்டனியோவின் வீட்டின் பின்பகுதிக்கு இழுத்துச் சென்று மோசமான காயங்களை ஏற்படுத்தின. இதனால் சிறுவனின் உயிர் அந்த இடத்திலேயே பிரிந்தது.

சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிசார் 4 நாய்களில் மூன்றினை சுட்டு வீழ்த்தினர். ஒரு நாயைத் தமது பாதுகாப்பில் கொண்டு சென்றனர்.

சம்பவம் தொடர்பில் நேற்றுமுன்தினம் வழக்கு விசாரணை இடம்பெற்றது. அன்டனியோ தனது குற்றத்தை ஒப்புக்கொள்ளவில்லை. ஆனாலும் அவர் நீதிமன்றத்தினால் சிறையில் அடைக்கப்பட்டார்.

இந்த வழக்கில் வாதிட்ட அரச சட்டத்தரணி குறிப்பிட்ட அந்த நாய்களால் அயலவர்களுக்குப் பாதிப்பு என முன்னரே பலரும் எச்சரித்திருந்த போதும் உரிமையாளர் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கவில்லை என்று தெரிவித்தார். அத்துடன் நாய்களின் இந்த நடவடிக்கைகளுக்கு உரிமையாளரே பொறுப்பேற்க வேண்டும் எனவும் வாதிட்டார்.

பொறுப்பற்ற செல்லப் பிராணிகளின் வளர்ப்புக்கு இது உதாரணம் எனக் கண்டிக்கப்பட்டது. (உ-ரி4)

# பயங்கரவாதத்தை எதிர்கொள்ள ஜப்பானில் புதிய திணைக்களம்

சர்வதேச அளவில் பயங்கரவாத அச்சுறுத்தல்களிலிருந்து ஜப்பானியர்களைப்பாதுகாப்பதற்கானபுதியதிணைக்களத்தை அந்த நாட்டு அரசு உருவாக்கியுள்ளது.

வெளியுறவுத் துறை அமைச்சகத்தின் கீழ் இயங்கும் இந்தத் திணைக்கத்தில் 40 அதிகாரிகள் பணியாற்றுவர். அவர்களில் 20பேர்ஜப்பானிலும், 20பேர்வெளிநாட்டுத் தூதரகங்களிலும் பணிபுரிவர். இந்த ஆண்டுத் தொடக்கத்தில், இஸ்லாமிய அரசு (ஐ.எஸ்.) உறுப்பினர்களால் இரு ஜப்பானியர்கள் தலை துண்டித்துப் படுகொலை செய்யப்பட்டனர். அல்ஜீரியாவில் 2013ஆம் ஆண்டு நிகழ்த்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலில் 10 ஜப்பானியர்கள் உயிரிழந்தனர். பயங்கரவாதம் காரணமாக சர்வதேச அளவில் ஜப்பானியர்களுக்கு அச்சுறுத்தல் இருப்பதை இந்தச் சம்பவங்கள் காட்டுவதாகக் கூறப்படுகிறது.

"சர்வதேச பயங்கரவாதத்தை எதிர்கொள்வதற்காக, புதிய திணைக்களத்தை உருவாக்கியுள்ளோம். இது பயங்கர வாதம் குறித்த தகவல்களைச் சேகரித்து, ஆய்வுமேற்கொள்ளும். வெளிநாடு களிலுள்ள ஜப்பானியர்க ளைப் பயங்கரவாதத் தாக்குதல்களி லிருந்து பாது காப்பதே இதன் முக்கிய நோக்கம்" என்றார் ஜப்பான் அரசின் செய்தித் தொடர்பாளர் யோஷி ஹிடே சுகா.



# அபாயத்தை எட்டியது பீஜிங்கில் வளி மாசு

பீஜிங், டிசெ. 9

வளி மாசடைவு குறித்த சிவப்பு அபாய அறிவிப்பை அடுத்து சீனத் தலைநகர் பீஜிங்கின் பெரும் பகுதி செயலிழந்துள்ளது. மாநகர சபை நிர்வாகம் இரண்டு நாள்களுக்கு இந்த அபாய அறிவிப்பை விடுத்துள்ளது. இதனால் பாடசாலைகள், வேலைப் பகுதிகள் முழுமையாக மூடப்பட்டுள்ளன. வீதிகளில் கார்கள் நுழைவதற்கான அனுமதியும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

செவ்வாய்க்கிழமை காலை முதல் ஏற்பட்டுள்ள தாங்க முடியாத வளி மாசு எதிர்வரும் சில தினங்களுக்கு நீடிக்கும் என்று பீஜிங் மாநகர சுற்றுச் சூழல் பாதுகாப்புத் துறை அறிவித்துள்ளது.

பீஜிங்கில் தற்போது வளிமாசு சுட்டெண் 250 புள்ளிகளை எட்டியுள்ளது என்று அங்குள்ள அமெரிக்கத் தூதரகத்தை மேற்கோள்காட்டித் தகவல்கள் தெரிவிக்கின்றன. இது ஐக்கிய நாடுகள் சபையால் அறிவிக்கப்பட்ட அளவிலும் பார்க்க 10 மடங்கு அதிகமாகும்.

இதனால் நேற்று முதல் 3 நாள்களுக்கு வளி மாசைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

மக்கள் காற்றைச் சுவாசிக்க இயலாமல் முகங்களில் முகமூடிகளுடன் காணப்படுகின்றனர். நாளை நண்பகல் வரை இந்த வளிமாசு கடுமையாகத் தொடரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

உலகளாவிய ரீதியின் பச்சைவீட்டு விளைவு வாயுவை வெளிப்படுத்தும் நாடுகளில் சீனா முன்னணி வகிக்கின்றது. 2030ஆம் ஆண்டளவில் இதன் நிலை இன்னும் மோசமடையும் என சுற்றுச் சூழல் ஆர்வலர்கள் தெரிவித்தனர். சீனாவில் அனல் மின்நிலையம், நிலக்கரி அகழ்வு , வீடுகளில் குளிர் காலங்களில் அக வெப்பநிலைகளைப் பேணும் முயற்சி போன்றவற்றால் காபனின் வெளியீடும் குளிர்காலங்களில் அதிகரிக்கிறது. இதுவே வளி மாசுக்குக் காரணம் என்று கூறப்படுகிறது. (உ-ரி4)

> தேசிய முன்னணியின் தலைவர் மேரி லீ பென், அகதிகள், வெளிநாட்டினருக்கு பிரான்ஸில் இடமில்லை என்று பரப்புரை செய்து வருகிறார். நாங்கள் ஆட்சிக்கு வந்தால் வெளிநாட்டினரை வெளியேற்றுவோம் என்றும் அவர் வாக்குறுதி அளித்துள்ளார்.

# பிரான்ஸில் இனவாதக் கட்சி தேர்தலில் வெற்றி

பிரான்ஸ் மாகாணத் தேர்தலில் இனவாதக் கட்சியான தேசிய முன்னணி முன்னிலை பெற்றுள்ளது.

பிரான்ஸில் 13 மாகாண சபைகளின் ஆட்சி அதிகாரத்தை தீர்மானிக்கும் தேர்தல் இரண்டு கட்டங்களாக நடைபெறுகிறது. முதல்கட்டத் தேர்தல் கடந்த 6ஆம் திகதி நடைபெற்றது. இதில் தற்போதைய ஆளும் கட்சியான சோசலிசக் கட்சியும் எதிர்க்கட்சியான யு.எம்.பியும் பெரும் பின்னடைவைச் சந்தித்துள்ளன.

இனவாதக் கட்சி என்று சித்திரிக்கப்படும் தேசிய முன்னணி முன்னிலை பெற்றுள்ளது. தற்போதைய நிலவரப்படி 6 மாகாணங்களை அந்த கட்சி கைப்பற்றியுள்ளது.

அடுத்த கட்டத் தேர்தல் டிசெம்பர் 13ஆம் திகதி நடைபெறுகிறது. அந்தத் தேர்தலிலும் தேசிய முன்னணிக்கு வெற்றி வாய்ப்பு பிரகாசமாக உள்ளதாகக் கருத்துக் கணிப்பு முடிவுகள் வெளியாகி உள்ளன.

நவம்பர் 13ஆம் திகதி இரவு பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் ஐ.எஸ். தீவிரவாதிகள் கொடூரத் தாக்குதலை நடத்தினர். இதில் 132 பேர் உயிரிழந்தனர். இந்தச் சம்பவம் பிரான்ஸ் மக்களிடையே பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

தேசிய முன்னணியின் தலைவர் மேரி லீ பென், அகதிகள், வெளிநாட்டினருக்கு பிரான்ஸில் இடமில்லை என்று பரப்புரை செய்து வருகிறார். நாங்கள் ஆட்சிக்கு வந்தால் வெளிநாட்டினரை வெளியேற்றுவோம் என்றும் அவர் வாக்குறுதி அளித்துள்ளார்.

இந்த நிலையில் அவருக்கு ஆதரவாக பிரான்ஸ் மக்கள் வாக்களித்திருப்பது ஐரோப்பிய நாடுகளில் மிகவும் உன்னிப்பாகக் கவனிக்கப்படுகிறது. மேரி லீ பென்னின் மருமகள் மேரிசால் லீ பென் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவராக விளங்குகிறார். இருவரும் இணைந்தே கட்சியை வழிநடத்தி வருகின்றனர்.

தேசிய முன்னணியின் செல்வாக்கை முறியடிக்க தற்போதைய ஆளும் கட்சி அதிபர் ஹோலாந்தேவும், முன்னாள் அதிபரும் யு.எம்.பி. கட்சியின் தலைவருமான நிக்கோலஸ் சர்கோஸியும் புதிய வியூகங்களை வகுத்து வருவதாக பிரான்ஸ் ஊடகங்கள் தெரிவித்துள்ளன. அவற்றை எதிர்கொள்ளத் தயார் என்று தேசிய முன்னணித் தலைவர் மேரி லீ பென் பகிரங்கமாக சவால் விடுத்துள்ளார்.

இந்தத் தேர்தல் பிரான்ஸின் தேசிய அரசியலில் இப்போதைக்கு எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தாது. ஆனால் வரும் 2017இல் நடைபெற உள்ள அதிபர் தேர்தலில் மாகாணத் தேர்தல் முடிவு எதிரொலிக்கக்கூடும் என்று அரசியல் நோக்கர்கள் தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

“உலகில் உயர்ந்த நிலைக்கு உயர்ந்த பலரது வாழ்க்கை வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால் அதில் அவர்கள் எதிர்கொண்ட வேதனைகளும், சவால்களும் புரியவரும். அவர்களது வாழ்க்கை வரலாறு எமக்கோர் பாடமாகவே விளங்குகின்றது.”

# இன்ப துன்பங்களின் கலவைதான் மனித வாழ்க்கை

ராஜராஜன்

மனித வாழ்க்கையில் இன்பம், துன்பம், வேதனைகள், சோதனைகள் எல்லாமே நிறைந்து காணப்படும். தனது வாழ்நாள் முழுவதும் இன்பத்தையே அனுபவிப்பவர்களும் இல்லை. அதைப்போன்று துன்பத்தில் ஆழ்ந்து கிடப்பவர்களும் இல்லை.

ஆனால் மனிதர்கள் துன்பம் இல்லாத, வேதனைகள் அணுகாத வாழ்க்கை அமைவதைத்தான் எதிர்பார்த்து நிற்கிறார்கள். ஆனால் இது ஒருபோதுமே சாத்தியமாவதில்லை. உணவில்கூட அறுசுவை உள்ளதை அனைவரும் அறிவார்கள். இதில் இனிப்பு மட்டுமல்ல உறைப்பும் கசப்பும்கூட அடங்கியுள்ளன. ஆனால் நாம் இவற்றையும் எமது உணவில் சேர்த்துக் கொள்வதற்குத் தவறுவதில்லை. இந்த நிலையில் வாழ்க்கையில் மட்டுமே இன்பத்தை மட்டும் எதிர்பார்த்து நிற்பது எந்த வகையிலும் சரியானதாகத் தெரியவில்லை.

உலகில் உயர்ந்த நிலைக்கு உயர்ந்த பலரது வாழ்க்கை வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால் அதில் அவர்கள் எதிர்கொண்ட வேதனைகளும், சவால்களும் புரியவரும். அவர்களது வாழ்க்கை வரலாறு எமக்கோர் பாடமாகவே விளங்குகின்றது. உதாரணமாக, எமது அண்டைநாடான இந்தியாவின் தற்போதைய பிரதமரான நரேந்திரமோடியின் கடந்தகால வாழ்க்கை வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால் அதில் ஏராளமான வேதனை தருகின்ற விடயங்கள் பொதிந்துள்ளதைக் காணமுடியும். அவரது குடும்பம் மிகவும் ஏழ்மையான நிலையில் இருந்ததால் மோடியின் தாயார் அயல் வீடுகளுக்குச் சென்று அங்கே கொடுக்கப்பட்ட வேலைகளைச் செய்து, அதில் கிடைத்த வருமானத்தைக் கொண்டு தனது பிள்ளைகளைப் பராமரித்துள்ளார். மோடி அமெரிக்கா சென்றபோது தமது இளவயதில் தம்மைப் பெற்றெடுத்த தாயார் அனுபவித்த துன்பங்களைக் கூறியபோது அவரது கண்கள் கண்ணீரால் நிறைந்திருந்தன. மோடிகூட தமது இளவயதில் ரயில் நிலையங்களில் தேநீர் விற்றிருக்கிறார். இதைக் கூறுவதற்கு அவர் ஒருபோதுமே தயங்கியதில்லை. வெட்கப்பட்டதில்லை. இதனால்தான் உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாட்டின் பிரதமர் பதவியில் அவரால் அமர்ந்து கொள்ள முடிந்துள்ளது.

புகழ் பூத்த அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ஆபிரகாம் லிங்கனின் வாழ்க்கையும் சோதனைகள், தோல்விகள் பலவற்றைக் கொண்டிருந்தது. ஆனால் அவர் இறுதிவரை மனம் சளைக்காது முயற்சி செய்தார். அமெரிக்க நாட்டின் உயர்பதவியையும் அலங்கரித்தார். அது மட்டுமல்லாது அடிமைத்தளையால் பிணைக்கப்பட்டிருந்த கறுப்பின மக்களுக்கு விடுதலையையும் பெற்றுக் கொடுத்தார்.

சிலருக்கு இளமைக்காலம் இனிமையானதாகக் காணப்படும். பெற்றோரின் அரவணைப்பில் இவர்கள் இருக்கும்போது துன்பத்தின் நிழல் இவர்களை அணுகமாட்டாது. எல்லாமே சொர்க்கமாகத்தான் தோன்றும். ஆனால் இவர்கள் தமக்கென ஒரு வாழ்க்கையை அமைத்துக் கொண்டதன் பின்னர், சுமைகள் அழுத்த ஆரம்பிக்கின்றன. இதைச் சகித்துக் கொள்ள முடியாத இவர்கள் வாழ்க்கை நரகமாகி விட்டதெனக் கூறி ஓலமிடுகின்றனர். வாழ்க்கையில் எதிர்நீச்சல் போடுவதற்குத் துணிவில்லாத இவர்கள் இறுதியில் மீளமுடியாத துன்பத்தில் மூழ்கிவிடுகின்றனர்.

சவால்களைத் துணிவுடன் எதிர்கொள்பவர்களுக்கு வாழ்க்கை சிக்கல் மிக்கதாக இருக்காது. எதையும் எதிர்த்து நிற்கும்போதுதான் தீர்வொன்று கிடைக்கும். பிரச்சினைகளைக் கண்டு ஓடிஒளிவதால் நிரந்தரமான தீர்வும் கிடைக்காது. ஆறுதலும் ஏற்பட்டுவிடாது. மேலும் பிரச்சினைகள் தொடர்ந்து துரத்தவே செய்யும். ஆகவே பிரச்சினைகளைத் தள்ளி வைக்காது அவற்றை எதிர்கொண்டு சமாளிப்பதற்கான திறன் ஒவ்வொருவரிடமும் இருத்தல் அவசியமாகும். ஆனால் அசட்டுத் துணிச்சலும், அளவு கடந்த நம்பிக்கையும் நன்மைகளைத் தரப்போவதில்லை. மாறாக எதிர்மாறான விளைவுகளையே ஏற்படுத்தி விடும்.

ஜேர்மனியின் சர்வாதிகாரியான ஹிட்லர் உலக நாடுகள் அனைத்தையும் தனது காலடியின் கீழ்கொண்டு வருவதற்கு விரும்பினார். பல நாடுகள் அவரிடம் சரணடைந்தன. யூத இனத்தின் மீது தீராத வெறுப்புக்கொண்டிருந்த அவர், சுமார் 60 லட்சம் யூதர்களைப் படுகொலை செய்வித்தார். யூதர்களுக்கென இஸ்ரவேல் என்ற தேசம் உருவாகுவதற்கும் அவரே காரணமானார். ஆனால் அவர் தம்மீதும், தமது படைபலத்தின் மீதும் கொண்ட அதீத நம்பிக்கை இறுதியில் அவரது வீழ்ச்சிக்கு வழிகோலியது.

இவ்வாறுதான் எம்மில் சிலரும் நடந்து கொண்டு வீழ்ச்சியைச் சந்தித்துள்ளனர். எமது நாட்டின் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச கூட தாமே தொடர்ந்தும் ஜனாதிபதிப் பதவியில் தொடரமுடியுமென்ற நம்பிக்கையுடன் காய்களை நகர்த்தினார். ஆனால் எவருமே எதிர்பாராத வகையில் தமக்குக் கீழ் அமைச்சராகப் பணியாற்றிய மைத்திரிபால சிறிசேன என்ற சாமானியரால் வீழ்த்தப்பட்டார். அவர் இன்று சகல அதிகாரங்களையும் இழந்து சாதாரண மனிதராகக் காணப்படுகின்றார்.

நாம் இன்பத்தை அனுபவிக்கும்போது குதூகலிக்கின்றோம். ஆனால் துன்பம் வரும்போது துவண்டு விடுகின்றோம். இதுவொரு இயல்பான விடயம்தான். இன்பத்தையும், துன்பத்தையும் ஒரே சீராக ஏற்றுக்கொள்வதற்கு அனைவரிடத்திலும் மனப்பக்குவம் இருப்பதில்லை. ஒருசிலர்தான் இத்தகைய மனப் பக்குவத்தைக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் மாற்றம் வேண்டும். அப்போதுதான் வாழ்க்கை சுமையாக இருக்காது. சிலர் இன்பத்தையும் துன்பத்தையும் சமமாகப் பார்ப்பதற்கு நாம் ஞானிகளல்ல என்று கூறுகிறார்கள். மனிதர்கள் மனிதத் தன்மையுடன் இருந்தாலேபோதும், அவர்கள் ஞானிகளாகவே மாறிவிடுவார்கள். ஞானம் என்பது எமது மன நிலையைப் பொறுத்துத்தான் உள்ளது. இதை உணர்ந்து கொண்டால் இன்பமும், துன்பமும் ஒன்றாகவே பார்க்கப்படும் மனநிலை எம்மிடம் உருவாகி விடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலுமகேந்திரா திரைப்பட விழாவில் பல்வேறு விருதுகள்













தமிழினியன்

வேல்ஸ் சினிமாப் பட்டறையின் 2015ஆம் ஆண்டுக்கான பாலுமகேந்திரா திரைப்பட விழாவில் வீடியோ பாடல்கள், குறுந்திரைப்படம், முழுநீளத் திரைப்படம். ஒளிப்படத்துறை ஆகியவற்றுக்கான வேல்ஸ் விருது வழங்கும் விழா கடந்த நவம்பர் மாதம் வேல்ஸ் சினிமா பட்டறையின் இயக்குநர் கிருஷ்ணா தலைமையில் மட்டக்களப்பு தேவநாயகம் மண்டபத்தில் மாலை 5 மணிக்கு இடம் பெற்றது.

**2015 ஆம் ஆண்டுக்கான வீடியோ பாடலுக்கான விருதுகள்**

இதில், பூவிழிகள் வீடியோ பாடலில் நடித்தமைக்காக சிறந்த நடிகருக்கான விருதை ஜெராட் நோயலும், கலைஞன் வீடியோ பாடலில் நடித்தமைக்காக சிறந்த நடிகைக்கான விருதை திவ்யாவும், சிறந்த பாடகருக்கான விருதை உன் தோள்களில் சாயவா வீடியோ பாடலுக்காக சுதர்சன் ஆறுமுகமும், கண்ணா என்னிடம் என்னும் வீடியோ பாடலுக்காக சிறந்த பாடகிக்கான விருதினை சமீராவும், சிறந்த பாடலாசிரியருக்கான விருதை சதீஸ் காந்தும் சிறந்த இசை அமைப் பாளருக்கான விருதை சமீலும்; புகைப் படக் கலைஞருக்கான விருதை சஞ்ஜீவனனும், சிறந்த இயக்குநருக்கான விருதை அருள் செல்வமும், பெற்றுக் கொண்டனர். சிறந்த எடிட்டருக்கான விருதினை மாலை நிலா என்னும் வீடியோ பாடலுக்காக பிரியந்தனனும், சிறந்த தயாரிப்பளாருக்கான விருதை கைக்கு நிலாவே என்னும் வீடியோ பாடலுக்காக தர்சனும், லெனிகாந்தும் பெற்றுக்கொண்டனர்.

**2015 ஆம் ஆண்டுக்கான குறுந் திரைப்படத்துக்கான விருதுகள்**

சிட்டை குறுந்திரைப்படத்திற்காக சிறந்த நடிகருக்கான விருதிதை ஜெரூனும், சிறந்த புகைப்படக் கலைஞருக்கான விருதை தர்சனும் சிறந்த எடிட்டருக்கான விருதை கேனுசனும் பெற்றுக் கொண்டனர். சிறந்த நடிகைக்கான விருதை மாசறு குறுந்திரைப் படத்துக்காக நவயுக ராஜகுமாரும், சிறந்த இசை அமைப்பாளருக்கான விருதை சுதர்சனும், வாழ்நாள் சாதனையாளருக்கான விருதை ஏரம்புவும், 2015ஆம் ஆண்டுக்கான சிறந்த குறும்படம் மற்றும் சிறந்த இயக்குநருக்கான விருதை மதிசுதாவும், தாதா குறுந்திரைப்படத்துக்காகப் பெற்றுக் கொண்டனர். சிறந்த இயக்கு நாருக்கான விருதை உயிர் வலி குறுந்திரைப் படத்துக்காக சாளினி சாள்ஸ்சும், சிறந்த தயாரிப்பளாருக்கான விருதை பருக்கை குறுந்திரைப் படத்துக்காக சாந்தனும், சிறந்த குழந்தை நட்சத்திரத்துக்கான விருதை ஏன் இந்த இடைவெளி குறுந்திரைப் படத்துக்காக சர்வேசும், சிறந்த திரை கதைக்கான விருதினை பை குறுந்திரைப் படமும், சிறந்த ஒளிப்படக் கலைஞருக்கான விருதினை சாய் சங்கரும் பெற்றுக் கொண்டனர். வாழ்நாள் சாதனையாளருக்கான விருதினை மகேஸ்வரி ரெட்னம் யாசகம் குறுந்திரைப் படத்துக்காகப் பெற்றுக் கொண்டார்.

**2015 ஆம் ஆண்டுக்கான முழு நீளத் திரைப்படத்துக்கான விருதுகள்**

சிறந்த நடிகருக்கான விருதை சுஜந்தனும், சிறந்த தயா ரிப்பாளருக்கான விருதை சுபாகரனும், சிறந்த இயக்குநருக்கான விருதை கவிமாறன் சிவாவும் அச்சம் தவிர் திரைப் படத்துக்காகப் பெற்றுக் கொண்டனர். சிறந்த நடிகைக்கான விருதை நண்பி திரைப்படத்திற்காக சுஜாதாவும், சிறந்த ஸ்கிறீன் பிளேக் கான விருதை சர்ப்பங்கள் தீண்டும் பிழைத்து திரைப்படத்துக்காக கொன்ஸ்ரனும் பெற்றுக்கொண்டனர்.



**சிறப்பு விருதுகள்**

சொல்லிசை வேந்தன் விருது, கிசான் மகேசனுக்கும், கவிவித்தகன் விருது, அஸ்மினுக்கும், வளர்ந்துவரும் இளம் இயக்குநர் விருது, சோபிகாவுக்கும் வளர்ந்துவரும் இளம் நாயகன், விருது சிந்தருக்கும், ஞாபகார்த்த விருது கிருஷ்ணகாந்துக்கும் வளர்ந்துவரும் சொல்லிசைக் கலைஞன் விருது சி.வி.லக்சுக்கும் வழங்கப்பட்டன.

இவ்விருதுகளை இயக்குநர் பாலுமகேந்திராவின் சீடனும் எத்தன் திரைப்படத்தின் இயக்குநருமான சுரேஷ்கிருஷ்ணா வழங்கியிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் உளநலம் காக்கும் சிறுகதைத் தொகுப்பு

செ.மகேஷ்

**இ.இராஜேஸ்கண்ணன் தந்துள்ள "இரகசியமாய்க் கொல்லும் இருள்"**

இன்றைய இலக்கியச் சூழலில் புகழ் நிலைக்கவும், பொருள் பெருக்கவும் எழுத்தாளர்கள் பலர் எழுதுகிறார்கள் என்ற கருத்துக்கு மத்தியில் அறம் நிலைக்க எழுதும் எழுத்தாளர்களுள் ஒருவராகப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் இ.இராஜேஸ்கண்ணன் திகழுகிறார். அவரது அண்மைக்கால வெளியீடாக "இரகசியமாய்க் கொல்லும் இருள்" எனும் சிறுகதைத் தொகுதி வெளி வந்துள்ளது.

"மேலான மனிதன் அறம்பற்றி யோசிக்கிறான். கீழான மனிதன் சுகம்பற்றி யோசிக்கிறான்" என்கிறார் கொன்பியூசியஸ். இவரது கருத்தை முன் நிறுத்தி நூலுக்கு அணிந்துரை எழுதியுள்ளார் கலாபூசணம் கோகிலா மகேந்திரன். "இந்த உலகில் அறம் நிலைக்க வேண்டும் என்று யோசித்து வேறு எதுவும் செய்ய முடியாமல் பேனாவைக் கையில் எடுப்பவர்கள்தான் எழுத்தாளர்களாகிறார்கள்" என்ற வரிசைக்குள் இராஜேஸ் கண்ணன் தாம் உயர்ந்து நிற்பதை உணர்த்துகிறார்.

கவிதை, கட்டுரை, சிறுகதை எனப் பல்துறை இலக்கியப் படைப்பாளியாக ஒளிரும் அவரது இன்றைய எழுத்தாக்கங்கள் பல, சமூக மாற்றத்துக்கான தூண்டல்களாக அமைவதை அவதானிக்கலாம். இன்று முதன்மை பெற்றுவரும் பிள்ளைப்பருவத்தின் உள சமூகப்பணிகள் சமூகத்தில் உரியவாறு ஆழவேர் விட இத்தகைய படைப்புக்கள் பெரும் துணையாகும் என்ற சிந்தனையோடு "இரகசியமாய்க் கொல்லும் இருள்" எனும் சிறுகதைத் தொகுதியை இ.இராஜேஸ் கண்ணன் ஆக்கி வெளியிட்டுள்ளார்.

**சிறுவர்களுக்கு வழிகாட்டுகின்றது**

சிறுவர் உள வீரியம் பண்புற, சீரிய செயற்பாடுகளுக்கு எமது சமூகம் வழிப்படுத்தப்பட வேண்டுமென்பதை இவரது பல கதைகள் வெளிப்படுத்துகின்றன. ஆரோக்கியமான ஆக்க இலக்கியம் படைக்கப்பட முன்மாதிரியாகத் திகழ்பவர்களுடன் இவரும் தம்மை இணைத்துக் கொண்டுள்ளார்.

இந்தச் சிறுகதைத் தொகுப்பிலே உள்ள கதைகள் உடல், உள, சமூக, ஆன்மிக நன்னிலைகளை நோக்கிய வளர்ச்சிக்கு உந்துதலைத் தருதல் வேண்டும் என்பதை உணர்த்துகின்றன.

தொகுப்பிலே உள்ள முதற்கதை "வாசக் கட்டி" எனும் சிறுகதை. வாசக்கட்டி என்பது கதையின் கதாபாத்திரமான சிறுவனுக்கு வைக்கப்பட்ட பட்டப் பெயர்! அவன் சிறு பிள்ளையாக அறியாத வயதில் செய்த சிறு களவின் பூதாகரமான பழிச் சொல்லாக அது அவன் மீது தொற்றிக் கொள்ளுகிறது. அதனால் அவனது இயற் பெயரான சந்துரு மறைந்து போனதை எண்ணி மனம் புழுங்கும் சிறுவனின் உளவேதனையை அச் சிறுகதை வெளிப்படுத்துகிறது.

சிறுவர்களின் செயற்பாடுகளை, முதிர்ந்த பெரியவர்களின் செயற்பாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதுண்டு. அதன் நோக்கில் ஒவ்வொருவரும் தமது அனுபவத்தின் முதிர்ச்சிக்கு ஏற்பச் சிறுவர்களுக்குப் பொருந்தாத அறிவுரைகளை வழங்குவதும் இன்றைய சமூகத்தில் வளர்ந்து விட்டது. எதற்கும் சிறுவர்களின் வயதுடன் அவர்களின் உளவயதிலும் கவனம் செலுத்துதல் அவசியம் என்பதற்குத் தொகுப்பிலுள்ள பல கதைகள் உதாரணங்களாகின்றன.

ஒரு தாய் தனது மகனை நல்லவன் என்று உலகம் போற்றிப் புகழ வேண்டும் என எதிர்பார்ப்பது இயல்பானதே. அந்த வகையில் சந்துருவின் மனச் சஞ்சலங்களைக் கருத்திற் கொண்டு, தாயாரின் அறிவுரைகளை அவன் மனங்கொள்ளும் வகை தெரிகிறது. மனந்தொடும் வாசக்கட்டியால் சந்துருவின் சிந்தையும் செயலும் எவ்வாறு தடுமாறுகின்றன என்பதைக் கதாசிரியர் அழகுற வார்த்தைகளால் விரித்துரைத்துள்ளார்.

> ஒரு போரின் பின்னான சமூகமும் அதன் வாயிலாகச் சமூகத்தில் விளைந்த உளவியல்சார் சிந்தனைகளும் செயற்பாடுகளும் எவ்வாறு வளரும் சிறுவர்களின் வாழ்க்கைப் படிகளில் மாற்றங்களை ஏற்படுத்துகின்றன என்பதை இவரது கதைகளின் கருக்கள் பல வெளிப்படுத்துகின்றன.

**ஒன்பது சிறுகதைகள் கொண்ட தொகுப்பு.**

முழுமையாக ஒன்பது சிறுகதைகளைக் கொண்டுள்ள இத்தொகுப்பு சிறுவர்களை மையமாகக் கொண்டே, அவர்களின் அகவுலகப் பரம்பலுக்கேற்பப் புறவுலகத் தொடர்புகளில் ஏற்படத்தக்க விளைவுகளைச் சார்ந்து எழுதப்பட்டுள்ளன.

ஒரு போரின் பின்னான சமூகமும், அதன் வாயிலாகச் சமூகத்தில் விளைந்த உளவியல்சார் சிந்தனைகளும் செயற்பாடுகளும் எவ்வாறு வளரும் சிறுவர்களின் வாழ்க்கைப் படிகளில் மாற்றங்களை ஏற்படுத்துகின்றன என்பதை இவரது கதைகளின் பல கருக்கள் வெளிப்படுத்துகின்றன.

போரின் கொடுமைக்குள் சிக்குண்டு தவித்தபோதும், வாழ்வின் எதிர்காலம் நோக்கிய பாதைகளைச் செப்பனிட்டு வாழ்வுக்கு அர்த்தம் கற்பிக்கத் துடிக்கும் இரு பிஞ்சு உள்ளங்களின் சிந்தனைகளையும் செயற்பாடுகளையும் "சுமப்பவர்கள்" என்ற கதையினூடாகக் காணுகிறார். சாரங்கன், அவனது சகோதரி சாகித்யா ஆகிய சிறுவர்களிடையே தொடரும் உறவும் பாசமும் உழைப்பின் தேவையும் கதாசிரியரின் கருத்திலே விளைத்த உறுத்தல்கள் மூலம் வெளிப்படுகின்றன. பயணத்தில் சந்தித்த அவர்களைச் சில தினங்கள் காணாமையால் அவர்களின் வீடு தேடிச் சென்று போரின் வடுக்களோடு தனித்த தாயாரின் இயலாமையைப் பார்க்கிறார். மேலும், வேதனை உயர்கிறது. இந் நிலையில் அவர்களுக்கு உதவ வேண்டும் என்ற வேகத்தோடு அவர்களுக்குக் கூறும் வார்த்தைகளாலும் செய்யும் செய்கைகளாலும் பிள்ளைகளையும் தாயாரையும் ஆறுதல் படுத்த முயலுகிறார்.




**ஆதரவற்ற குடும்பங்கள்**

இத்தகைய ஆதரவற்ற குடும்பங்களையும், அவற்றின் பாரங்களைச் சுமக்கும் சிறுவர்களின் வேதனைகளையும் கதை வெளிப்படுத்துகிறது. இறுதியில் பிள்ளைகள் கையசைத்து அவரை வழியனுப்பும் செய்கையால் மேலும் உதவும் நெஞ்சம் உரம்பெறுவது உணர்த் தப்படுகிறது.

மரணங்களின் பின்னான கிரியைகளால் உறவுகளின் வேதனை விளைந்த மனங் கள் சாந்தப்படுத்தப்படுகின்றன. வேத னையை அவை குறைக்கின்றன. எமது உறவுகளின் நினைவாலயங்களெல்லாம் அவ்வுறவுகள் எம்மோடு என்றும் சீவிக்கின்றன என்பதையே உணர்த்துகின்றன. பூக்கள் என்ற கதை மூலம் சிறுவனான அதிரதனின் அன்பையும் நட்பையும் விரிக்கும் கதாசிரியரைக் காணலாம். அதிரதனின் நட்புக்குரிய கிரிதரன் பதுங்கு குளிக்குள் வீசப்பட்ட விமானக் குண்டுகளினால் சகோதரிகளோடு இறந்து போனான் என்ற உண்மையைப் புரிந்து கொண்டாலும், அவனது நினைவாக நாட்டிய பூஞ்செடியின் மலர்ச்சியில் மனம் மகிழ்வதைக் காணுகிறோம். அச்செடியில் விரிந்த பூவுக்கேற்படும் பாதிப்புகள் அதிரதனை வேதனைக்குள்ளாக்குகின்றன. சிறுவர்களின் உள்ளத்தின் மென்மையைக் கதை சுட்டி நிற்கிறது. இவ்வாறு இந்தத் தொகுப்பிலே காணப்படும் சிறு கதைகள் யாவும் குழந்தை உள்ளங்களை வருத்தும் வலிகளை விலக்கும் வழி தேடும் வகையில் எம்மைச் சிந்திக்கத் தூண்டுகின்றன.

சிறுவர்களின் சிந்தனை விரிவை உணராத நிலையில் அவர்களின் செயற்பாடு களில் உயர்ச்சியையும் வளர்ச்சியையும் தேடும் நோக்கில் சிறுவர்களை அழுத்தும் பெற்றோரையும் ஆசிரியரையும் நாம் நித்தமும் பல்வேறு சந்தர்ப்பங்களில் காணுகின்றோம். சிறுவர்களின் வயது, சிந்தனை என்பவற்றின்பால் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ற உளப்பாதிப்புகள் ஏற்படாத வகையில், அவர்களோடு பழகுவதும், வழிகாட்டுவதும் இன்றைய தேவையாகும். சிறுவர்களின் சூழல் , அவர்களின் உறவுகளுக்கு நிகழ்ந்த துயரங்கள் யாவுமே சிறுவர்களின் உள்ளத்தை மாத்திரமல்ல அவர்களது உடல்நிலையையும் பாதிப்பவையே. சிறுவர்களின் எதிர்காலம் குறித்துச் சிந்திக்கும் ஒவ்வொருவரும் சிறுவர்களோடு இணைந்து மகிழ்ச்சிதரும் விளையாட் டுக்களிலும் நலந்தரும் வழிகாட்டல்களிலும் ஈடுபடுதல் வேண்டும் என்பதே விருப்பத்துக்குரியதாகும்.

**சமூக நலன் கருதிய எழுத்து**

நூலின் தலைப்பாக்கப்பட்டுள்ள "இரகசியமாய்க் கொல்லும் இருள்" எனும் சிறுகதையுடன் மேலும் தொகுப்பில் இடம் பெற்றுள்ள "தலைவிதிப்படி" "நீண்ட தூரம்" "துகிலுரிப்பு" "மானக்கேடு" "தூவானம்" ஆகிய கதைகள் அனைத்துமே உள வளம் சிறக்க ஊன்றுகோலாகும்.கதைக் கருக்களைமையமாகக் கொண்டே ஆக்கப்பட்டுள்ளன. சமூக நலன் கருதியே எழுதுகின்ற அவரின் கதைகளிலிருந்து சிறுவர் உளநலம் நோக்கிய பார்வையோடுஎழுதப்பட்ட கதைகளையே இத்தொகுப்பில் தந்திருப்பது மிகவும் சிறப்பானதாக அமைந்துள்ளது.

"இரகசியமாய்க் கொல்லும் இருள்" என்ற இந்தச் சிறுகதைத் தொகுதி சிறுவர்களின் வளர்ச்சியில் அக்கறை கொண்டு, அவர்களின் எதிர்காலம் சிறப்புற வழிகாட்டும் நல்ல கருத்துக்களை உள்ளடக்கி எழுதப்பட்டுள்ளன. இ.இராஜேஸ்கண்ணனின் முயற்சி பாராட்டுக்குரியதாகும். தொடரும் அவரது இலக்கிய ஆக்கங்கள் எமது எதிர்காலத்தை வளப்படுத்தும் வகையில் தேர்ந்த எழுத்துக்களால் சமூகத்தில் ஆரோக்கியமான மாற்றத்தை எற்படுத்தும் என நம்பலாம்.

# யாழ்ப்பாணம் அரங்கக் கலைக் கழகம் ஆரம்பம்

யாழ்ப்பாணம் ஆனைக் கோட்டை – உயரப்புலத்தில், "யாழ்ப்பாணம் அரங்கக் கலைக் கழகம்" ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் நாடகத்துறை சார்ந்த பலரும் கலந்துகொண்டனர். அத்துடன் நாடக ஆர்வலர்களும் கலந்துகொண் டனர்.

நாடகக் கற்கை மற்றும் ஆற்றலை அளிக்கைகளூடாக வெளிப்படுத்துதல், அரங்குடன் தொடர்புபட்டவற்றை ஆவணப்படுத்தல் போன்றவற்றை நோக்கமாகக் கொண்டு இந்தக்கழகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண அரங்கக் கலைக் கழகத்தின் பணிப்பாளரான தீ. தர்மலிங்கம், யாழ்ப்பாணப் பல்கலைக் கழக நாடகமும் அரங்கியலும் சிறப்புக் கற்கைநெறிப் பட்டதாரி என்பதுடன் பாண்டிச்சேரிப் பல்கலைக் கழகத்தில் மேற்படிப்பை மேற்கொண்டவர் என்பதும் குறிப் பிடத்தக்கது. (10)





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# ஜேர்மனியில்
## பொன் மாலைப்பொழுது

லண்டனில் இருந்து வெளி வரும் 'பாமுகம்' இணையத் தொலைக்காட்சியும், லண்டன் தமிழ் வானொலியும் இணைந்து பல பொன்மாலைப் பொழுது அரங்குகளை ஐரோப்பா முழுவதும் இளையவர்களை வைத்து வருடா வருடம் நடத்தி வருகின்றன. ஊடக சரித்திரத்தில் இது மாபெரும் வெற்றியே. இந்த ஆண்டும் கடந்த 3 ஆம் திகதி ஜேர்மனி- கயன்ஸ் வேர்க் நகரின் மாபெரும் மண்டபமொன் றில் பல்மொழி விழாவாக ஜேர்மனிய அரசின் கலை, கலாசார நிகழ்வுகள் கொண் டாடப்படும் வாரத்தில் ஜேர்மனிய அமைப்புக்களுடன் ஒன்றிணைந்து இந்த நிகழ்வு நடத்தப்பட்டது.

கலைஞர்கள் கௌரவிப்பு, கானக்குரல் -2015 (எம்மவர் பாடல் போட்டி), நாட்டிய கலாஜோதி திருமதி துஷ்யந்தி ஜெகதீஸ்வரனின் நாற்பது நாட்டியத்தாரகைகள் பங்கு கொண்ட சூரசங்காரம் நாட்டிய நாடகம், நடனப் போட்டிகள், நாடகம் என அனைத்தும் இந்த நிகழ்வுக்காக உருவாக்கப்பட்டு, பார்வையாளர்களை ஈர்க்கும் வண்ணம் பயனுள்ள நிகழ்வுகளாகவும் 400 க்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் இணைந்த நிகழ்வாகவும் நடத்தப்பட்டுள்ளது.

உருவாக்க நிகழ்வுகளுக்கு முதன்மை தந்தது. ஜேர்மனிய கலாசார நிகழ்வு ஒன்றியத்தின் சார்பில் ரஷ்ய நாட்டின் நடனங்கள் இரண்டும் இணைந்து வலுத்தந்தமை, விழாவுக்கு மற்றொரு வெற்றி எனலாம். அவர்களின் சார்பில் பிரான் மெயஸ் என்பார கலந்துகொண்டுவிழாவின்சிறப்பை பாராட்டியமை மூலமும், அடுத்த தலைமுறையினரின் நெறிப்படுத்தலின் வெளிப்பாட்டின் இலக்கை பொன்மாலைப் பொழுது நிகழ்வு தொட்டு உயர்ந்துள்ளது எனலாம்.

செல்விகள் வேதிகா ஜெகதீசன், தீபா தர்மராஜா, ராகவி மோகன், விதுஷா ஜெகதீசன் அபிராமி தவமணிராஜா, செல்வன் வாகீசன் போன்றோர் நிகழ்வின் முற்று முழுதான பொறுப்பை ஏற்று அறிவிப்பாளர்களாக செயற்பட்டும் நிகழ்வுகளை ஒருங்கமைத்து மேடையேற்றியும் நிறைந்த பாராட்டையும் பெற்றுக்கொண்டனர். அத்துடன் ஜேர்மனிய அமைப்புக்களுடன் இணைந்து எதிர் கால வேலைத்திட்டப் பயிற்சிப்பட்டறை ஒன்றை நடத்த அனுமதி கிடைத்த பொன் மாலைப் பொழுதாக பாமுகத் தொலைக் காட்சி ஜேர்மனியில் அங்கீகாரம் பெற்றுக் கொண்டது.

டொச்மொழி அறிவிப்பாளராக வேதிகா ஜெகதீசனை இந்த நிகழ்வின் பொறுப் பாளர்கள் தேர்வு செய்ய பொன்மாலைப் பொழுது வழிகாட்டியுள்ளது. எட்டுக்கும் மேற்பட்டு அனுசரணை நிறுவனங்கள் விழாவுக்கு உதவிக் கரமிணைத்து ஊக்குவிப்பு வழங்கின. கானக்குரல் பாடல்போட்டிகளுக்கான பரிசை இயக்குநர் ரவி வழங்கிக் கௌரவித்தமையும், ஆறுக்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் இணைந்துபாடித் தமது திறமைகளை வெளிப்படுத்தியமையும், எம் கலைஞர்களுக்கு ஊக்க சக்தியையும் உயர் திறன் மதிப்பையும் வழங்குவதாக அமைந்தது. லண்டன் தமிழ் வானொலிக் கலையகத்தாரே வெற்றியின் முதன்மையாளர்கள். இதுபோன்ற அரங்குகள் மூலம் இளையவர்களின் திறமைக்கும் பல்மொழி இணைவுக்கும் வித்திட்டுவிருட்சமாக வளர்ந்தோங்கி எம்தாய் மொழியின் அடையாளப்பதிவுகளை நிலைப் படுத்தி வளர வாழ்த்துகிறோம்.



ஐரோப்பாவில் பிறந்து வளர்ந்துவரும் தமிழ்ச் சமூகத்தினரையும், வாழ்ந்து வரும் தமிழ் இளையோரையும் நல்வழிப் படுத்திவரும் லண்டன் தமிழ் வானொலியின் இந்தப் பொன்மாலைப் பொழுது நிகழ்வுகள் சுவீஸ், லண்டன், ஜேர்மனி, பிரான்ஸ், டென்மார்க், நெதர்லாந்து போன்ற நாடுகளில் பல ஆண்டுகளாக நடைபெற்று, தற்போது 155 ஆவது நிகழ்வாக நடந்துமுடிவடைந்துள்ளது. 'அடுத்த தலைமுறை நோக்கி' என்ற மகுடவாசகத்தைத் தாரக மந்திரமாகக் கொண்டு முன்னெடுக்கப்படும் இந்த அற்புத நிகழ்வை லண்டன் தமிழ் வானொலியின் அதிபர் நடாமோகனின் வழி நடத்தலில் பல அறிவிப்பாளர்கள் ஒன்று சேர்ந்து பணியாற்றுகிறார்கள். இவர்கள் யாவரும் பாராட்டுக்குரியவர்களே. இன்று ஐரோப்பாவில் இந்திய தொலைக் காட்சிகளின் அதீத படை எடுப்புக்களும், சின்னத்திரையும், சினிமாவும் என்று உலாவரும் வேளையில் லண்டன் தமிழ் வானொலியின் இந்தச் செயற்பாடு, ஒரு வித்தியாசமான முறையில் தனது பணியைச் செவ்வனே செய்து வருவது பாராட்டுக்குரிய விடயமாகும். ஐரோப்பாவில் நேயர்களை அதிகமாகக் கொண்டு இயங்கி வரும் இந்த வானொலிக்கு தமிழ் மக்களின் பேராதரவுகள் தொடர்வதால் 156 ஆவது பொன்மாலைப் பொழுது நிகழ்வை லண்டனில் கொண்டாடுவதற்கான ஆயத்தங்களை மேற் கொண்டுள்ளனர். எப்படியாயினும் தமிழ் ஊடகப்பரப்பில் இந்த வானொலியின் அளப்பரிய சேவை போற்றுதலுக்கும் பாராட்டுதலுக்கு உரிய ஒன்றாகும்.

> ஜேர்மனிய கலாசார நிகழ்வு ஒன்றியத்தின் சார்பில் ரஷ்ய நாட்டின் நடனங்கள் இரண்டும் இணைந்து வலுத் தந்தமை விழாவுக்கு மற்றொரு வெற்றி எனலாம்.

இடம் வழங்கும் லண்டன் தமிழ் வானொலி தன்னிலக்கில் உயர்வுகண்டது போல், பொன்மாலைப்பொழுது அரங்குகளும் முற்றுமுழுதாக இளையவர்களின் ஒன்றிணைவில், நிகழ்வுகளின் ஒருங்கமைப்பில் மிகமிகச் சிறப்புற அமைந்

## மூத்த இசைக் கலைஞர்கள் சந்திப்பு

யாழ்ப்பாணத்தின் மெல்லிசையின் வளர்ச்சியில் 70 களில் தோன்றிய இசைக்குழுக்களில் பங்களித்த மூத்த இசைக் கலைஞர்களது சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது. கடந்த வியாழக்கிழமை அன்ரன் டேவிட் இல்லத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றுள்ளது.

இசைவாணர், கலைமணி, கலை மாமணி, ஹிந்தி பொப் இசைத் திலகம் போன்ற பல விருதுகளை தனதாக்கிய மூத்த கலைஞர் அன்ரன் டேவிட்டின் 60ஆவது ஆண்டு இசைப் பயணத்தை முன்னிட்டு யாழ். இலக்கிய குவியத்தின் சார்பில் 'அன்ரன் டேவிட் 60' என்ற ஆவ ணப் படம் வெளியாகவுள்ளது. இந்த ஆவணப்படத்தின் தொடக்க விழாவுக்காகவே இந்தச் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டது. குறித்த ஆவணப் படத்தை யாழ். 'எம் வேர்ல்ட்' திரைப்பட நிறுவனம் தயாரிப்பதுடன் திரைப்பட இயக்குனர் எஸ்.ஆர்.பிரதீப் இதனை இயக்குகிறார்.

நடைபெற்ற இந்த ஒன்று கூடலில் யாழ். மூத்த கலைஞர்களான கண்ணன் இசைக் குழுவின் நிறுவுனர் கண்ணன், யாழ். மணிக்குரல் சற்குணம், அருணா இசைக்குழு அருணா, ராஜன் இசைக்குழு யாழ். ரமணன், சாரங்கா இசைக்குழு வரதன், மண்டலேஸ்வரன், அரிய புத்திரன், தனபால், பிரான்சிஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வர்ணம் தீட்டலாம் வாங்க



## அறிந்து கொள்ளுங்கள்

- முதன் முதலாக தொழிற்புரட்சி நடைபெற்ற நாடு - இங்கிலாந்து.
- குளோரினிலிருந்து தயாரிக்கப்படும் மருந்துப் பொருள் - குளோரோஃபார்ம்.
- மனிதனுடைய உடல் உறுப்புக்களில் வாழ்நாள் முழுவதும் ஆரோக்கியமாக இருப்பது - மூளையில் உள்ள செல்கள்.
- எச்.பி.ஜே. பைப்லைன் திட்டமானது எதைக் கொண்டு செல்ல உருவாக்கப்பட்டது - இயற்கை வாயு
- இத்தாலி நாட்டின் தேசிய மலர் - லில்லி.
- ஒரு மணி நேரத்தில் 74 கி.மீ. வேகத்தில் ஓடுவது - நெருப்புக்கோழி.
- எறும்புகளில் உள்ள வகைகள் - 14,000 (அவைகள் ஒரு போதும் உறங்குவதில்லை)
- நயாகரா நீர்வீழ்ச்சியைக் கண்டுபிடித்தவர் - லூயிஸ் ஹெனபின்.
- ஆசியாவில் முதன் முதலாக தொழில் மயமான நாடு - ஜப்பான்.
- சூரிய குடும்பத்தில் அதிக வெப்பமான கிரகம் - புதன்.
- சுறா மீனின் வாழ் நாள் - 20 முதல் 30 ஆண்டுகள்.
- கொசுக்களில் 3,500 வகைகள் உள்ளன.

## வரலாற்றில் இன்றைய தினம்

1738 - பெரசலு சிலேசியாவிலிருந்து யூதர்கள் வெளியேற்றம்.

1793 - நியூயோர்க் நகரின் முதலாவது செய்திப் பத்திரிகை 'அமெரிக்கன் மினேர்வா' வெளியீடு.

1941 - ஜப்பான், ஜேர்மனி, இத்தாலி மீது சீனா போர்ப்பிரகடனம்.

1948 - இனப்படுகொலைக்கு எதிரான பட்டயம் ஐக்கிய நாடுகள் சபையில் ஏகமனதாக அங்கீகாரம்.

1851 - முதலாவது (YMCA) வட அமெரிக்காவில் தொடக்கி வைப்பு.

1957 - இஸ்ரேலுக்கான முதலாவது ஜப்பானிய தூதுவர் நியமனம்.

1971- ஐக்கிய அரபு எமிரேற் ஐக்கிய நாடுகள் சபையில் இணைவு.

1979 - சின்னமுத்து வைரஸ் முற்றாக அழிக்கப்பட்டதாக உறுதிப்படுத்தப்பட்டது.

1987- இஸ்ரேல் - பலஸ்தீனிய முரண்பாடு. காசா கரையோரம் மேற்கு கரையோரங்களில் முதலாவது பலஸ்தீனிய எழுச்சி FIRST INTIFADA ஆரம்பம்.

1988 - அரச கரும மொழிச் சட்டம் இன்று நாடாளுமன்றில் சமர்ப்பிப்பு. ஆதரவாக 123 வாக்குகள்

- வடக்கு - கிழக்கு மாகாணசபை முதலமைச்சராக, ஜனாதிபதி முன்னிலையில் வரதராஜப் பெருமாள் சத்தியப் பிரமாணம்.

2002 - நோர்வே பேச்சு வார்த்தையின் அடிப்படையில் சமாதானம் சரிவருமா எனக் கூறமுடியாது என நிட்டம்புவ கூட்டத்தில் ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு.

- ஈராக் நாட்டில் விஷவாயுக் குண்டுகள் இல்லையென நிபுணர்கள் தெரிவிப்பு.

2006 - மே 2 ஆம் திகதி உதயன் பத்திரிகை மீதான தாக்குதல் தொடர்பாகத் தகவல் தர பொலிஸார் கோரிக்கை தகவலை வழங்க 021 222 2222 தொலைபேசி இலக்கம் அறிவிப்பு.

- சமாதானத் தூதுவர் போவர் வெறுங்கையுடன் நாடு திரும்பினார்.

- வாகரையில் கடும் ஷெல், விமானக் குண்டுத் தாக்குதல். 20 பேர் வரை உயிரிழந்திருக்கலாம் என ஊகம்.


- ஜிம்பிறவுண் அடிகளார் காணாமற் போனமை தொடர்பாக தகவல்தர பொலிஸார் கோரிக்கை.

2007 - கதிரவெளியில் தேடுதல். 122 தமிழர்கள் கைது.

2012 - பயங்கரவாதப் பொலிஸாரால் கைது வேட்டை தொடர்கின்றது. பல பகுதிகளிலும் பலர் கைது.

2013- இந்தோனேஷிய புகையிரத விபத்தில் 7 பேர் சாவு 63 பேர் படுகாயம்.

# மாடு வாடகைக்குப் பிடித்த கதை



பரமார்த்த குருவும், சீடர்களும் தலயாத்திரை செய்யும் நோக்கத்துடன் புறப்பட்டனர். ஒவ்வொரு புண்ணிய தலத்துக்கும் சென்று கடவுளை வழிபட வேண்டும் என்பது அவர்கள் நோக்கம்.

பரமார்த்த குருவுக்கு வயதாகிவிட்டது. அதனால் உடல் மிகவும் தளர்ச்சியுற்று நீண்ட தூரம் நடக்கச் சக்தியற்றிருந்தார். ஆகையால் அவர் மட்டும் சவாரி செய்வதற்காக ஒரு மாட்டை வாடகைக்கு அமர்த்திக் கொள்வது என்று சீடர்கள் தீர்மானித்தார்கள்.

அந்த ஊரில் மாடு வைத்திருப்பவர்களையெல்லாம் சந்தித்து, குரு சவாரி செய்வதற்கு மாடு ஒன்று தருமாறும் அதற்கு வாடகை கொடுத்து விடுவதாகவும் கூறினர்.

குருவுக்கு மாட்டைக் கொடுத்தால் மாட்டின் பாதுகாப்புக்காக சீடர்கள், குருவுடனேயே நடந்து செல்ல வேண்டியிருக்கும்.

சிலர் மாட்டை வாடகைக்குக் கொடுக்க எண்ணினார்கள். தினம் வாடகையாக பத்துப் பதினைந்து பணம் கேட்டார்கள்.

ஒரு மனிதன் வற்றி உலர்ந்து எலும்புக் கூடாக இருந்த ஒரு மாட்டை ஓட்டிக்கொண்டு வருவதைக் கண்டார்கள்.

அவனை நிறுத்தி "ஐயா உங்கள் மாட்டை எங்களுக்கு சவாரி செய்வதற்காக வாடகைக்குத் தருவீரா?" என்று கேட்டனர்.

மாட்டுக்காரன் யோசித்தான். பிறகு, "மாட்டை வாடகைக்குத் தருகிறேன். அதற்கு ஐந்து பணம் தரவேண்டும். மாட்டின் பாதுகாப்புக்காக நானும் உடன் வருவேன். என் சாப்பாட்டு செலவு, மாட்டின் தீவனச் செலவு ஆகியவற்றைத் தந்துவிட்டால், சவாரிக்கு மாட்டை அளிப்பதாக மாட்டின் சொந்தக்காரன் கூறினான்.

அவன் கேட்ட தொகை மிகவும் மலிவு என்று தோன்றியதால் பரமார்த்த குருவும், சீடர்களும் ஒப்புக்கொண்டனர்.

பரமார்த்த குருவின் தலயாத்திரைப் பயணம் தொடங்கப்பட்டது.

குரு, மாட்டின்மீது ஏறி அமர்ந்து கொண்டார். சீடர்களும் மாட்டின் சொந்தக்காரனும் மாட்டைப் பின்தொடர்ந்து நடந்தார்கள்.

அப்போது நல்ல கோடைக் காலம். அவர்கள் நடந்து சென்ற பாதையிலே நிழலுக்குத் தங்கிநிற்கக்கூட மரங்கள் இல்லை.

வெய்யில் கடுமை தாளமாட்டாமல் பரமார்த்த குரு மிகவும் சிரமப்பட்டார்.

அதனால் சீடர்கள் ஆங்காங்கே மாட்டை நிறுத்தி மாட்டின் நிழலில் பரமார்த்த குருவைப் படுக்க வைத்து சிரம பரிகாரம் செய்துகொள்ள ஏற்பாடு செய்தார்கள்.

அன்று மாலை நேரம் வந்ததும், பரமார்த்த குரு மாட்டுக்கான அன்றைய வாடகை ஐந்து பணத்தை மாட்டுக்காரனிடம் கொடுத்தார்.

மாட்டுக்காரன் அந்தப் பணத்தை வாங்கிக் கொள்ள மறுத்துவிட்டான்.

"பத்துப் பணம்கொடுக்க வேண்டும்" என்றான்.

"அது எப்படி? ஐந்து பணம் தானே வாடகை பேசினோம்!" என்று அதிர்ச்சி தோன்ற பரமார்த்த குருவும், சீடர்களும் கேட்டனர்.

"மாட்டின்மீது [illegible] ஐந்து பணம் வா[illegible] குரு மாட்டின் நிழலில் பல தடவை படுத்திருந்து ஓய்வு எடுத்துக் கொண்டார். அதற்காகத்தான் மேற்கொண்டு ஐந்து பணம் கேட்கிறேன்" என்றான் மாட்டின் சொந்தக்காரன்.

இரு தரப்பினருக்குமிடையே தொடங்கிய வாதம் ஒரு சச்சரவாக ஆகிவிடவே உள்ளூர் பஞ்சாயத்தாரிடம் அவர்கள் சென்றார்கள்.

அவர்கள் வழக்கை விசாரித்த பஞ்சாயத்தார், மாட்டுக்காரன் சொல்வதில் நியாயமிருப்பதாகக் கருதி, பரமார்த்த குருவும், அவருடைய சீடர்களும் பத்துப்பணம் வாடகையாகக் கொடுக்க வேண்டுமெனத் தீர்ப்பளித்தனர்.

முணுமுணுத்துக் கொண்டே மிகுந்த மனச் சங்கடத்தோடு பரமார்த்த குரு பத்துப் பணத்தை மாட்டுக்காரனுக்குக் கொடுத்தார்.

மறுநாள் அவர்கள் பயணம் தொடர்ந்தது. மதியம் வரை நடந்தார்கள். பரமார்த்த குரு மட்டும் மாட்டின் மீது அமர்ந்திருந்தார்.

சற்றும் எதிர்பாராதவிதமாக ஒரு நிகழ்ச்சி நடை பெற்றுவிட்டது.

பரமார்த்தகுரு சவாரி செய்த மாடு திடீரென விழுந்து செத்துப் போய்விட்டது.

செத்துப்போன மாட்டுக்கானவிலையையும் பரமார்த்த குருதான் தரவேண்டும் என்று மாட்டுக்காரன் தகராறு செய்தான்.

இருவரும் அந்த ஊர் பஞ்சாயத்தாரிடம் சென்று வழக்குரைத்தனர்.

அவர்கள் வழக்கை விசாரித்து, மாட்டின் ஆரோக்கியத்துக்கு மாட்டுகாரரே பொறுப்பு. அதனால் மாடு செத்ததற்கு மாட்டுக்காரன்தான் காரணம் என்று பஞ்சாயத்தார் தீர்ப்பளித்தனர்.

மேலும் அவருடைய யாத்திரை பாதியிலேயே நிற்கவேண்டி வந்துவிட்டது. அதனால் பரமார்த்த குருவுக்கு மாட்டுக்காரன் நட்ட ஈடாக ஒரு தொகைகொடுக்க வேண்டும் என்றும் தீர்ப்பளித்தனர்.


மாட்டுக்காரன் பரமார்த்த குருவிடம் பேசி ஒரு சமரசத்துக்கு வந்தான்.

அவனுடைய யோசனையை ஏற்றுக் கொள்வது பரமார்த்த குருவுக்கு இலாபமாகவே பட்டது. மாட்டுக்காகத் தரப்பட்ட வாடகைப் பணம் திரும்ப வந்துவிடுவது ஒரு இலாபம். நட்ட ஈட்டுத் தொகை கிடைக்காததால் நட்டம் ஏதுமில்லை.

பரமார்த்த குரு தன் சீடர்களைப் பார்த்து "சீடர்களே! என்னுடைய அறிவையும், ஆற்றலையும் பார்த்தீர்களா? என்னுடைய சாமர்த்தியத்தால் தான் மாட்டு வாடகைப் பணம் திரும்ப வந்தது" என்று பெருமையடித்துக் கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா தமிழ் மாமன்றத்தின் வாசிப்பும் அனுபவப் பகிர்வும்



வவுனியா தமிழ் மாமன்றத்தின் வாசிப்பும் அனுபவப் பகிர்வும் எனும் வாசிப்புத் தொடர்பான இம் மாதத்துக்கான கலந்துரையாடல் நிகழ்வு, கடந்த 5ஆம் திகதி மாலை 3 மணியளவில் வவுனியா பொதுசன நூலக கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில், வாசிப்பில் ஆர்வமுள்ள பலதரப்பட்ட வயதுள்ள பலர் ஆர்வத்துடன் பங்கேற்றமை குறிப்பிடத்தக்கது. ஒரு நிமிட அக வணக்கத்துடன் ஆரம்பமாகிய இந்த நிகழ்வை, நிகழ்வின் ஒழுங்கமைப்பாளர் கு.சிரஞ்சீதன் தொகுத்து வழங்கினார். தமிழ் மாமன்றத்தின் வாசிப்பும் அனுபவப் பகிர்வும் தொடர்பான விளக்கத்தைத் தமிழ் மாமன்றத்தின் இணைச் செயலாளர்களில் ஒருவரான செல்வி ஜெசிதா ஆனந்தமூர்த்தி வழங்கினார்.

தொடர்ந்து, பிரதம நூலகரின் கருத்துரையை அடுத்து, முதலாவது பகிர்வு ஆரம்பிக்கப்பட்டது.

முதலாவது படைப்பாக தகழி சிவசங்கரப்பிள்ளையால் எழுதப்பட்டு, சுந்தரராமசாமியினால் மொழி பெயர்க்கப்பட்ட 'செம்மீன்' நாவலை மூலமாகக் கொண்டு ராமு காரியத் இயக்கிய மலையாளத் திரைப்படம் பற்றிய பகிர்வைதமிழ் மாமன்றத்தின் தலைவர் சி.கிருபானந்தகுமாரன் பகிர்ந்தார். தகழி சிவசங்கரப்பிள்ளை மலையாள எழுத்துலகில் முக்கியமான ஒருவர் ஆவார். செம்மீன் எனும் நாவல், சாகித்திய விருது பெற்ற ஒரு நாவல் ஆகும். விழிம்பு நிலை மக்களின் வாழ்வு நிலையைப் படம் பிடித்துக் காட்டுகின்ற இந்த நாவலின் கதை மலையாளத்தில் திரைப்படமாக்கப்பட்டது. மீனவ வாழ்க்கையினுடைய எழுச்சி வீழ்ச்சி, கருத்தம்மா என்ற மீனவப் பெண்ணினுடைய வாழ்க்கை, காதல் போன்றவற்றை மையப்படுத்தியதாக இந்த நாவலும் திரைப் படமும் அமைந்ததாக விளக்கமளிக்கப்பட்டது.

> ஒரு நாவலை முழுமையாகப் படித்த உணர்வை இப் பகிர்வு ஏற்படுத்தியதாக, பகிர்வில் கலந்து கொண்டோர் தெரிவித்திருந்தனர். பகிர்வில் கலந்து கொண்ட ஒருவர், அத்திரைப் படமானது காதலை மையப் படுத்திய திரைப் படம் என்ற ரீதியில் அப் படத்தில் நடித்த நடிகைகளின் நடிப்பாற்றல் பற்றிக் கருத்துத் தெரிவித்தார்.

ஒரு நாவலை முழுமையாகப் படித்த உணர்வை இந்தப் பகிர்வு ஏற்படுத்தியதாக, பகிர்வில் கலந்து கொண்டோர் தெரிவித்திருந்தனர். பகிர்வில் கலந்து கொண்ட ஒருவர், அத் திரைப்படமானது காதலை மையப்படுத்திய திரைப்படம் என்ற ரீதியில் அப் படத்தில் நடித்த நடிகைகளின் நடிப்பாற்றல் பற்றிக் கருத்துத் தெரிவித்தார்.

இரண்டாவது படைப்பாக கவிக்கோ அப்துல் ரகுமானின் 'சுட்டுவிரல்' கவிதைத் தொகுதி ச.கஜனால் பகிரப்பட்டது. கவிதை உலகில், கடந்து செல்ல முடியாத கவித்துவம் மிக்க கவிஞர் கவிக்கோ ஆவார். சமூகத்தின் மீதான கோபத்தை வெளிப்படுத்தும் முக மாக ஏறத்தாழ 25 வருடங்களுக்கு முன்பு படைக்கப்பட்ட இக் கவிதைகள் இன்றைய காலத்துக்கும் ஒத்து வருவதாக அமைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. கடவுளில் ஆரம்பித்து குழந்தை வரை பாரபட்சமின்றி தன் சுட்டுவிரலை கவிக்கோ நீட்டி இருப்பதை சுட்டிக் காட்டி, முக்கியமான சில கவிதைகள்நயக்கப்பட்டுவிளக்கமளிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. கவிதைகளின் இறுதி வரிகளின் ஆழமான வெளிப்பாட்டுத் தன்மை, நகைச் சுவை உணர்வு மிக்கவரிகள் மூலம் ஆழமான கருத்துக்களை வெளிப்படுத்தல் என்ற ரீதியில், அந்தக் கவிதைத் தொகுப்பிலுள்ள கவிதைகள் அடங்கியிருப்பதாக தெரிவிக்கப்பட்டது.



கருத்துரைப் பகிர்வில் கலந்து கொண்ட செ.மதுரகன், கவிக்கோவின் கவிச் சிறப்புக்கள் பற்றியும், கவிக்கோவின் கவிதைத் தொகுதியிலுள்ள ஒரு சில கவிதைகளையும் எடுத்துக் காட்டினார். நாவல், கவிதை என்ற இரு படைப்புக்கள் பற்றிய, ஆரோக்கியமான ஓர் கலந்துரையாடலாக இந்தக் கலந்துரையாடல் அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இம் மாதத்துக்கான அடுத்த நிகழ்வு, எதிர்வரும் 19 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 3 மணிக்கு வவுனியா பொதுசன நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெறும் என்றும், பகிரப்பட விருக்கும் படைப்புக்கள் தொடர்பாக பின்னர் அறிவிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. தமிழ் மாமன்றத்தின், வாசிப்புத் தொடர்பான இந்த நிகழ்வில், எழுத்தாளர்களையும் அழைத்து, அவர்களின் படைப்புக்கள் தொடர்பான விடயங்களையும் பகிர்வதற்கு ஏற்பாடுகள் நடந்து வருவதாக நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (21)

## காணாமல் ஆக்கப்படுதலின் வலியைப் பேசும் 'மூச்சிழுக்கும் ஆத்மா' காணொளிப் பேழை!

இலங்கையில் 'காணாமல் ஆக்கப்படுதல்' சம்பவங்கள், குடும்ப அலகு முதல் சமூக கட்டமைப்பு வரை அனைத்தையும் சிதைத்துச்சின்னாபின்னமாக்கியுள்ளன. இது மிகவும் மோசமான இந்த மனித உரிமை மீறல் சம்பவங்களால் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களின் வாழ்க்கை முறை, பழக்க வழக்கங்கள், பொருளாதாரம், தொழில், கல்வி, சுகாதாரம், சமூகநிலை எல்லாவற்றிலும் கடும் தாக்கங்களை உண்டு பண்ணியுள்ளது.

'ஆள்கடத்தல் மற்றும் காணாமல் ஆக்கப்படுதல்' சம்பவங்கள், தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் ஒரு தேசியப் பிரச்சினையாகும். இந்தத் தேசியப் பெருந்துயரை, வலியை, ஈழத்தில் முதல் முறையாக பேசுகிறது 'மூச்சிழுக்கும் ஆத்மா' காணொளிப் படைப்பு!

இசையமைப்பாளர் சன்சைன் டி ஹர்சி யின் நெஞ்சைப்பிசையும் இசையில், தாயகக் கவிஞர் அ.ஈழம் சேகுவேராவின் ஆத்மார்ந்த வரிகளுக்கு, தென்னிந்திய திரைப்படப் பாடகி ஜெகனி உணர்வூட்டியிருக்கின்றார்.

இளம் திரைப்பட இயக்குநர் புவிகரனின் இயக்கத்தில், அவருடன் கலைஞர் மாணிக்கம் ஜெகனும், பிரியா செல்வராஜாவும் இணைந்து வலு ஊட்டியுள்ளனர். சர்வதேச மனித உரிமைகள் தினமான டிசெம்பர் 10 அன்று, 'மூச்சிழுக்கும் ஆத்மா' காணொளிப் பேழை வெளிவரவுள்ளமை சிறப்பம்சமாகும்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# பொன்விழாவை முன்னிட்டு நூல்கள் வெளியீடு







**இனியன்**

யாழ். திருமறைக் கலாமன்றத்தின் பொன் விழாவை முன்னிட்டு திருமறைக் கலாமன்றத்தினால் அருட் தந்தை மரிய சேவியர் அடிகளாரினால் எழுதப்பட்ட 'சிங்ககுலச் செங்கோல்', 'மூவேந்தர்கள்' எனும் இரு நாட்டுக் கூத்துகளின் நூலும், பி.எஸ் அல்விரெட் அவர்களின் 'திருமறைக் கலாமன்றம் எனது பார்வையில்' என்னும் நூலும் வெளியிடும் நிகழ்வு திருமறைக் கலா மன்ற பிரதி இயக்குநர் யோண்சன் ராஜ்குமார் தலைமையில் கடந்த வியாழக்கிழமை பிரதான வீதியில் அமைந்துள்ள திருமறைக் கலா மன்றக் கலைத்தூது கலையகத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக அருட்தந்தை பிலிப் ரஞ்சிதகுமார் அடிகளார் கலந்து சிறப்பித்திருந்தார். மேலும் இந்த நிகழ்வில் அருட் தந்தை மரிய சேவியர் அடிகளாரினால் எழுதப்பட்ட 'சிங்ககுலச் செங்கோல்', 'மூவேந்தர்கள்' என்னும் நாட்டுக் கூத்துக்கள் நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது. இந்த நாட்டுக் கூத்துகளைக் கொண்ட நூலின் முதற்பிரதியை முதன்மை விருந்தினர் அருட் தந்தை பிலிப் ரஞ்சிதகுமார் அடிகளாரிடமிருந்து பிரான்ஸ் நாட்டிலிருத்து வருகை தந்த பெஞ்சமின் இம்மனுவேல் பெற்றுக் கொண்டார். அதனைத் தொடர்ந்து அண்ணாவியார் மனோகரன், எ.ஆர்.ஜெயக்குமார், இசைத்தென்றல் ஜேசுதாஸ், அமிர்தநாதன், இக்னேசியஸ்பிரபா, து.ஸ்ரீகரன், மாட்டீன்ஜெயராசா, அண்ணாவியார் அல்பிரட் ஆகியோர் சிறப்புப் பிரதிகளைப் பெற்றுக் கொண்டனர். தொடர்ந்து இந்த நாட்டுக் கூத்து நூலின் வெளியீட்டுக்கு உறுதுணையாக இருந்து செயற்பட்ட அண்ணாவியார் பேக்மன் ஜெயராசா, அருட் தந்தை பிலிப் ரஞ்சிதகுமார் அடிகளாரினால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

மேலும் திருமறைக் கலாமன்றத்தின் மூத்த உறுப்பினரும், பிரதம ஆலோசகருமான பி.எஸ். அல்விரெட்டின் 'திருமறைக் கலாமன்றம் எனது பார்வையில்' என்னும் நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது. இதன் அறிமுகவுரையை திருமறைக் கலா மன்றத்தின் சட்ட ஆலோசகர் சட்டத்தரணி ஜொனி மதுரநாயகம் ஆற்றினார். நூலாசிரியர் பி.எஸ்.அல்விரெட், அருட்தந்தை ஸ்ரிபன் அடிகளாரால் பொன்னாடைபோர்த்தி கௌரவிக்கப்பட்டதைத் தொடர்ந்து. இந்த நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது. நூலின் முதற்பிரதியை அருட்தந்தை ஸ்ரிபன் அடிகளாரிடமிருந்து திருமதி பப்சி மரியதாஸ் பெற்றுக்கொண்டார்.

தொடர்ந்து ஒப்பனைக் கலைஞர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெற்றது. இதில் ச.தேவகுமாரன், சி.அன்ரன், பி.டோமினிக், அண்ணாவியார் பேக்மன் ஜெயராசா, இ.இக்னேசியஸ் ஆகியோர் அருட்தந்தை பிலிப் ரஞ்சிதகுமார் அடிகளாரினால் 'பெஞ்சமின்' விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்கள். இந்த விருதுக்கான அனுசரணையை பெஞ்சமினின் மகன் பெஞ்சமின் இம்மானுவேல் வழங்கியிருந்தார். தொடர்ந்து திருமறைக்கலாமன்றக் கீதத்துடன் நிகழ்வு நிறைவு பெற்றது.





# உள நல மருத்துவர் சிவதாஸின் "சிறுவர்களுடன்" நூல் வெளியீட்டு விழா



உள நல மருத்துவர் சிவதாஸின் நூல் 'சிறுவர்களுடன்.' சிறப்பான முறையில் வெளியிட்டு வைக்கப்பட்டது. அத்துடன் சமூக சேவகர்கள் மூவருக்கான கௌரவங்களும் வழங்கப்பட்டன.

கம்பீரக் குரலோன் இராஜேஸின் சொல்லாடல் திறனில் அவை ஒன்றித்திருக்க, நிகழ்வுக்கு கோகிலா மகேந்திரன் தலைமை தாங்கினார். மங்கலகரமான விளக்கேற்றலுடன், வரவேற்பு நடனத்தை செல்வி கம்சினி வன்னியசிங்கம் வழங்க வாழ்த்துரையை வவுனியா மன நல சங்கத் தலைவர் மருத்துவர் சி.சுதாகர் வழங்கினார். வாழ்த்துரைகளை மருத்துவர் லவனும், சீராளன் யோசப் பாலாவும் நிகழ்த்தினர். வாழ்த்துக் கவியுரையை முல்லைத்தீபன் வழங் கினார். வெளியீட்டுரையை யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் சத்தியமூர்த்தி நிகழ்த்த, சிறப்புப் பிரதியை செல்வி சி.விசாலி வழங்க, செல்வி வைஸ்ணவி சுரேஸ்குமார் [illegible] ப்பு பொது வைத்தியசாலை உள நல மருத்துவர் கடம்பநாதன் [illegible] நிகழ்வு இனிதே நிறைவடைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடலுணவுகளின் நேற்றைய விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 700 | 700 | 600 | 600 |
| நண்டு | 250 | 400 | 300 | 300 | 250 | - |
| கணவாய் | 600 | 600 | 500 | 600 | 650 | - |
| பாரை | 450 | 500 | - | 450 | 550 | 400 |
| சுறா | 500 | 500 | - | 500 | 500 | - |
| சீலா | 250 | 400 | 400 | 400 | 400 | 400 |
| விளை | 650 | 400 | 400 | 450 | 400 | 400 |
| முரல் | 300 | 300 | 300 | 300 | 400 | - |
| கும்பிளா | 350 | 250 | 300 | 300 | 300 | - |
| கிழாக்கன் | 400 | 800 | 300 | 400 | - | - |
| ஓரா | 350 | 300 | 300 | 400 | - | 300 |
| திரளி | 200 | 200 | 100 | 300 | 100 | 300 |
| நகரை | 150 | 200 | 100 | 300 | 300 | 300 |
| ஆடை | 150 | 150 | 100 | 100 | 100 | - |
| ஒட்டி | 200 | 150 | 200 | 300 | 350 | - |
| திருக்கை | 150 | 250 | - | 250 | 300 | - |
| பாலை | 350 | 200 | - | 270 | 200 | - |
| வாளை | 100 | 150 | 200 | 300 | 200 | 250 |
| கொய் | 100 | 100 | 80 | 100 | 50 | - |
| மதனம் | 150 | 200 | 300 | 250 | - | 300 |

**தேவையான பொருள்கள்:-**
வாழைப்பூ 2கப்
கடலைப்பருப்பு 1கப்
துவரம் பருப்பு அரைக்கப்
உளுந்தம் பருப்பு அரைக்கப்
காயந்த மிளகாய் 7
பெருங்காயத்தூள் 1 கரண்டி
கறிவேப்பிலை தேவையான அளவு
தேங்காய் அரை மூடி
எண்ணெய், உப்பு தேவையான அளவு



## சமைப்போம் வாங்க
# வாழைப்பூ வடை

**செய்முறை:-**
பருப்பு வகைகளை மிளகாயுடன் ஊறவைத்து உப்பு, கறிவேப்பிலை, பெருங்காயம், தேங்காய் பூவை சேர்த்து அரைத்து, வாழைப்பூவைக் கலந்து கொள்ளவும்.
சட்டியில் எண்ணெய் காய்ந்ததும் வடைகளாக தட்டிப் போட்டுப் பொரித்தெடுக்கவும்.





## உங்கள் வீட்டு குளிர்சாதனப் பெட்டி எப்படி?

♠♠ பலர் வீடுகளில் கிருமி உற்பத்திக் கூடமாக குளிர்சாதனப் பெட்டி இருக்கும். அப்படி இல்லாமல், எப்போதும் துடைத்துச் சுத்தமாக வைத்திருப்பது நல்லது.
♠♠ கோடைக்காலத்தில் வாரம் ஒரு முறையும், குளிர்காலத்தில் வாரம் இரண்டு முறையும் சுத்தம் செய்ய வேண்டும். மலை போல ஐஸ் கட்டுவதால் மின்சாரச் செலவு கூடும்.
♠♠ குளிர்சாதனப் பெட்டியின் கதவை அடிக்கடித் திறப்பதோ, திறந்து வைத்து விடுவதோ கூடாது. கதவை வேகமாக அடித்து சாத்தினால் சில சமயம் மூடாமல் போய்விடலாம்.
♠♠ வாரம் ஒருமுறை அல்லது பத்து நாள்களுக்கு ஒரு தடவையாவது குளிர்சாதனப் பெட்டியின் உட்புறத்தை நன்றாகத் துடைக்க வேண்டும்.
♠♠ குளிர்சாதனப் பெட்டியை வருடத்துக்கு இரு முறையாவது சீராக்கம் (சேவிஸ்) செய்ய வேண்டும். கெட்டுப்போன பொருள்களை உடனடியாக அப்புறப்படுத்தி விட வேண்டும்.
♠♠ கெட்டுப் போகும் நிலையில் இருக்கும் உணவுகளைக் குளிர்சாதனப் பெட்டியில் வைக்க வேண்டாம்.

## மரக்கறிகளின் நேற்றைய விலை நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 120 | 80 | 100 | 120 | 100 | 140 | 100 |
| கத்தரி | 130 | 140 | 120 | 160 | 160 | 200 | 90 |
| கரட் | 140 | 160 | 180–350 | 180 | 140–300 | 400 | 250 |
| மரவள்ளி | 40 | 50 | 50 | 50 | 40–50 | 40 | 25–30 |
| பயிற்றை | 250 | 200 | 220 | 240 | 200–220 | 280 | 200 |
| பாகல் | 280 | 300 | 300 | 320 | 240–280 | – | 250 |
| கருணைக்கிழங்கு | 80 | 100 | 80 | 70 | 80–100 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 90 | 100 | 90 | 100 | 120 | 120 | 70–80 |
| சி.வெங்காயம் | 140 | 140 | 80–120 | 120 | 110–120 | 200 | 100 |
| பூசணி | 40 | 50 | 60 | 50 | 40–50 | 80 | 40 |
| தக்காளி | 200 | 200 | 180 | 240 | 200–220 | 240 | 230 |
| வாழைக்காய் | 60 | 60 | 40 | 60 | 40–50 | 80 | 40 |
| கீரை | 40 | – | 50 | 20 | 50–60 | 40 | 40–50 |
| பொன்னாங்காணி | 50 | 40 | 40 | 50 | 30 | 50 | 15 |
| பச்சை மிளகாய் | 1000 | 650 | 800 | 700 | 650–700 | 1000 | 500 |
| புடோல் | 160 | 120 | 100 | 120 | 120–130 | 180 | 100–120 |
| கோவா | 180 | 160 | 140 | 140 | 160–180 | 200 | 150 |
| வெண்டி | 140 | 120 | 130 | 120 | 100–120 | 160 | 80–100 |
| போஞ்சி | 300 | 240 | 240 | 280 | 220–240 | 240 | 220 |
| லீக்ஸ் | 200 | 160 | 160–180 | 200 | 160–180 | 240 | 160 |
| தேங்காய் | 50 | 45 | 50 | 50–60 | 40–45 | 55–60 | 40 |
| உருளைக்கிழங்கு | 80 | 60 | 70 | 70 | 80–110 | 80 | 80–120 |
| தேசிக்காய் | 250 | 200 | 250 | 140 | 200–220 | 200 | 70–80 |
| வல்லாரை | 30 | 20 | 10 | 20 | 20 | 30 | 15 |
| கறிமிளகாய் | 300 | 180 | 400 | 340 | 350–400 | 400 | 300 |
| இராசவள்ளி | 300 | 160 | 250 | – | 280 | – | – |



## இது புதுசு
### புடைவைகளில் நூல் வேலைப்பாடு

புடைவைகள் தற்போது நவீனமாக உள்ளன. பலவர்ணங்களில், கலாசார வடிவ அச்சிடலில் வேலைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அதனை மெருகேற்ற அதன் மேலாக நூல் வேலைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. கவர்ச்சித் தன்மையான விதத்தில் அதேநேரம் பார்ப்பதற்கு மிகவும் ஆடம்பரமாக இருக்கும். இதன் விலை 4,500-முதல் 5,000 ரூபா வரை.

**நாளை**
கார்த்திகை -24
வியாழக்கிழமை 10.12.2015
[illegible]
[illegible]
ராகுகாலம்: 01.49-03.19 வரை
சுபநேரம்: 07.49- 09.19 வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஒரு பெண்....

ஒரு பெண் பல ஆண்களின் கண்ணியம். தந்தை, தம்பி, அண்ணன், கணவன், மகன் என எல்லா உறவுகளும் தமக்கு ஏற்படும் வலியைவிட தம்மைச் சார்ந்த ஒரு பெண்ணுக்கு ஏற்படும் வலியைக் கண்டு பொங்குகிறார்கள். ஆனால், பெண்களும் பிற ஆண்களைத் தங்களது சகோதரர்களாக நினைத்து தங்கள் உடைகளில் கவனமாக இருக்க வேண்டும்.

WhatsApp படித்ததில் பிடித்தது

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 5 | | | 9 | | | | |
| 4 | | | 7 | | | 3 | | |
| 3 | | | | | 1 | | | |
| | | 3 | | | 6 | 5 | 4 | |
| | 4 | | | 5 | | | 3 | |
| | 9 | 7 | | | | 6 | | |
| | | | 4 | | | | | 2 |
| | | 2 | | | 7 | | | 3 |
| | | | | 1 | | | 7 | 5 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 8 | 7 | 6 | 3 | 9 | 2 | 1 | 4 |
| 6 | 1 | 3 | 8 | 4 | 2 | 7 | 5 | 9 |
| 4 | 9 | 2 | 1 | 5 | 7 | 3 | 8 | 6 |
| 3 | 6 | 9 | 5 | 7 | 1 | 8 | 4 | 2 |
| 2 | 5 | 8 | 4 | 6 | 3 | 1 | 9 | 7 |
| 7 | 4 | 1 | 9 | 2 | 8 | 5 | 6 | 3 |
| 9 | 2 | 4 | 7 | 8 | 5 | 6 | 3 | 1 |
| 1 | 3 | 5 | 2 | 9 | 6 | 4 | 7 | 8 |
| 8 | 7 | 6 | 3 | 1 | 4 | 9 | 2 | 5 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட் டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



உன்னை எங்கும் சுமந்தே செல்கின்றேன், சுவட்டைத் தவிர்த்து வாழ முடியாத நத்தையைப் போல

பேஸ் புக்கில் பிடித்தவை...

மனைவியை நேசித்தால் மாரடைப்பில் இருந்து 50 வீதம் தப்பலாம்– ஆய்வில் தகவல்.



ஆனால் அது உங்கள் சொந்த மனைவியாக இருக்கணும், அங்கதான் வைக்கிறாங்க ஆய்வில் டுவிஸ்ட்...



அடிவானத்தை மீறிய உலகின் அழகு என்பது பயங்களற்ற இரண்டு மிகச்சிறிய இதயங்களின் நட்பில் இருக்கிறது.

"யாழினி" @Ishw

நாம் அனைவரும் மனதைச் சாந்தமாக வைத்துக் கொண்டால் மட்டுமே, எம்முடைய செயல்கள், நடத்தைகள், பேசும் வார்த்தைகள் அனைத்திலும் மென்மை கையாளப்படும்

முத்தலிப் @am

பெண்களின் கைக் குட்டைக்கு இயல்பிலேயே ஒரு மென்மை இருக்கிறது. பச்சிளம் குழந்தையின் சுண்டு விரல்போல.

(:ஊதா♡மூங்கில்:)

அரசிடம் அடைக்கலம் தேடி ஓடுற காலம் போயி, அரசைக் கண்டு அஞ்சி ஒதுங்குற காலம் வந்துட்டுது.



## புது வகை பேய்ப் படம்

அலெக்ஸ் கிரியேன்சின் படம், 'என்னம்மா, கத வுடுறானுங்க'. இதைத் தயாரித்து ஹீரோவாக நடிக்கிறார், மும்பையைச் சேர்ந்த அர்வி. நாயகிகளாக அலிஷா, ஷாலு நடிக்கின்றனர். மற்றும் செந்தில், அம்பிகா, சீதா, சிங்கமுத்து, சாம்ஸ், ரவி மரியா, மயில்சாமி, ஜி.எம்.குமார் உட்படப் பலர் நடிக்கின்றனர்.

கதை, திரைக்கதை வசனம் எழுதி வி.பிரான்சிஸ்ராஜ் இயக்குகிறார். 'தமிழ் சினிமாவில் வந்த அனைத்துப் பேய்ப் படங்களும், பயமுறுத்திய படங்களாகத்தான் வந்துள்ளன. பேய்ப் [illegible] இருக்கும் [illegible] பிம்பத்தை உடைத்து [illegible] பேய்ப் படம் இது. இதன் படப்பிடிப்பு சென்னை, மதுரை மற்றும் கொடைக்கானல் போன்ற பகுதிகளில் நடைபெற்று வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** உறவினர் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி கூடும். இஷ்டதெய்வ வழிபாடு சிறப்பாக நடக்கும். தொழில், வியாபாரத்தில் வருமானம் உயரும். சுப விடயத்தில் எதிர்பார்ப்பு நிறைவேறும்.

**இடபம்:** பிறர் கஷ்டம் தீர இயன்ற அளவில் உதவுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் இலாபம் அதிகரிக்கும். பணியாளர்கள், பணி விடயமாக வெளியூர் செல்வர். மனைவி விரும்பிய பொருள்களை வாங்கித் தருவீர்கள்.

**மிதுனம்:** பெருந்தன்மை மிக்கவராகத் திகழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் அதிகரிக்கும். வாகனப் பயணத்தில் மிதவேகம் பின்பற்றவும். மாணவர்கள் கண்ணும் கருத்துமாகப் படிப்பர்.

**கடகம்:** எவருக்கும் தகுதிக்கு மீறி வாக்குறுதி தர வேண்டாம். தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும். பெண்கள் செலவில் சிக்கனத்தைக் கடைபிடிப்பர். காலமுறை உணவுப் பழக்கம் உடல்நலத்தைச் சீராக்கும்.

**சிங்கம்:** மனதில் தன்னம்பிக்கை நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் உழைப்புக்கேற்ப வளர்ச்சி பெறுவீர்கள். பணக்கடனில் கொஞ்சம் செலுத்துவீர்கள். பழைய விவகாரத்தில் சமரசத் தீர்வு கிடைக்கும்.

**கன்னி:** நண்பர்கள் மத்தியில் செல்வாக்கு உயரும். தொழில், வியாபாரத்தில் அமோக இலாபம் கிடைக்கும். புத்திரர் விரும்பிய பொருளை வாங்கித் தருவீர்கள். பயனுள்ள பொழுது போக்கில் ஈடுபடுவீர்கள்.

**துலாம்:** குழப்பம் நீங்கி மனதில் தெளிவு பிறக்கும். தொழில், வியாபாரத்தில் வருமானம் சீராகும். அறிமுகம் இல்லாதவரிடம் நெருங்கிப் பழக வேண்டாம். மாணவர்கள் படிப்பில் அக்கறையுடன் ஈடுபடுவர்.

**விருச்சிகம்:** மனதில் இனம்புரியாத வருத்தம் ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் தடை உருவாகும். இலாபம் சுமார். உடல்நலத்துக்காக மருத்துவ சிகிச்சை தேவைப்படலாம். பணியாளர்கள் பணியிடத்தில் விழிப்புடன் இருக்கவும்.

**தனுசு:** செயல் நிறைவேற புதிய முயற்சி மேற்கொள்வீர்கள். நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த ஆதாயம் வரும். குடும்பத்தினருடன் விரும்பிய உணவு உண்டு மகிழ்வீர்கள்.

**மகரம்:** திகைப்பில் ஆழ்த்திய பணி எளிதில் நிறைவேறும். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் உயரும். உறவினர் மற்றும் நண்பர்கள் மனதாரப் பாராட்டுவார்கள். குடும்பத்தில் சுப நிகழ்ச்சி நடத்தத் திட்டமிடுவீர்கள்.

**கும்பம்:** பேச்சிலும், செயலிலும் நிதானம் தேவை. தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். வாகனப் போக்குவரத்தில் கவனம் தேவை. இயந்திரப் பிரிவு பணியாளர்கள் பாதுகாப்புடன் இருக்கவும்.

**மீனம்:** குடும்ப விடயத்தைப் பிறரிடம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும். பணியாளர்கள், பணி விடயமாக வெளியூர் செல்வர். பெண்கள் குடும்ப நலனுக்காகப் பாடுபடுவர்.

# ஒரு அங்குல காணியையேனும் வில்பத்தில் நாம் பிடிக்கவில்லை

## சபையில் அமைச்சர் றிஷாத் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.9

வில்பத்து வனப்பகுதியில் நானோ எனது சமூகமோ ஒரு அங்குல காணியையேனும் அடாத்தாகப் பிடிக்கவில்லை. அவ்வாறு பிடித்திருந்தால் நிரூபித்துக் காட்டுமாறு இந்த உயர் சபையில் சவால் விடுகின்றேன் எனத் தெரிவித்துள்ளார் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தேசியத் தலைவரும் அமைச்சருமான றிஷாத் பதியுதீன்.

மகாவலி, சுற்றாடல், நீர்வழங்கல் வடிகாலமைப்பு ஆகிய அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீட்டு விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். இந்த விவாதத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் கலந்துகொண்டிருந்தார்.

இங்கு அமைச்சர் ரிசாத் தொடர்ந்து உரையாற்றுகையில்;

சூழலியலாளர்கள் எனக் கூறிக் கொள்வோர் இன்று வில்பத்து விடயத்தில் முஸ்லிம்கள் மீது அநியாயமான அபாண்டங்களை சுமத்துகின்றனர். உண்மையில் அப்படிப் பட்டோர். உண்மையான சூழலியலாளர்களாக நான் பார்க்கவில்லை. மதவாதிகள், இனவாதிகள் போன்று இந்த சூழலியலாளர்களும் இனவாதக் கருத்துக்களை முன்வைக்கின்றனர். இதற்கு ஒருபோதும் நாங்கள் அனுமதியளிக்கப் போவதில்லை.

மன்னார் மாவட்டத்தில் முசலிப் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள பல கிராமங்கள் வனவளத் திணைக்களத்தினால் எல்லையிடப்பட்டுள்ளது. 6 ஆயிரத்துக்கும் அதிகமான ஹெக்ரேயர் காணி வர்த்தமானி மூலம் சுவீகரிக்கப்பட்டுள்ளது. மறிச்சுக்கட்டி, பாலக்குளி, கரடிக்குளி உள்ளிட்ட கிராமங்கள் வனவளத் திணைக்களத்தினால் எல்லையிடப்பட்டுள்ளது. இந்தக் காணிகள் முஸ்லிம்கள் வாழ்ந்த காணிகளாகும். இதில் பாடசாலைகள், வர்த்தக நிலையங்கள் என்பன காணப்படுகின்றன. இந்தக் காணி 2012 ஆம் ஆண்டு வனவளத்துறை அமைச்சர் அநுர பிரிய தர்ஷன யாப்பாவினால் வர்த்தமானிப் பிரகடனம் செய்யப்பட்டது.

முஸ்லிம்களும், நானும் வில்பத்து காணிகளைப் பிடிப்பதாக இனவாதிகளும், மதவாதிகளும் கூக்குரலிடுகின்றனர். வில்பத்து காணியில் ஒரு அங்குலத்தையேனும், நானோ எனது மக்களோ பிடிக்க வில்லை. எமது சமூகம் தொடர்பில் பிழையான கருத்துக்களை ஊடகங்கள் சில முன்னெடுக்கின்றன. சில சூழலியலாளர்கள் என்று கூறுபவர்கள் யார் என்பதை நாம் அறிவோம். இனவாதிகளினதும், சர்வதேச நிதி நிறுவனங்களினதும் தரகர்களாக செயற்படுபவர்களே இந்த அநியாயத்தை செய்கின்றனர். அவ்வாறு நானோ, எனது சமூகமோ வில்பத் துக்குள் காணிகளை பிடிப்பதை நிரூபிக்க முடியுமா என்று இந்தச் சபையில் உள்ளவர்களிடத்தில் சவால் விடுகின்றேன் – என்றார். (த-சி)


## மரண அறிவித்தல்



### செல்லர் இராசமணி

சாவகச்சேரி, கோயில் குடியிருப்பைப் பிறப்பிட மாகவும் மீசாலை கிழக்கை (சித்திர வேலாயுதர் கோயிலடி) வசிப்பிடமாகவும் கொண்ட செல்லர் இராசமணி 06.12.2015 ஞாயிற் றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான செல்லர் - தெய்வானை தம்பதிகளின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான கணபதி- பார்வதி தம்பதியினரின் மருமகனும், சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான இலட்சுமி, சுப்பிரமணியம் மற் றும் சரஸ்வதி, இராசம்மா (பிரான்ஸ்), மகேஸ்வரி, பூபதி, இரத்தினம் (பிரான்ஸ்), மகேந்திரன் (கட்டட ஒப்பந்தகாரர்), காலஞ்சென்ற கனகசபை ஆகியோரின் அன்புச் சகோதரனும், இரவிக்குமார் (முகுந்தன் - பிரான்ஸ்), சிவாஜினி (தாதிய உத்தியோகத்தர் - யாழ். போதனா வைத்தியசாலை), இராஜினி (திவிநெகும அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம் - சாவகச்சேரி), சதீஸ்குமார் (அப்பன் - கட்டட ஒப்பந்தகாரர் அச்சுவேலி), சுதர்சினி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், லோகேஸ்வரி (பேபி - பிரான்ஸ்), அமலதாஸ் (பிரான்ஸ்), கெங்கேஸ்வரன் (முன்னாள் கூட்டுறவுச் சங்க உத்தி யோகத்தர்), அகிலா (அச்சுவேலி), றொபின்சன் அமலதாஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், கௌ சல்யா, கெல்வின்,கவிசயன், மதுசங்கர், மதுராங்கி, மேதவன், கபூசன், தக்சாயினி, தக்சிகன், றொனிசாந், டெனிசியன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (09.12.2015) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல் லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண் பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மீசாலை கிழக்கு,மீசாலை.
077 558 0647, 077 316 1389
(66784)(11,15,18)
தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### பொன்னன் குணரத்தினம்



தோற்றம் 07.03.1959
மறைவு 05.12.2015

உரும்பிராய் வடக்கு, உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னன் குணரத்தினம் 05.12.2015 சனிக்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.12.2015) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக் காக பிற்பகல் 2.00 மணிக்கு உரும்பிராய் எருளன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல் லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்.
தகவல்:
குடும்பத்தினர்.

### மார்க்கண்டு ஸ்ரீவிஜயகுமார் (தாடி விஜயன்)



பிறப்பு 10.03.1960
இறப்பு 06.12.2015

சங்கத்தானை, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், 162ஆம் கட்டை, கண்டிவீதி, உமையாள்புரம், பரந்தனை வதிவிடமாகவும் கொண்ட மார்க்கண்டு ஸ்ரீவிஜயகுமார் 06.12.2015 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் மார்க்கண்டு - வீரலட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற ஸ்ரீ ரஞ்சினிதேவி மற்றும் ஸ்ரீ நகுலகுமார் (காந்தி-நோர்வே), ஸ்ரீவிஜயலட்சுமி (விஜயா - இலங்கை), ஸ்ரீ மீனாம்பிகை (மீனா - பெல்ஜியம்), ஸ்ரீ கருணகுமார் (கருணா - ஜேர்மனி), ஸ்ரீ கௌரி (மைனா -நோர்வே), ஸ்ரீதேவி (சுமதி - நியூசிலாந்து) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (09.12.2015) புதன்கிழமை அவரது இல்லத்தில் காலை 9 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக முதலாம்கட்டை, பரந்தன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு:
009 477 076 1161,
009 477 199 5800
(63586)(11,15,18)
தகவல்:
குடும்பத்தினர்.
உமையாள்புரம், பரந்தன்.

## மரண அறிவித்தல்

### சின்னையா கந்தையா
(இளைப்பாறிய ஆசிரியர்)



நாயன்மார்க்கட்டைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா கந்தையா 07.12.2015 திங்கட் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வைரமுத்து கண்ணம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற பிள்ளையம்மாவின் அன்புக் கணவரும், சறோஜினி, வசந்தா, சுலோசனா, சற்குணநாதன்(சட்ட உரைஞர் - ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.12.2015) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நாயன்மார்க்கட்டு,
யாழ்ப்பாணம்.
(66791)(14,15,18)
தகவல்:
சற்குணநாதன் (மகன்)
075 766 1330


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# திருமலைக் கடற்பரப்பில் சடலங்கள் எதுவுமில்லை

## கடற்படைப் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 9
திருகோணமலைக் கடற்பரப்பில் சடலங்கள் மிதப்பதாக மீனவர்கள் முறைப்பாடு செய்துள்ள போதிலும், இதுவரை சடலங்கள் எதுவும் மீட்கப்படவில்லை என்று கடற்படையின் ஊடகப் பேச்சாளர் கப்டன் அக்ரம் அலவி தெரிவித்துள்ளார்.
திருகோணமலைக் கடற்பரப்பில் சடலங்கள் மிதப்பதாக மீனவர்கள் வழங்கிய தகவலை அடுத்து அந்தப் பகுதியில் கடற்படையினர் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு முதல் தேடுதல் வேட்டையில் இறங்கியுள்ளனர். தேடுதல்களுக்காக அதிவேக தாக்குதல் படகுகள் பயன்படுத்தப்பட்டுத் தேடுதல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. எனினும், இதுவரை சடலங்கள் எதுவும் மீட்கப்படவில்லை என்று அவர் மேலும் தெரிவித்தார்.
திருகோணமலையிலிருந்து 20 கடல் மைல் தொலைவில் ஆறு சடலங்கள் மிதப்பதைக் கண்டதாக அந்தப் பகுதியில் மீன்பிடித்த மீனவர்கள், கடற்படையினருக்குத் தகவல் வழங்கியிருந்தனர். உடனடியாக இரண்டு அதிவேகத் தாக்குதல் படகுகள் மூலம் குறித்த பகுதியைக் கடற்படையினர் சோதனை செய்திருந்தனர்.
மீண்டும் நேற்று முன்தினம் மூன்று அதிவேக தாக்குதல் படகுகளுடன் அதி சக்தி வாய்ந்த தேடொளிக் கருவி உள்ளிட்ட நவீன கருவிகளுடன் கடற்படையினர் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். இந்த நடவடிக்கைகளில் பொலிஸாரும், விமானப்படையினரும் ஈடுபட்டனர் என்றும் பேச்சாளர் குறிப்பிட்டார்.
இதேவேளை, திருகோணமலை நிலாவெளிக் கடற்கரையில் ஞாயிற்றுக்கிழமை காலை அடையாளம் தெரியாத சடலம் ஒன்று சிதைந்த நிலையில் கரையொதுங்கியது. இந்தச் சடலத்துடன் காணப்பட்ட வாடகை வாகனச் சாரதி சங்கத்தின் அடையாள அட்டையில் பூமிதுரை, என்.ஜி.ஓ. காலனி, காமராஜ் நகர், சூளைமேடு, சென்னை 94 என்ற முகவரி குறிப்பிடப்பட்டுள்ளது. இவர், சென்னை வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டவராக இருக்கலாம் என்று நம்பப்படுகின்றது.
திருகோணமலைக் கடலில் மிதப்பதாகத் தெரிவிக்கப்பட்ட சடலங்கள் சென்னை வெள்ளத்தில் உயிரிழந்தவர்களுடையவையாக இருக்கலாம் என்றும் கருதப்படுகின்றது. (த-5-சி)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி மலர்தேவி இராஜகோபால்



வேலணை கிழக்கு 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் மேற்கு சிவகுரு லேனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மலர்தேவி இராஜகோபால் (07.12.2015) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - நாகப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காஞ்சென்றவர்களான நடராஜா - சீனியம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்ற நடராஜா இராஜகோபாலின் அன்பு மனைவியும் ரஜனி (சுவிஸ்), கருணாமூர்த்தி (பிரான்ஸ்), இதயரஜனி (டெசி - சுவிஸ்), ஆகியோரின் பாசமிகு தாயாரும் மகேஸ்வரன் (சுவிஸ்) கிருஸ்ணவேணி (பிரான்ஸ்), மதியழகன் (சுவிஸ்) ஆகியோரின் மாமியாரும் பவித்திரா, அனுசன், மதுசன், அட்சயா, ஆதீஸ், அபிஸ் ஆகியோரின் பேர்த்தியும் விநாயகமூர்த்தி (கொழும்பு) காலஞ்சென்ற இந்திராதேவி மற்றும் கணேசமூர்த்தி, சத்தியமூர்த்தி (கொழும்பு), சதானந்தமூர்த்தி (வவுனியா), சுந்தரமூர்த்தி (கொழும்பு), கலைச்செல்வி ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற தனபாலசிங்கம் மற்றும் ராஜ்குமார் (சுவிஸ்), புஸ்பராணி (சுவிஸ்), ஜெயராஜா (சுவிஸ்), குருநாதன் (சுவிஸ்), தர்மராஜா (சுவிஸ்), சிவநேசன் (பிரான்ஸ்) காலஞ்சென்ற லலிதா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.12.2015) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக் காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
(மகள் - ரஜனி)

சிவகுரு லேன்,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.
(66957) T.P : 021 205 2018

### நாகமுத்து கந்தசாமி



(ஓய்வுநிலை அதிபர்-யூனியன் கல்லூரி)

சூராவத்தை சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகமுத்து கந்தசாமி 07.12.2015 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமுத்து-அன்னப்பிள்ளை தம்பதியரின் ஏகபுத்திரனும், காலஞ்சென்றவர்களான இராசசிங்கம்-செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற விக்னேஸ்வரியின் அன்புக் கணவரும், பார்த்தீபன் (சுவிஸ்சர்லாந்து), வாசுகி (அதிபர், யா/கோட்டைக்காடு அ.த.க.பா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பேபிமனோகரி (சுவிஸ்சர்லாந்து), சச்சிதானந்தம் (ஓய்வு நிலை மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர்) ஆகியோரின் அன்பு மாமனும், ஸ்ரீபன், மௌநிசா, மகிலன் ஆகியோரின் அருமைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.12.2015) வியாழக் கிழமை பி.ப 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொத்தியாலடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

“அன்னவாசா”
சூராவத்தை, சுன்னாகம்.

தகவல்:
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



சூராவத்தை சுன்னாகத்தைச் சேர்ந்த சிவலிங்கம் உருத்திரலிங்கம் அவர்களின் (பொறியியலாளர், முகாமைத்துவப் பணிப்பாளர், ரூலின்ஸ் நிறுவனம், உருத்திரா கட்டடக் கலை நிறுவனம்) அன்பு மகள்

### திருமதி அனுத்தமா ஜெய்ராம்

அவர்கள் 03.12.2015 வியாழக்கிழமை ஆஸ்திரேலியாவில் காலமானார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய சூராவத்தை ஸ்ரீ முத்துமாரி அம்மனைப் பிரார்த்திப்பதோடு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் எங்களது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பிரிவால் துயரும்,
சுயம்புலிங்கம், தனபாலசிங்கம், செல்வகாந்தன் சார்பாக
சூராவத்தை வாழ் மக்கள்.
(66958) (10.17)

## மரண அறிவித்தல்கள்

### சின்னையா கிருஷ்ணசாமி



உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா கிருஷ்ணசாமி நேற்று (08.12.2015) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தங்கம்மாவின் அன்புக் கணவரும், மீரா (நோர்வே), அனுஷியா (ஆசிரியர் யா/ஏழாலை தெற்கு அ.மி.த.க. பாடசாலை) பிரியதர்சினி (கனடா) ஆகியோரின் தந்தையும், சிவகுமார் (நோர்வே), பிரணவ சொரூபன் (யா/வயாவிளான் ம.ம.வித்தியாலயம்) சாந்தமூர்த்தி (கனடா) ஆகியோரின் மாமனும், திவ்யா, இலக்கியா, துவாரஹேதன், குருஷேத்ரன், சௌடில்யன், கிருஷாணி, பபிசான், துஷானி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.12.2015) புதன்கிழமை ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் புன்னாலைக் கட்டுவன் விலங்கன் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தம்பிப்பிள்ளை மணியகாரன் வீதி,
புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
சுன்னாகம்.

தகவல்:
குடும்பத்தினர்.
பிரணவ சொருபன் -அனுஷியா
(66960) (10.17)

### திருமதி அமலரட்ணம் முருகானந்தம்



யாழ்ப்பாணம், டேவிட் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அமலரட்ணம் முருகானந்தம் நேற்று (08.12.2015) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் முருகானந்தத்தின் அன்பு மனைவியும் அசோக், சிறோமி ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (09.12.2015) புதன்கிழமை பிற்பகல் 2.45 மணியளவில் அவரது இல்லத்தில் இருந்து மரியன்னை பேராலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலி ஒப்புக் கொடுக்க[illegible]பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்ய[illegible]படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் [illegible]

[illegible] டேவிட் வீதி,
யாழ்ப்பாணம்.

கவல்:
மக -அசோக்

### மகிந்தவின் முறைகேடுகளை அம்பலப்படுத்துவார் சஜின்

*அமைச்சர் ராஜித கூறுகிறார்*

கொழும்பு, டிசெ, 9
முன்னாள் நாடாளுமன்றஉறுப்பினர்சஜின் வாஸ் குணவர்த் தன கடந்த ஆட்சியில் நடைபெற்ற அனைத்து விடயங்களையும் விரைவில் வெளி உலகுக்கு அம்பலப்படுத்துவார் என அமைச்சரவை இணைப் பேச்சாளர் ராஜித சேனாரட்ண தெரிவித்துள்ளார்.
பேருவளையில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,
முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அரசில், சஜின் வாஸ் குணவர்த்தன மிக முக்கிய பொறுப்புக்களை வகித்தவர். கடந்த அரசில் மேற்கொள்ளப்பட்ட அனைத்துக் குற்றச் செயல்கள் பற்றிய விவரங்களையும் சஜின் வாஸ் குணவர்த்தன அம்பலப்படுத்தவுள்ளார். இது தொடர்பில் அவர் ஒப்புதல் வாக்குமூலமொன்றை அளித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.
இந்த நிலையில் மகிந்த ராஜபக்ச அரசின் முக்கியஸ்தர்களுக்கு எதிராக சஜின் வாஸ் குணவர்த்தன சில குற்றச்சாட்டுக்களைச் சுமத் தியுள்ளார் எனத் தெரிவித்தார். (த-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதையை எதிர்த்ததால் நான் ஜனாதிபதியானேன்

## கூறுகிறார் ஜனாதிபதி மைத்திரி

கொழும்பு, டிசெ. 9

போதைப்பொருளுக்கு எதிராகத் தேசிய ரீதியில் முன்னெடுத்த நடவடிக்கைகளே இறுதியாகத் என்னை ஜனாதிபதியாக்கியது என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

தேசிய ரீதியாகப் போதைப் பொருள் கொள்கையை உருவாக்கும் பொருட்டு அந்த நடவடிக்கைகளைத் தான் முன்னெடுத்திருந்ததாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

உலக சுகாதார ஸ்தாபனமானது சுகாதார அமைச்சர் வைத்தியக் கலாநிதி ராஜித சேனாரத்னவுக்கு 2015 ஆம் ஆண்டுக்கான உலகப் புகையிலை தின விருதை வழங்கிக் கௌரவிக்கும் நிகழ்வு ஒன்று கொழும்பிலுள்ள விடுதி ஒன்றில் இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி மைத்திரிபால இதனைத் தெரிவித்தார்.

அவர் அதில் மேலும் தெரிவித்ததாவது:-

மதுபானம் மற்றும் புகையிலை தொடர்பான அரசின் கொள்கைகள் ஊடாக ஆரோக்கியமான தேசத்தைக் கட்டியெழுப்பும் பொறுப்பானது நிறைவேற்றப்படும்.

உலக சமூகம் முகம் கொடுத்து வரும் தொற்று நோய்கள் தொடர்பாக அரசு நாட்டு மக்களுக்குத் தெளிவுபடுத்தி அதனூடாக ஆரோக்கியமான தேசத்தைக் கட்டியெழுப்பத் தேவையான சிறப்பான செயற்பாடுகளை முன்னெடுக்கும்.

நான் சுகாதார அமைச்சராக இருந்தபோது 2013 ஆம் ஆண்டு இதே விருது எனக்கு வழங்கப்பட்டது. இதன்போது புகையிலைப் பாவனையைத் தடுக்கும் சட்டத் திருத்தம் ஒன்றை உருவாக்குவது தொடர்பான அமைச்சரவைப் பத்திரத்தை அமைச்சரவையில் சமர்ப்பித்தேன். ஆனால் அவ்வாறான சட்டவரைவொன்று இருந்தால், அந்தச் சட்டவரைவு இலங்கைக்கு வரும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளைப் பாதிக்கும் என்ற காரணத்தை முன்வைத்த அந்தச் சந்தர்ப்பத்தில் அது நிராகரிக்கப்பட்டது. இதன்போது அமைச்சர்களான ராஜித சேனாரத்ன மற்றும் சம்பிக்க ரணவக்க ஆகியோரே என்னுடன் கூட இருந்தார்கள் என்றார்.

அமைச்சர்கள், பேராசிரியர் கார்லோ பொன்சேகா, புகையிலை மற்றும் மதுபானங்கள் தொடர்பான தேசிய அதிகார சபையின் தலைவர் பாலித அபேகோன், உலக சுகாதார ஸ்தாபனத்தின் தென்கிழக்கு ஆசிய பிராந்தியத்தின் பணிப்பாளர் வைத்தியக் கலாநிதி பூனம் கெத்ரசின் உள்ளிட்ட பலரும் அதில் கலந்து கொண்டிருந்தனர். (த-4)

விண்ணப்பப்படிவ விநியோகம்

சென்ஜோன்ஸ் ஆலய பாலர் பாடசாலையின்
2016 ஆம் ஆண்டுக்கான விண்ணப்பப்படிவத்தை
இம் மாதம் 9ஆம் திகதி முதல் 16 ஆம் திகதிவரை
காலை 9.00 மணிமுதல் 11 மணிவரை பாடசாலையில்
பெற்றுக்கொள்ளலாம் (ஆங்கில மொழி,தமிழ்மொழி)

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:
நிர்வாகம் (66954) (13.15.17)
சென்ஜோன்ஸ் ஆலய பாலர் பாடசாலை- சுண்டுக்குளி.

பணிப் பெண் தேவை

பாரிசவாத நோயுற்ற ஒரு அம்மாவை கவனிக்கவும் சமையலுக்கும் பணிப்பெண் தேவை. சம்பள விவரம் நேரில் பேசிக்கொள்ளலாம். இரவில் தங்குமிட வசதியுண்டு. தொடர்பு: கண்ணன்
244/4 , கண்டிவீதி, அரியாலை,
யாழ்ப்பாணம்.
077 405 9137

வீடு மற்றும் அலுவலகத்துக்கு தேவையான அனைத்து பொருள்களையும் மலிவாகப் பெற்றுக் கொள்ளலாம்.

கையிருப்பு உள்ளவரை மட்டுமே

| பொருள்கள் | விலை | நத்தார் பரிசுகள் |
|---|---|---|
| SOFA செற் (பெப்ரிக் மற்றும் லெதர்) | 40300/- | Glass Teepo + Rice Cooker |
| 6x4 ½ 3 கதவு அலுமாரி | 15350/- | Electric Kettle |
| 6x4 அலுமாரி | 10950/- | Electric Kettle |
| 6x3 அலுமாரி | 8950/- | Shoe Rack |
| பிரம்பு செற்றி செற் Setty Set | 15,000/- | Iron Box + Teepo |
| சாப்பாடு கதிரை மேசை Set (Glass Top) | 23,100/- | Kitchen Rack |
| 6 கதிரைகள் Set | 4350/- | Teepo |
| மர செற்றி செற் | 36,000/- | Wooden Teepo Set (3) |

| பொருள்கள் | விலை | நத்தார் பரிசுகள் |
|---|---|---|
| Hisense LED TV 32 | 26,900/- | (37,900/-) 3 வருட Damro உத்தரவாதம் |
| Hisense LED TV 24 | 19,990/- | (26,900/-) 3 வருட Damro உத்தரவாதம் |
| Panasonic LED TV | 49,990/- | Panasonic Smart Phone + DVD Player |
| Gas Cooker | 3,950/- | மின் Kettle |
| Fridge 180l with Lock | 38,600/- | 45,400/- 10 வருட Damro உத்தரவாதம் |
| Preethi grinder (Lavender) | 7,800/- | 9,290/- 2 வருட Damro உத்தரவாதம் |
| Damro Semi auto washing Machine | 20,300/- | 24,800/- 5 வருட Damro உத்தரவாதம் |

(மொத்தமாக கொள்வனவு செய்பவர்களுக்கு குறைந்த விலையில்)

Address:
No.42, பலாலி றோட், கந்தர்மடம், யாழ்.
(Damro Show room இற்கு அருகில்-100m)
T.P: 076 82194 13
076 82194 15

# இலங்கைப் பல்கலைகளில் அதிகளவானோர் மாணவிகள்

*உயர் கல்வி இராஜாங்க அமைச்சர் தகவல்*

இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களில் பெண்களே அதிகளவில் கல்வி கற்கின்றனர் என்ற உயர் கல்வி இராஜாங்க அமைச்சர் மொஹான்லால் கிரே தெரிவித்துள்ளார்.

இலங்கை மன்றக் கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையிலுள்ள பல்கலைக் கழகங்களில் 60 சதவீதமான பெண்கள் கல்வி கற்கின்றனர். ஆண்களை விட இவர்கள் அதிகளவில் பல்கலைக் கழகங்களுக் குத் தேர்வாகின்றனர். பல்கலைக்கழக கல்வி நடவடிக்கைகளில் ஆண்களின் பங்களிப்பு மிகக் குறைவாகவே காணப்படுகின்றது.

உலகில் மொழி ஆளுமையின் அடிப்படையிலும் பெண்களே முன்னிலை வகிக்கின்றனர். உலகில் அதிகளவானவர்கள் ஆங்கில மொழி பேசுகின்றனர். எமது தாய்மொழியை சரியாக பேச முடியாவிட்டால் நாம் வெட்கப்பட வேண்டும். இரண்டாம் மொழியான ஆங்கிலத்தை சரிவரப் பேச முடியாவிட் டால்அது பிழையில்லை. முடிந்தளவிற்கு பிழையாக வேனும் ஆங்கிலத்தை பேசிப் பழகுவது நல்ல விடயமே.

தொழில் வழங்குநர்கள் ஆங்கில மொழியாற்றலை எதிர்பார்க்கின்றார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார். (த-5)

நியத்த ஜய
வெற்றி வாரம் 417
திகதி 2015-12-08
வர்ணம் மஞ்சள்

17 18 22 29 I

எதிர்வரும் வெள்ளிக்கிழமை
ஜக்பொட் பரிசுத்தொகை
17,860,960/=

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து
1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு 1919

லக்கின
இம்முறை தனயோகம் உங்களுடையதா?
திகதி 08.12.2015
வெற்றி வாரம் 1913
வர்ணம் நீலம்

வெற்றி இலக்கங்கள்
04 19 21 46

வெள்ளிக்கிழமை வெற்றிப் போதி
3,200,220/=

பெறுமதியான "டீ-செட்" வென்ற டிக்கட் தொடரிலக்கங்கள்

| | | | |
|---|---|---|---|
| குருநாகல் | 400884072-1-21 | மாத்தளை | 400887613-3-03 |
| கண்டி | 400885215-6-46 | அம்பாறை | 400889432-5-45 |
| களுத்துறை | 400891310-2-22 | மன்னார் | 400889633-2-12 |
| கம்பஹா | 400895546-6-36 | புத்தளம் | 400892852-3-43 |
| காலி | 400897933-3-33 | யாழ்ப்பாணம் | 400895100-9-09 |
| கொழும்பு | 400901754-8-38 | பொலன்னறுவை | 400896412-9-49 |
| திருகோணமலை | 400884264-9-09 | வவுனியா | 400901820-8-28 |
| மொனராகலை | 400886672-2-22 | | |

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து
1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு 1919

யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்
வரவு செலவுத் திட்டம் 2016

1987ஆம் ஆண்டு மாநகரசபை கட்டளைச் சட்டத்தின் அத்தியாயம் (252), (212) பி பிரிவின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டிற்கு கிடைக்கக் கூடிய வருமான மதிப்பீட்டினையும் உத்தேச செலவின விவரங்களையும் உள்ளடக்கிய யாழ். மாநகராட்சி மன்றத்தின் 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம். 09.12.2015 தொடக்கம் 15.12.2015 வரை மாநகரசபை அலுவலகம், பிரதான பொது நூலகத்திலும் அலுவலக நேரத்தின் போது பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்படும் என இத்தால் அறிவித்தல் தரப்படுகின்றது.

திரு. பொ. வாகீசன்
மாநகர ஆணையாளர்,
மாநகரசபை , யாழ்ப்பாணம்.

(உ 20721)
(12.15.17.18)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

செல்வராசா சோபிதன்
(BBA (Hons)Attorney at Low)




இன்று
(09.12.2015)
புதன் கிழமை
உச்ச நீதிமன்றத்தில்
சட்டத்தரணியாக
பதவி ஏற்கின்றார்.
இவரை மனதார
பாராட்டுவதோடு
மேன்மேலும்
பல பட்டங்கள்
பெற்று புகழின்
உச்சிக்கு செல்ல
மனதாரப் பாராட்டி
வாழ்த்துகின்றோம்.

கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.
ஐயனார் ஆலய
இளைஞர்கள்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மூன்று பிரதிவாதிகள் இல்லாது ரவிராஜ் படுகொலை வழக்கு

## விசாரணையை முன்னெடுக்க நீதிமன்று அனுமதி

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் கொலை செய்யப்பட்ட வழக்கை மூன்று பிரதிவாதிகள் இல்லாது விசாரணை செய்ய கொழும்பு நீதிவான் நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது. அரசதரப்புசட்டத்தரணிவழங்கிய தகவல்களை ஆராய்ந்த கொழும்பு மேலதிக நீதிவான் நிரோ பிரணாந்து இந்த அனுமதியை வழங்கியுள்ளார்.

நடராஜா ரவிராஜ் கொலை வழக்கு தொடர்பில் ஆறு பேருக்கு எதிராக சட்டமா அதிபரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவர்களில் குறித்த வழக்குடன் தொடர்புடைய மூவர் தலைமறைவாகியுள்ள நிலையில், அவர்களைக் கைதுசெய்ய பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதாக அரச தரப்பு சட்டத்தரணி குறிப்பிட்டுள் ளார். இதன்படி இந்த வழக்கு ஜனவரி 4 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. (வ)

### அரசியல்

வைக்கப்பட்டுள்ளது என்று அந்தக் கைதி தெரிவித்துள்ளதோடு தனது வழக் கைத் துரிதப்படுத்துமாறும் கோரி அவர் நேற்று முன்தினம் தொடக்கம் உணவு தவிர்ப்பில் ஈடுபட்டுள்ளார். (த-4-5)

### கிளிநொச்சியில்

50 குடும்பங்களைச் சேர்ந்த 163 பேர் இடம்பெயர்ந்து பாடசாலையில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் கிளிநொச்சி மாவட்டச் செயலக தகவல்கள் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது பெய்துவரும் கடும் மழை காரணமாக நேற்றுமாலைவரை 2451குடும்பங்களைச் சேர்ந்த 7572 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதில் கிளிநொச்சி, கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் 218 குடும்பங்களைச் சேர்ந்த 639 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 11 வீடுகளும், பூநகரி பிரதேச செயலர் பிரிவில் 498 குடும்பங்களைச் சேர்ந்த 1384 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 20 வீடுகளும், கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் 1179 குடும்பங்களைச் சேர்ந்த 3840 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 156 வீடுகளும், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் 556 குடும்பங்களைச் சேர்ந்த 1709 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் ஒரு வீடும் முழுமையாக சேதம் அடைந்துள்ளதுடன் 21 வீடுகள் பகுதியளவில் சேதம் அடைந்துள்ளன.

இதைவிட சொந்த இடங்களில் இருந்து இடம் பெயர்ந்தவர்களாக கண்டாவளை பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த பெரியகுளம் கட்டைக்காடு கிராமத்தைச் சேர்ந்த 50 குடும்பங்கள் வெள்ளம் காரணமாக அவர்களுடைய வீடுகளை விட்டு இடம் பெயர்ந்து கட்டைக்காடு பாடசாலையில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

அத்தோடு கிளிநொச்சியில் இந்தக் காலப் பகுதியில் 106.3 மி.மீ மழை பதிவாகியுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-ரி3)

### கொழும்பிலும்

மண்டலவியல் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

வடக்கு மாகாணம், வடமத்திய மாகாணம், கிழக்கு மாகாணம் மற்றும் ஊவாமாகாணத்தில் இடியுடன் கூடிய மழை பெய்யும். பி.ப 2.00க்குப் பின்னர் மிகக் கடுமையான மழை பெய்யும் எனவும் மழைவீழ்ச்சியின் அளவு 150 மில்லி மீற்றருக்கும் அதிகமாகும். இடியுடன் கூடிய மழையின் போது காற்றின் வேகம் தற்காலிகமாக அதிகரிக்கும்.

மழை காலத்தில் மின்னலால் ஏற்படும் பாதிப்புக்களை குறைக்க, பொது மக்கள் மிக அவதானமாக இருக்க வேண்டும் என அதில் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை, அடுத்து 18 மணித்தியாலங்களுக்குச் சீரற்ற காலநிலை எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-10)

### காணி

நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவரு மான செல்வம் அடைக்கலநாதன் கேட்டுள்ளார்.

நாடாளுமன்றில் நேற்றுப் பெருநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கீடு குறித்த குழு நிலை விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது, நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கூறியுள்ளதாவது:-

அரசமைப்பின் ஒரு பகுதியான 13 ஆவது திருத்தச்சட்டத்தின் அதிகாரங்களை முழுமையாக மாகாண சபைகளுக்கு வழங்க வேண்டும்.

19ஆவது திருத்தச்சட்டத்தின் ஊடாக நாடாளுமன்றத்தைப் பலப்படுத்தியதைப் போன்று மாகாணசபைகளுக்கு உரிய அதிகாரங்களை வழங்கி, அங்குள்ள அமைச்சர்களுக்கு மேலும் அதிகாரங்களைப் பகிர்வதன் ஊடாக, மாகாண சபைகளையும் பலப்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வடக்கு மாகாண சபையின் மீன்பிடித் துறை அமைச்சைப் பொறுத்த வரையில் நன்னீர் மீன்பிடி தொடர்பான விடயங்கள் மாத்திரமே வழங்கப்பட்டுள்ளன. அதிலும் பல குளங்கள் மத்திய அரசின் கீழ் உள்ளன. சிறிய குளங்கள் மாத்திரமே மாகாண சபையின் கீழ் வருகிறது. இந்த நிலையில் மாகாணசபை அமைச்சுக்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்க வேண்டும்.

வடக்கில் இடம்பெறுகின்ற மண் மற்றும் கிரவல் அகழ்வுகளைத் தடுக்கும் பொறுப்பைப் பிரதேச செயலகங்களுக்கு வழங்குவதுடன், அடுத்த வருடம் நடைபெறவிருக்கும் உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்களுக்கு முன்னர் எல்லை நிர்ணயத்தை சரியான முறையிலும், அவசரமின்றியும் மேற்கொள்ளவேண்டும்.

மக்களின் குடிப்பரம்பலை அடிப்படையாகக் கொண்டு மக்களின் வாழ்க்கைக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் எல்லை நிர்ணயம் மேற்கொள்ளப்பட வேண்டும். -என்றார்.

இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மற்றொரு நாடாளுமன்ற உறுப்பினரான சிவசக்தி ஆனந்தன் உரையாற்றிய போது,

முன்னைய அரசுகள் 13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தத் தவறியுள்ளன. அத்துடன், 18ஆவது திருத்தச்சட்டத்தின் மூலம், 13ஆவது திருத்தச்சட்டத்தின் சில பிரிவு களை முன்னைய அரசு நீக்கி விட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (த-வ)

### பயங்கரவாதிகளாக

அமைச்சருமான லக்ஸ்மன் கிரியல்ல.

நாடாளுமன்றம் நேற்று முற்பகல் 9.30 மணிக்கு சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் கூடியது. வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது எட்டு புலம்பெயர் அமைப்புக்கள் மீதான தடை நீக்கம் செய்யப்பட்ட விவகாரம் தொடர்பில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும பாதுகாப்பு அமைச்சிடம் கேள்விகளை எழுப்பியிருந்தார்.

இவற்றுக்குப் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பதில் வழங்கிக் கொண்டிருந்தார். இதன்போது குறுக்கீடு செய்து கருத்து வெளியிடுகையிலேயே அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

ஒவ்வொரு தமிழரையும் பயங்கரவாதியாகவும், தமிழ் அமைப்புக்களைப் பயங்கரவாத அமைப்புக்களாகவுமே கடந்த அரசு அடையாளப்படுத்தியது. ஆனால், புதிய அரசு அவ்வாறு அல்ல. மேற்படி பிரச்சினையை வேறு கோணத்திலேயே நாம் பார்க்கின்றோம்.

இன்ரர்போல், புலனாய்வுப் பிரிவுகளுடன் பேச்சு நடத்திய பின்னரே தடை நீக்கம் செய்யும் முடிவுக்கு அரசு வந்தது. இந்த விடயத்தில் அரசியல் நோக்கில் எந்தவொரு முடிவும் எடுக்கப்படவில்லை.

அதேவேளை, ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுவதற்கு சில மாதங்களுக்கு முன்னர் வெளிநாடுகளிலிருந்து வரும் தமிழர்கள் வடக்குக்குச் செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டது. பெற்றோரைப் பார்க்க வந்தவர்கள் கூட, திரும்பிச் செல்லும் நிலை ஏற்பட்டது. ஆட்சி மாற்றத்தின் பின்னர் இந்த நிலைமையை நாம் மாற்றியுள்ளோம். புதியதொரு ஆரம்பம் அவசியம். அதை நோக்கியே செல்ல வேண்டும் - என்றார். (த-5-சி)

### விடுவிக்கப்பட்ட

தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அழைக்கப்பட்டுள்ளவர்களில் ஒருவர், முன்னர் கைது செய்யப்பட்டு அவருக்கு பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் வழக்கத் தாக்கல் செய்யப்பட்டது.

இதனால் குறித்த நபர் பல வருடங்கள் சிறையிலிருந்து விசாரணையை எதிர்கொண்டிருந்தார். நீதிமன்ற விசாரணையின் மூலமாக அவர் நிரபராதி என இனங்காணப்பட்டு விடுவிக்கப்பட்டிருந்தார்.

இந்த நிலையில், சில வாரங்களுக்கு முன்னர் அரசினால் வெளியிடப்பட்ட அரசியல் கைதிகளை விடுவிப்போர்பற்றிய பெயர்ப்பட்டியலில், குறித்த நபரான குணரட்ணம் கஜேந்திரன் என்பவரின் பெயரும் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் அவரை இன்று விசாரணைக்கு வருமாறு பயங்கரவாதப் பிரிவினர் அழைத்துள்ளனர்.

இதுதவிர, திருகோணமலையைச் சேர்ந்த 2009 ஆம் ஆண்டு கைது செய் யப்பட்ட ஒருவர் புனர்வாழ்வு பெற்று வீடு திரும்பியிருந்தார். அவரைப் பயங்கர வாதப் தடுப்புப் பிரிவினர் நேற்று திருகோணமலையில் உள்ள அலுவலகத்துக்கு அழைத்துள்ளனர்.

இதனையடுத்து, அங்கு சென்ற நபரை, விசாரணை செய்த பயங்கரவாதத் தடுப்பு பிரிவினர், தாம் அழைக்கும் நேரத்தில் விசாரணைக்கு வருமாறு குறிப்பிட் டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-4)

### எமக்கெனச்

நகராக இருக்கின்றது என்று குற்றம் சுமத்திய அவர், போரின் பின்னரான காலத்தில் திட்டமிடப்பட்ட நகராக மாற்றியமைத்திருக்க முடியும் என்றும், அது கடந்த காலத்தில் மேற்கொள்ளப்படவில்லை என்றும் குறிப்பிட்டார்.

சர்வதேச நகரத் திட்டமிடல் தின நிகழ்வு கைலாசபதி கலையரங்கில் நேற்றுக் காலை இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

1949 ஆம் ஆண்டு உலக திட்டமிடல் தினம் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் யாழ்ப்பாணத்தில் கடந்த ஆண்டிலிருந்துதான் நாம் இதனைக் கடைப்பிடித்து வருகின்றோம். இதிலிருந்தே நாம் எவ்வளவு தூரம் அபிவிருத்தியில் பின்தங்கியிருக்கின்றோம் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

கடந்த காலங்களில் போர் காரணமாக நகர அபிவிருத்தியை மேற்கொள்ள முடியவில்லை. போர்க் காலத்தில் மக்களைக் காப்பாற்றுவதிலும், நிவாரணங்கள் வழங்குவதிலுமே காலம் செலவிடப்பட்டது. போரின் பின்னர், நிவாரணங்கள் வழங்குவதிலும், புனர்நிர்மாணம் செய்வதிலும், மீளக்கட்டியெழுப்புவதிலுமே கவனம் செலுத்தப்பட்டது. அத்துடன் மக்களின் இயல்பு வாழ்க்கை மீளத் திரும்புவதற்கான நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டது.

நகரைத் திட்டமிட்ட ரீதியில் கட்டியெழுப்புவதற்குப் பொருத்தமான காலம், போரின் பின்னரான காலப் பகுதியே. கடந்த காலங்களில் அவ்வாறு செய்யப்படவில்லை. அதற்கான சூழலும் இருக்கவில்லை.

யாழ்.நகர் திட்டமிடப்படாத ஒரு நகராகும். யாழ்.நகர் எதுவென்று கேட்டால், யாழ். மத்திய பேருந்து நிலையத்தையா அல்லது எந்த இடங்களைக் குறிப்பிடுவது. கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திகள் ஊடாக யாழ்.நகருக்கு முக ஒப்பனை செய்யப்பட்டிருக்கின்றதே தவிர, யாழ்.நகர் சீரமைக்கப்படவில்லை.

கழிவு முகாமைத்துவம் ஒழுங்காக இல்லை. எந்தவொரு திட்டமிடல்களும் இல்லாமல்தான் யாழ்.நகர் இன்றும் இருக்கின்றது. இதற்காகத்தான், உலக வங்கியின் உதவியுடன் யாழ்.நகர அபிவிருத்தித் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

வீதி - போக்குவரத்து - நெரிசல்கள் ஒரு விடயமாகவும், புராதனம் மற்றும் கலாசாரம் ஒரு விடயமாகவும், வடிகாலமைப்பு மற்றும் குள மேம்பாடு என்பன ஒரு விடயமாகவுமாக மூன்று விடயங்களில் யாழ்.நகர அபிவிருத்தி திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

நாம் இன்னொரு நகரத்தைப் பிரதியெடுத்து அதைப் போன்று எமது நகரம் அமைய வேண்டும் என்று எண்ணக் கூடாது. எமது கலாசாரம் - பண்பாட்டை மையமாக வைத்து, அதனைச் சிதைக்காமல் - சிதையவிடாமல் நகரத் திட்டமிடலை முன்னெடுக்க வேண்டும்.

நாம் போரால் பாதிக்கப்பட்டோம் என்பதைச் சொல்லிக் கொண்டிருக்காமல், ஒரு இராசதானியைச் சொந்தமாக வைத்திருந்த வர்கள் என்பதை நினைவில் கொண்டு மீண்டெழ வேண்டும் - என்றார். (த-5-ரி6)

### பொலிஸ்

பான்மை இனத்தைச் சேர்ந்த பிரபல நடிகை மற்றும் சட்டத்தரணி ஆகிய மூவரையுமே இவ்வாறு உடனடியாகக் கைது செய்து முற்படுத்துமாறு நீதிவான் மா.கணேசராஜா கட்டளையிட்டுள்ளார்.

கடந்த மாதம் மணற்காட்டுப் பகுதியில் விடுதலைப்புலிகளால் புதைத்து வைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படும் தங்க ஆபரணங்களைக் கொழும்பிலிருந்து வருகை தந்திருந்த இனம்தெரியாத குழு ஒன்று தோண்ட முற்பட்ட சம்பவம் தொடர்பாகச் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு 6 பேர் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த நடிகையான கே.கே.எஸ்.கலியாணரத்தின, சட்டத்தரணியான கெமுனு தர்மதாச மற்றும் பொலிஸ் அதிகாரியான நிமால் ரட்னாயக்கா ஆகிய மூவரையும் மன்றில் முற்படுத்துமாறு நீதிமன்றால் அழைப்பாணை விடுக்கப்படடிருந்தது.

எனினும் அவர்கள் மன்றில் முன்னிலையாகாத நிலையில் அவர்கள் தொடர்பில் பொலிஸார் நேற்று மன்றில் அறிக்கை சமர்ப்பித்தனர்.


இதனை ஆராய்ந்த பருத்தித்துறை நீதிவான் மா.கணேசராசா, குறித்த மூவரையும் உடன் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்துமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இதேவேளை, இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் நெல்லியடி மற்றும் பருத்தித்துறைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட 6 பேரையும் பிணையில் விடுவிக்க நீதிவான், அனுமதி வழங்க மறுத்தார்.

இது தொடர்பான வழக்கு விசாரணைகள் நேற்றுமுன்தினம் நீதிவான் மா.கணேசராசா முன்னிலையில் இடம்பெற்ற போது சட்டத் தரணிக ளான என்.ஸ்ரீகாந்தா, எஸ். கந்தசாமி மற் றும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த இரு சட்டத்தரணிகள் ஆகியோர் சந்தேகநபர்களைப் பிணையில் அனுமதிக்குமாறு விண்ணப்பம் செய்தனர்.

இந்த நிலையில் பிணை விண்ணப்பத்தை ஆராய்ந்த நீதிவான்அதனை நிராகரித்ததுடன் 6 சந்தேகநபர்களையும் எதிர் வரும் 17 ஆம் திகதி வரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு உத்தர விட்டார். (வ-108)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# விடைபெறுகிறார் கொபி பிரயண்ட்

வரலாற்றின் மிகச் சிறந்த கூடைப்பந்தாட்ட வீரர்களில் ஒருவராகக் கருதப்படுகின்ற கொபி பிரயண்ட் இந்த வருடத்துடன் சர்வதேச மற்றும் கழக ஆட்டங்களில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

ஐந்து தடவை என்.பி.ஏ. சம்பியனான கொபி பிரயண்ட், எல்.ஏ. லேக்கர்ஸ் அணியுடனான தனது இருபது வருட ஒப்பந்த காலத்தில் 32 ஆயிரத்து 683 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தில் நீடித்து வந்தார். தனது ஓய்வு தொடர்பாக பிரயண்ட் தெரிவிக்கையில்:- ஒவ்வொரு வீரரதும் திறன் ஒரு கட்டத்தில் வீழ்ச்சியடைய ஆரம்பிக்கும். எனக்கு வயதாகிவிட்டது (வயது -37) என்பதை உணர்கிறேன். அடிக்கொருதடவை உடலில் காயங்கள் ஏற்படுகின்றன. ஓய்வுபெறுவதற்கான சிறந்த காலம் இதுவென்பது எனக்கு நன்றாகத் தெரிகிறது. இந்த வருடத்துடன் கூடைப்பந்தாட்டத்திடலுக்கு விடைகொடுக்கலாம் என்று எண்ணுகிறேன். ஒவ்வொரு கூடைப்பந்தாட்ட வீரரதும் கனவாக இருக்கும் முதலிடத்தைப் பிடித்தமை மகிழ்ச்சி-என்றார். (ம)

# தேசியமட்ட கராத்தே

யாழ்ப்பாணம், டிசெ. 9

இலங்கை காரத்தே சம்மேளனத்தினால் நடத்தப்படும் தேசிய மட்ட காரத்தே தொடர் இந்தவாரம் கொழும்பு ரொறிங்ரன் விளையாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

21வயதுக்கு மேற்பட்ட இருபாலாருக்குமான தொடர்கள் 12ஆம் 13ஆம் திகதிகளிலும் 21வயதுக்கு உட்பட்ட இருபாலாருக்கு



மான தொடர்கள் 19ஆம் 20ஆம் திகதிகளிலும். இடம்பெறவுள்ளன. இலங்கை காரத்தே சம்மேளனத்தின் ஏற்பாட்டில் வடமாகாண காரத்தே சங்கம் அண்மையில் முன்னெடுத்த கராத்தே தொடரில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற வீர,வீராங்கனைகள் மேற்படி தொடரில் கலந்துகொள்ளவுள்ளனர்.(ம-23)

# பிபாவின் செப் பிளாட்டர் மீது மீண்டும் விசாரணை ஆரம்பம்

சர்வதேச கால்பந்து சம்மேளனத்தின் இடைக்காலத்தலைவராக இருக்கும் செப் பிளாட்டர் மீது மீண்டும் விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன.




சர்வதேச கால்பந்து சம்மேளனத்தில் (பிபாவில்) 100 மில்லியன் அமெரிக்க டொலர்கள் முறைகேடு இடம்பெற்றமை தொடர்பில் கடந்த சில மாதங்களாக விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. ஐக்கிய அமெரிக்காவின் மத்திய புலனாய்வுத் திணைக்களமே, இது குறித்த விசாரணைகளை மேற்கொண்டுவருவதாகத் தெரியவருகிறது.

குறித்த முறைகேடு தொடர்பாக சில கால்பந்து அதிகாரிகள் கைதுசெய்யப்பட்டனர். இதனையடுத்து பிளாட்டர் தனது பதவியை விட்டு விலகுவதாக அறிவித்தார். ஆனாலும் புதிய தலைவர் தெரிவு செய்யப்படாததால்இடைக்காலத் தலைவராக அவர் தொடர்கிறார். பிளாட்டர் நீண்டகாலமாக புலனாய்வுத் துறையின் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு இருந்தார். சமீப காலமாக அவர்மீதான கேள்விக் கணைகள் குறைந்து வந்தன. ஆனால் ஏனைய அதிகாரிகளிடத்தில் நடத்திய விசாரணையில் கிடைத்த துப்புக்களை வைத்து பிளாட்டர் மீது மீண்டும் விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. (ம)

# தேசியமட்ட தடகளத்தொடர்

யாழ்ப்பாணம், டிசெ. 9

தேசியமட்ட தடகளத் தொடர் எதிர்வரும் 18ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

41ஆவது தேசிய விளையாட்டு விழாவின் ஓர் அங்கமான இருபாலாருக்குமான தடகளத் தொடர் எதிர்வரும் 18ஆம் திகதி தொடக்கம் 20 ஆம் திகதிவரை தியகம மகிந்த ராஜபக்ச விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது. டிசெம்பர் மாதம் 18ஆம் திகதி இடம்பெறும் ஆரம்ப நிகழ்வுக்கு விருந்தினராக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கலந்து கொள்வார். அதே நேரம் இறுதிநாள் நிகழ்வுக்கு விருந்தினராக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்து கொள்ளவுள்ளார். (ம-23)

# ரியல் மட்ரிட் பலமான அணி என்கிறார் முன்கள வீரர் பலே

ஆடுகளத்துக்கு உள்ளேயும் வெளியேயும் சில கடினமான தருணங்களைக் கொண்டிருந்தாலும், ரியல் மட்ரிட் மிகப் பலமான அணி என அக்கழகத்தின் முன்னணி வீரரான கரித் பலே தெரிவித்துள்




ளார்.

கடந்த மாதம் பார்சிலோனாவிடம் அடைந்த பெரிய தோல்வி காரணமாக ரியல் மட்ரிட் கழகம் துவண்டு போயிருந்தது. எனினும் லா லிகா தொடரின் தனது இறுதி ஆட்டத்தில் கெடாபே அணியை 4:1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியதன் மூலம் லா லிகா தரவரிசையில் அட்லெட்டிகோ மட்ரிட் அணியை பின்தள்ளி இரண்டாமிடத்துக்கு முன்னேறியதுடன், முதலாவது இடத்திலுள்ள பார்சிலோனாவை விட நான்கு புள்ளிகளே குறைவாக உள்ளது.

லீக் ஆட்டங்கள் முடிந்த பின்னர் ரியல் மட்ரிட் தொடர்பாக பலே தெரிவிக்கையில் தரப்படுத்தலில் இரண்டாம் இடத்தில் உள்ளதால் நாம் இரண்டாம் தர அணி என்று அர்த்தமில்லை. நாம் எப்போதும் சிறந்தவர்கள் தான். ரியல் மட்ரிட் ஓர் பலமான அணி. பார்சிலோனாவுக்கு எதிரான தோல்வி மறக்கப்பட வேண்டியது. இன்னமும் ஆட்டங்கள் உள்ளன. அதில் எம்மை நிரூபிப்போம். எந்த ஒரு அணியிடத்திலும் இல்லாத ஒற்றுமை எமக்கிடையே உள்ளது. அதுவே எமது பலம்-என்றார்.

மெஸ்ஸி, ரொனால்டோ, நெய்மர் ஆகியவர்களுக்கிடையில் தங்கப் பந்து விருதுக்காக போட்டி நிலவுகின்றது. விருதை ரொனால்டோவே தட்டிச் செல்வார் என்று இவர் லா லிகா விருது வழங்கும் நிகழ்வில் வைத்து தெரிவித்திருந்தார். (ம)




தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை 3:0 என இந்திய அணி வென்றதால் 110 புள்ளிகளுடன் தரவரிசைப் பட்டியலில 2ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளது. ஆஸ்திரேலியா 3ஆவது இடத்துக்கும், பாகிஸ்தான் 4ஆவது இடத்துக்கும் பின்தள்ளப்பட்டுள்ளன. தென்னாபிரிக்க அணி 114 புள்ளிகளுடன் முதலிடத்தில் நீடிக்கிறது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மோட்ச தீப அழைப்பு



திருமதி
**நல்லம்மா கனகராசா**
(அம்பிகை)

கீரிமலை கேணியடியில் பிறந்து வளர்ந்து, வாழ்ந்து, தற்சமயம் கூத்தஞ்சீமா வளவு, அளவெட்டி வடக்கில் வாழ்ந்தவரும்,

கடந்த 28.11.2015இல் சிவபதமடைந்தவருமான எமது அன்னை திருமதி நல்லம்மா (அம்பிகை) கனகராசா அவர்களின் மோட்ச தீப நிகழ்வு நாளை (10.12.2015) வியா ழன் மதியம் எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அவரது இறுதி நிகழ்வில் கலந்து அஞ்சலியும், அனுதாப மும் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரையும் மேற்படி நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு தய வுடன் வேண்டுகின்றோம்.

**மோட்சதீபம் அளவெட்டி தவளக்கிரி அம்பாள் ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.**

கூத்தஞ்சீமா வளவு,
அளவெட்டி வடக்கு.

மக்கள், மருமக்கள், பேரர்.


# சென்னை, ராஜஸ்தானுக்குப் பதிலாக புனே, ராஜ்கோட் அணிகள் தெரிவு

ஐ.பி.எல். தொடரில் இருந்து நீக்கப்பட்ட சென்னை, ராஜஸ்தான் அணிகளுக்குப் பதிலாக புனே, ராஜ்கோட் அணிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையால் நடத்தப்படும் ஐ.பி.எல். ரி–20 தொடருக்கு அமோக வரவேற்பு உள்ளது.

கடந்த 2013ஆம் ஆண்டு நடைபெற்ற லீக் தொடரின்போது சூதாட்டத்தில் ஈடுபட்டதாக சென்னை, ராஜஸ்தான் அணிகளுக்கு இரண்டு ஆண்டுகள் தடை விதிக்கப்பட்டது. இதனால் இந்த இரண்டு அணிகளுக்குப் பதிலாக இரு புதிய அணிகள் தெரிவு செய்ய முடிவுசெய்யப்பட்டன. எந்த இரண்டு நகரங்கள் அவ்வாறு அங்கத்துவம் பெறப்போகின்றன என்பதற்கு கடும் போட்டி நிலவியது. இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையின் நேற்றைய கூட்டத்தில் புனே, ராஜ்கோட் நகரங்களின் பெயரில் புதிய இரு அணிகள் விளையாடும் என்று முடிவுசெய்யப்பட்டது. (ம)

# நடுவர் பொறுப்பிலிருந்து நைஜல் லோங் நீக்கம்

நியூசிலாந்து, இலங்கை அணிகளுக்கிடையில் இடம்பெறவுள்ள டெஸ்ட் தொடரின் இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் ஆட்டத்தின் மூன்றாவது நடுவர் பொறுப்பிலிருந்து நைஜல் லோங் நீக்கப்பட்டுள்ளார்.

ஆஸ்திரேலிய, நியூசிலாந்து அணிகளுக்கிடையில் அண்மையில் நடைபெற்ற பகலிரவு டெஸ்ட் ஆட்டத்தில் லையன் சம்பந்தப்பட்ட சர்ச்சைக்குரிய முடிவை வழங்கிய நிலையிலேயே, அவர் நீக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த நிலையில், இத்தொடரின் இரண்டு போட்டிகளிலும் அவர், கள நடுவராகப் பணியாற்றவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)


## யாழ். மறை மாவட்டத்தின் புதிய ஆயரை சதாகாலமும் சகாயத்துடன் வாழ இறையாசீர் வேண்டி வாழ்த்துகின்றோம்



சகாயபுரம் புனித சதாசகாய அன்னை ஆலய உருவாக்கத்துக்கும் எம் மக்களின் ஆன்மீக வளர்ச்சிக்கும் இறைபணி புரிந்து புதிய ஆயராக இறைவனால் தெரிவு செய்யப்பட்டு பணியேற்றுள்ள அதிவணக்கத்துக்குரிய

**ஜஸ்ரின் பேணாட்**
**ஞானப்பிரகாசம் ஆண்டகை**

அவர்களை உடல், உளநலம் பெற்று சதாகாலமும் சகாயத்துடன் வாழ்ந்து இறைபணி புரிய வாழ்த்துகின்றோம்.

பங்குத் தந்தை, பங்கு மக்கள்
புனித சதா சகாய அன்னை ஆலயம்,
சகாயபுரம், மாதகல்


# வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வெற்றியை சமர்ப்பித்த இந்திய அணி



தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை 3–0 என்று வென்ற இந்திய அணி, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தனது வெற்றியைச் சமர்பித்துள்ளது.

இது தொடர்பாக கோக்லி தெரிவிக்கையில் – 'சென்னையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்த வெற்றியை சமர்ப்பிக்க விரும்புகிறோம். தென்னாபிரிக்க அணி தடுப்பு ஆட்டத்தில் அதிக கவனம் செலுத்தியது ஆச்சரியம் அளித்தது. உலகத்தில் எந்தவொரு இடத்திலும் எந்தவொரு அணியையும் எங்களால் வெல்ல முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது. எங்களது ஆட்டத்தை மட் டுமே எங்களால் கட்டுப்படுத்த முடியும். எங்கள் ஆட்டம் குறித்து பேசுபவர்களையும், எழுதுபவர்களையும் எங்களால் தடுக்க முடியாது. எந்த மாதிரியான ஆடுகளத்திலும் எங்களால் சிறப்பாக செயல்பட முடியும் என்பதை நிரூபித்து இருக்கிறோம். அணியில் அனைத்து வீரர்களும் வெற்றிக்காக கடுமையாக பாடுபட்டனர். தொடர் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பொழுது எமது தீவிர ரசிகர்களான சென்னை மக்களுக்கு வெள்ள இடர் நேர்ந்ததையிட்டு மிகவும் வருத்தமடைந்தோம். அவர்களுக்கே இந்த வெற்றியையும் சமர்ப்பிக்கிறோம்.' என்றார். (ம)

# பார்சிலோனா நியூ வலென்சியா ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது



லா லிகா கால்பந்தாட்டத் தொடரில், புள்ளிகளின் அடிப்படையில் முதலிடத்தில் இருக்கும் பார்சிலோனா அணிக்கும் நியூ வலென்சியா அணிக்கும் இடையிலான ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

இரு அணிகளாலும் கோல் கணக்கு ஆரம்பிக்கப்படாத நிலையில் முடிவடைந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியில் (59ஆவது நிமிடத்தில்) பார்சிலோனாவின் நம்பிக்கைக்குரிய வீரராக மாறியிருக்கும் லூயிஸ் சுவாரஸ் கோலொன்றைப் பெற்று, பார்சிலோனாவுக்கு 1–0 என்ற முன்னிலையை வழங்கினார். 1:0 என்ற கோல் கணக்கு நீண்ட நேரமாக நீடித்துச் சென்றது. இதனால் பார்சிலோனா வெற்றிபெறும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் 86ஆவது நிமி டத்தில் நியூ வலென்சியா அணியின் சாண்டி மினா பெற்றுக் கொண்ட கோலால் ஆட்டம் 1:1 என்று சமநிலையில் முடிவடைந்தது. (ம)

## கில்கிறிஸ்டை வீழ்த்திய கலீஸ்

அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள ஓய்வுபெற்ற வீரர்களுக்கான தொடரில் (மாஸ்டர்ஸ் சம்பியன் லீக்) அதிக ஏலத்துக்குச் சென்றுள்ளார் தென்னாபிரிக்காவின் கலீஸ்.

குறித்த தொடருக்கான ஏலம் நேற்றுமுன்தினம் டுபாயில் இடம்பெற்றது. இந்த ஏலத்தில் தென்னாபிரிக்காவின் கலீஸ் ஒரு இலட்சத்து 75ஆயிரம் அமெரிக்க டொலருக்கு ஏலத்தில் எடுக்கப்பட்டார். இதுவே குறித்த தொடருக்கான ஏலத் தொகையில் அதிகூடிய பெறுமதியாகும். இவருக்கு அடுத்த இடத்தில் ஆஸ்திரேலியாவின் கில்கிறிஸ்ட் ஒரு இலட்சத்து எழுபதாயிரம் டொலருக்கும் இங்கிலாந்தின் போல் கொலிங்வூட் ஒரு இலட்சத்து நாற்பதாயிரம் டொலருக்கும் முரளி ஒரு இலட்சத்து இருபதாயிரம் டொலருக்கும் ஏலத்தில் சென்றுள்ளனர். (ம)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 09.12.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.